அகநானூறு வசனம்

(இரண்டாம் பாகம்)

[மணிமிடை பவளம்]

அன்பளிப்பு
எம். [illegible]
17.11.59

ஆசிரியர்:

வே. வடுகநாதன் அவர்கள்

[தமிழாசிரியர் க்ஷத்திரிய வித்தியாசாலை, விருதுநகர்.]

ஒற்றுமை நிலையம்,
8, வியாசராவ் தெரு,
தியாகராயநகர், மதராஸ்-17.

1959

 [விலை ரூ. 2

பதிப்புரை

சங்க நூல்களின் பயனை நன்கு கற்றோரே யன்றி மற்றையோரும் நன்கு துய்த்தல் வேண்டும் என்பதனையே ஒற்றுமை நிலையம் குறிக்கோளாகக் கொண்டு தொடக்க காலம் முதல் சங்க நூல்களை உரைநடை யாக வெளியிடும் பணியை மேற்கொண்டு தொண்டு செய்து வருகிறது. சங்க மருவிய நூலாகிய எட்டுத் தொகையுள் அகநானூற் றின் களிற்றியானை நிரையை முன்னர் வெளியிட்டோம். இப்பொழுது அதன் தொடர்பாக மணிமிடை பவளம் நித்திலக் கோவை ஆகியவைகளையும் வெளியிடு கிறோம். இந்நூல்களைத் தமிழகம் ஏற்று நல்லாதரவு புரியுமென்று நம்புகிறோம்.

எம். இ. வீரபாகு
பதிப்பாசிரியர்

தியாகராய நகர்
16—10—1959

அகநானூறு வசனம்

இரண்டாவது

மணிமிடைபவளம்

121 - பாலை

[தலைமகள் உடன் வருவாளெனக் கேள்வி யுற்ற தலைமகன் தன்னுடைய நெஞ்சிற்குச் சொல்லியது.]

நெஞ்சே! வழிச் செல்பவர்கட்குத் துன்பத்தைச் செய்யும் மழவரது சாகாடு கிழித்துச் சென்ற சுவடாகிய நெறியிலே செல்லும் சாத்தரது சோறுபொதிந்த வெள்ளிய பனையோலையால் ஆகிய குடையினைப் பிரிக்கும் விரைவினை யுடைய சூறாவளி தாக்கலின் எழுந்த ஒலியினைத் தனது துணையின் குரல் என்று எண்ணி அஞ்சிய ஆண்மானானது அப்பிணையை அழைத்திடும் இடங்களையுடையதும் கரிய முகத்தினையுடைய முசுக்களையுடையதுமான காட்டின் கண்ணே;

மிகு வெம்மையை உடைய கோடை நீண்ட மிக உயர்ந்த நெறியில், நாளுந் தன்னுடைய வறுமை மிகக், குளிக்கும் நீராகிய சிறு குளத்தில் தோண்டப் பெற்ற குழியின் கண் உண்ணற் கியலாத கலங்கிய நீரால் கன்றினை யுடைய இளமை வாய்ந்த பிடியின் மெல்லிய தலையை முதலிற் *கழுவிப், பின் எஞ்சிய சேற்றினைக் கொண்டு அளைந்துகொண்ட நிறம் வேறுபட்ட வலிய ஆண் யானை, சிவந்த காம்பினையுடைய வெள்ளிய கொத்துக்களை அசையத் தனது துதிக்கையால் பற்றித் திணவு பொருந்திய தன் முதுகினை உராய்ந்துகொண்டதாய வழியின் பக்கத்துள்ள

வெண கடம்பின் சுருங்கிய வரி வரியாக உள்ள நிழலிலே தங்கி நம்முடன் மிகுந்த மௌனமை வாய்ந்த தோளை யுடைய தலைவி வருவாள் எனபர். இதனைக் கேட்டு நகைப்பினை உடையேம ஆயினேம.

—*மதுரை மருதனிள நாகனார்.*

122 -

[தலைமகன சிறைப்புறத்தானாகத் தோழிக்குச சொலலுவாளாயத் தலைமகள் சொன்னது தோழி சொல்லெடுப்பத் தலைமகள் சொல்லியதூஉமாம்.]

தோழி! மழையை ஒத்த கள்ளினையும ஆரவாரத்தினை யும் உடைய இந்த முதிய ஊரானது, விழா இல்லையாயினும் துயிலப் பெறுதாகும வளம பொருந்திய கடைத்தெருவும், ஏனைய தெருக்களும ஒருஙகே உறங்கி ஒலி அடங்கினும், வலிய ஒலியுடன கூடிய கொடிய சொறகளை உடைய அன்னை உறங்காள் பிணித்தலைக கொண்ட அரிய சிறை யினைப் போன்ற அன்னை உறங்கினும, துயிலாத கணகளை உடையராய ஊர்ககாவலர் விரைந்து சுழலவர். ஒளி பொருந்திய வேலினை உடைய அக்காவலர் துஞசினும், கூரிய பலலினையும வலமாகச சுரிதலுடைய வாலினையும் உடைய நாய குரைககும. ஒலி மிகக வாயினை உடைய நாய் குரையாது உறங்கினும், பகலின ஒளியினைப் போன்ற நிலவினைத் தந்து வானின கண அகறசி வாய்ந்த மதியம் விளங்கிப் பரவும, திங்கள மேற்கு மலையினை அடைந்து மிகக இருள தங்கின, வீடுகளில உள்ள எலியை இரை யாகக கொண்ட வலிய வாயினை உடைய கூகையின சேவல, பேயகள திரியும நளளிரவில் அழிவு உண்டாகக் குழறும. பொந்தில் வாழும அச்சேவல வறிதே உறங்கின; மனையில் தங்கிய கோழிச் சேவல் மாண்பு பொருந்திய குரலை எழுப்பிக்கூவும. ஒருநாள் இவை எல்லாம் ஒழிந்த

காலத்தும நிலைபெருத நெஞ்சினை உடைய நம் தலைவர் வருதலிலர்,

அதனுல், நமது இநதக் களவொழுக்கம், பரல பெய துளள கெச்சை ஒலிகக வேகததால் சிறநது ஆதி என்னும கதியிலே தேர்சசி அடைநது பாயும் செலவினை உடைய நலல குதிரைகளை உடைய திததன் என்பானது மதிலாகிய வேலியை உடைய உறையூரைச் சூழநதுள்ள கறகள நிறைநத காவற புறங்காடு போன்ற பல தடைகளை உடையதாகின்றது.

-பரணா

123 - பாலை

[தலைமகன் இடைச் சுரததுத் தன நெஞ்சிறகுச் சொல்லியது.]

நெஞ்சே வாழிய,

உண்ணுமையாலே வாடிய வயிற்றினையும நீராடாத விரததினையு முடைய தவத்தினர் போல, மலைகள் செறிந்த சிறிய நெறிகளிலே நிரைநது சேரச செலலும, காட்டு யானைகள் அழகு அழியும இடமாய குன்றத்தினைக கடநது பொருள் ஈட்டி வருதலும் செயதிலை; சிறப்புற்ற சில வாகிய ஐம் பகுதியையுடைய கூநதலை உடைய நம் தலைவியின நலல ஆகத்தில் பொருநதி மனையில் தங்கி விடினும வறுமையை அஞ்சா நின்ருய்; சுர நெறியில் சென்று ஈட்டிவரும் பொருளுக்காக, நிலவுபோல் கூரிய இலை விளங்கும் நெய்ம்மிக்க நெடிய வேலினையும், கரிய மேகம் போன்ற நிறமுடைய பல கிடுகுகளை முடைய பெரிய வள்ளல் தன்மை வாய்ந்த சோழருடைய, ஓடக் கோலும் மறையும் நீத்தத்தை யுடைய காவிரி கடலில் மண்டும் பெருந் துறையின் கண்ணே இருமீனெடு வந்து மாலையோடு மீளும் பெரிய கடல் நீர்போலப் போதல்

ஒழிதல் எனனும் இரண்டிடுனுறில் உறுதி கொண்டிலை;
நீ வருநதுதலை உடையை யாவாய

—காவிரிபபூம பட்டினத்துக் காரிக்கண்ணனூர

124 - முல்லை

[தலைமகன தேர்பபாகற குரைத்தது.]

பகைவா நல்ல அணிகலகளைக கொண்டுவநது அவறறை யானையொடு திறையாகக கொடுதது வணஙகிய பணிமொழி கூறிசசெனறருள்க எனபாராயின் நம அரசனும் பார மிகுதிபால உலகினை வருததுதல செய்து திரணட சேனையுடன இனறே தன் ஊாக்கேகல பெரிதும் உணமையாகும. மாடஙகளால சிறப்புப் பொருந்திய நமது மாளிகையில பெருமை அமைந்த படுககையின் கணணுள்ள, வெறுபபுற்ற கொளகையினை உடைய நம தலைவி இனிமை உறவும், நமக்குப் பாசறைக்கண் மேவிய வருததஙகள் ஒழியவும், பாகனே நீயும், மினனல பரந்து விளஙகினுல போனற ஒளியினையுடைய, பொனனுலியன்ற அலஙகரிககபபட்ட கலனையும, கொயயப பெற்ற பிடரி மயிரினையும செலுததும கைவிருமபும விளக்கம் அமைநத செலவினையும உடைய குதிரையை, செலுத்துங் காலததே, வளம் மிகக மழையால மலாநத பசிய முல்லைக கொடியின் மலா மணககும நெடிய வழியில் ஊதும் வணடுகள இரிநதோட, அநதிககாலததே இடையரது அழகிய குழலின ஒலிககும இசை நிலா முற்றமாகிய அகனறவிடததே வநது ஒலிககும். வரிசையாக நிற்கும் கூடடுககளையுடைய நீணட மதில் சூழ்நத ஊரின்கண் மாலைப போழ்தில நாம எய்தடச செலுத்துவாயாக.

—மதுரை அறுவை வாணிகன இள வேட்டனார்

125 - பாலை

[தலைமகன் வினைமுற்றி மீண்டமை யுணராத தோழி தலைமகட்குச் சொல்லியது]

இரவம் வித்தினை ஒக்கும் அரும்பு முதிர்ந்த ஈங்கையினது ஆலங்கட்டி போலும் வெள்ளிய பூக்கள் தாவ, கூரிய வாயினையுடைய ஓந்தியின் கரிய தாடியை ஒத்திட்ட தாது மிக்க குவளையினபோது பிணிப்பு நெகிழவும், உறங்காத பசிய கண்ணினையும் பரந்த அடியினையும் பெரிய வாயினையும் உடைய மதம் ஓய்ந்த யானையைப் போல நீரினைப் பெய்து வறுமை எய்திய பொங்கிய செலவினை உடைய மேகம் கருமை பொருந்திய வானின் திசைகளில் திரியவும், பனி நலிகின்ற நடு இரவின் இருளில் தனிமை எய்தியவர் பொறுக்கும் வலியளவை ஆராயாது மாறுபாடு இல்லாத காலத்தும் வெறுக்கும்படி தண்ணென்று வீசி அலைக்கின்றாய்,

முற்றுப் பெறாத இல்வாழ்க்கையை முற்றுவிக்க வேண்டி அரத்தால் பிளக்கப்பட்ட அழகிய வளையல்கள் எம் தோளிலே நிற்றலின்றி நெகிழ்ந்து வீழ, கையால் தொழும் மரபினையுடைய கடவுள் தன்மை நிரம்பிய, ஒதல் வினையிடத்துச் சென்ற தலைவர் விரைந்து வருவரேல், வாடையே! விரிந்த தலையாட்டத்தால் சிறந்து விரைந்த செலவினையுடைய நல்ல குதிரைப் படையுடன் கூடிய, பகைவர்க்கு அச்சத்தை உண்டாக்கும் சேனையுடன் தான் விரும்பும் புலத்தில் தங்கிய பெரிய வளத்தை உடைய கரிகால் வளவன் முன்னிற்றலை ஆற்றாராய், வாகைப் பறந்தலை என்னும் போர்க்களத்தின் கண் அவன் வெற்றி பெற, தமது ஒன்பது குடைகளையும் நன்றாகிய பகலில் போட்டுச் சென்ற பெருமை இல்லாத ஒன்பது அரசர்களைப் போல, நீ எமக்குத் தோற்றும் மிகவும் விரைந்து ஓடுவை.

—*பரணர்*

126 - மருதம்

[க. உணர்ப்பு வயின் வாரா ஊடற்கண் தலைமகன் தன்னெஞ்சிற்குச் சொல்லியது. உ. அல்ல குறிப்பட்டுழிந்ததுமாம். ங. தோழியைப் பின்னின்ற தலைமகன் தன் னெஞ்சிற்குச் சொல்லியதுமாம்.]

கிளிபோல மென்மையான சொற்களைக் கூறும் சிவந்த வாயினையும், பெரிய கயல் மீன் என்னுமாறு ஒன்றை யொன்று பொருந்த மையுண்ட கண்களையும், மேகம் எனும்படி முதுகில் தாழ்ந்து இருண்டு விளங்கும் கொத் தாய ஐந்து பகுப்பை உடைய கூந்தலையும், மின்னலைப் போன்ற இடையினையும் உடைய, இளைய தலைவியின் பின்னே தாழ்ந்து நிற்றலை விடாத அறியாமை மிக்க நெஞ்சே!

நீ நின் எண்ணங்களை உண்மையானவை எனக் கருதிப் பலவும் எண்ணி மிகப் பெரிய துன்பத்தினை யுடையையாய் வருந்துதல் அல்லாமலும், மலை உச்சியி னின்று தொடர்புற்று வீழ்ந்த மிகச் செல்லுதலையுடைய வெள்ளத்தால், முதல் நாள் பூத்த சிறந்த மலர் குளிர்ச்சி பொருந்திய துறைகளில் விளங்க, கடற்கரையினைக் கரைத் திடும் காவிரியாய பெரிய ஆற்றினது கருமணல் ஒழுகும் நீண்ட மடுவின் நிலைகொள்ளாத நீர் கலங்குமாறு, கரிய இருளினையுடைய நடு இரவில் சென்று, தன் தமையன்மார் விடியலிற் கொணர்ந்த திரண்ட கோடுகளை உடைய வாளை மீனுக்கு விலையாக, அழகிய வளைந்த உந்தியினையும் அழகிய சொற்களையும் உடைய பரண்மகள், நீண்ட கொடிகள் அசையும் கள்மிக்க தெருவில், பழைய செந் நெல்லை முகந்து தருதலைக் கொள்ளாளாகி, கழங்கினைப் போன்ற பெரிய முத்துக்களுடன் சிறந்த அணிகளையும் பெறும், வளம் மிக்க ஊர்களையும், பலவேற் படைகளை

யும உடைய எவ்வி எனபான், நீதியை உட்கொண்ட சிறநத மொழிகளைக கூறித தணிககவும தணியாளுகி, பொனபோலும கொத்துக்களாலாகிய நறிய மலாகளை உடைய காவல மரமாகிய புனனையைக குறைகக விரும்பி, திதியன் எனபாளுேடு போரிட்டிறநத அன்னி என்பானைப் போல நீ இறநது படுவை போலும.

—நககீரர்

127 - பாலை

[பிரிவிடை ஆற்ருளாகிய தலைமகளைத தோழி வற்புறுத்தியது]

தோழி வாழி;

விளங்கும கைவளை கழல மெலிநது நாளும் கலங்கும் துன்பததால் வருந்தி நாம் இஙகே தனிததிருகக, சிவந்த கொமபுகளையும கரிய அடியினையும் உடைய வெண கடம்பின் வெளளிய மெலலிய பூங்கொததினை, சுரிநது வளைநத தலைமயிா அழகு பெறச சூடி, அறிவிலலாத மழவா வில்லினை இடபபககததே தழுவிககொண்டு வழி வருவோரைப் பார்த்திருக்கும் அச்சநதரும கவர்தத வழிகளையுடைய மொழி வேறுபட்ட நாட்டில் உளளாா ஆயினும், வெற்றி பொருந்திய முரசினையுடைய சேரலாதன எனனும் அரசன் கடல் நாப்பணுள்ள பகைவர்களைப் புறக்கிடச் செயது அவர் காவல் மரமாகிய கடம்பினை வெட்டி, இமய மலையில தமது முனளுேரைப் போன்று வளைந்த வில் இலச்சினையைப் பொறித்து, மாந்தை என்னும் ஊரில் உள்ள தனது மனையின் முற்றத்து, பகைவர் பணிநது திறையாகக் கொடுத்த பெருமை பொருந்திய நல்ல அணிகலன்களுடன், பொன்ளுல் செய்த பாவையினையும் வயிரங்களையும ஆம்பல எனும் எண்ணளவு இடம் நிறையக் குவித்து அக்காலத்தே அவ்விடத்தே நிலம் தின்னும் படி விட்டொழித்த நிதியம் போன்ற பொருளை ஒருநாள்

ஒரு பகற பொழுதில பெறறுலும, குற்றமறற நம காதலர் தாம சென்றுள்ள நாட்டில பிறறை ஞான்று தங்காது வருவா.

—மாமூலனார்

128 - குறிஞ்சி

[இரவுக்குறி வந்த தலைமகன் சிறைப புறத் தானாகத தலைமகள தோழிக்குச சொலலுவா ளாயச சொலலியது.]

தோழி வாழி,

அமபலம ஒலி அடங்க மனைகளும் துயின்றன. கொலை செயவன்தப போன்ற கொடுமையுடன் இன்று நடுயாமம பொருந்தவரின காமம செறிந்து கடலைக காட்டிலும பரவிக கரைகடந்து செல்லும; நாம் இந்நிலை யினம ஆகவும நமது நலல நெஞ்சம் மயங்கலுற்று என்னையும நினனையும உசாவி உணராது கை கடந்து. சிறு காடாய் இருண்ட சிறிய செல்லற்கரிய பக்க மலையின கண்ணுள்ள குறிய சுனையில பூத்த குவளைப் பூவினை வண்டு மொய்த்திடச் சூடி, காட்டு நாட்டினையுடைய நம் தலைவன வருகின்ற யானையின் முதுகில் உள்ள கயிற்றுத் தழுமபைப போன்ற மலைமீதுள்ள சிறிய வழியாகிய, மேகம மழை பொழிதலால் நீர ஒழுகா நிறகச செலலுநற கரிய சிறிய இடங்களில உள்ள படு குழிகளைககொண்ட வழியில் இருளின் கண மிதிக்கும இடத்துப பார்த்து அவரது தளருகின்ற அடியைத தாங்கும பொருட்டு இன்று சென்றுவிட்டது; இஃதெனனையோ!

—கபிலர்

12? - பாலை

[பிரிவிடை வேறுபட்ட தலை மகட்குத் தோழி சொலலியது]

அழகிய சிலவாகிய கூந்தலையும, ஆராய்ந்த அணிகளை யும் உடைய தலைவியே! இவளைப் பிரிந்து சென்றபின்,

இவளை எண்ணி நாம் இரங்கல வேண்டிவரும் என்று நினைத்து, நள்ளென்னும் ஒலியினையுடைய நடு இரவில் நடுங்கும் துணையினரான நம தலைவர், புலலைத் தின்னுதலை மறந்து அசையும் நெடிய மூங்கிலினின்று உதிர்ந்த நெல் லைப் பார்த்துக கலைமான் தன பிணையினை அழைக்கும் காட் டிடத்தே பாறையைச் சேர்ந்திருந்த சிதைவுற்ற குடிலில், தாழியிடத்தே தழைத்த கொழுவிய இலையையுடைய பருத்திச் செடியின இளங்காயைப் பேண்டகட்கு அருத்தி, ஆண பறவைகள் பிளந்து போட்ட பஞசினையுடைய வெள்ளிய கொட்டையை, வறுமை உடைய மகளிர் வைத்துண்ணும உணவாகச சோகும், கலங்குவதற் கேதுவாகிய போர் நிகழும இடங்களை உடைய சிறிய ஊரில உள்ளவர்கள கையைத தலைமீது வைத்து அலற, அவர்களுடைய கொழுத்த பசுக்களைக கவர்ந்து சென்று கொன்று தின்ற கூரிய படைகளை உடைய மறவர்கள செருப்பினைப் பூண்ட அடியராகித் தெளிந்த சுனை நீரைப் பிருதியாகப் பருகும அரிய சுர நெறிகடந்து, நீண்ட கோல தொழில அமைந்த வளையலையும், திருந்திய அணிகளையும மூங்கில போன்ற தோளினையும தேன மணக்கும் கூந்த லினையும், கருங் குவளை போன்றமையுண்ட கண்களையும் உடைய இவளுடன செலலுதற்கு அருமை உடையன அலலவென்று நமக்குத தமது உள்ளக்கருத்தினை வாய் விட்டு மொழிந்தனர், ஆகையால், நின்னைமறந்து வேற்று நாட்டுத தங்குதல எங்ஙனம கூடும்?

—குடவாயிற்கீரத்தனர்

130 - நெய்தல்

[*கழறிய பாஙகற்குத் தலைமகள் கழற் றெதிர் மறுத்தது*]

பாங்கீர், யான் கூறுவதைக் கேட்பீராக; வாழி! நுண்ணிய பூந்துகளால் மூடப்பட்ட சிவந்த தண்டினை யும் கொழுவிய மொட்டினையும் உடைய சுழிமுள்ளி

பொருந்திய உயர்ந்த மணல் அடைந்த கரையிடத்தே, பேய போலும் தலையினையும சருச்சரை வாய்ந்த அரையினையும் உடைய தாழையின முள்ளாகிய பறகளை உடைய நீண்ட புற இதழ்கள் பலவும ஒருங்கே காத்து நிறக, அதன அகட்டினை இடமாகவுடைய பூ தாயதாக விரிந்து புலால நாற்றத்தைத் தாக்கி அழித்த மலர்நாற்றம் கமழும இடத்தின கண, பரக்கும் அலைகள கொணர்ந்து வீசிய குளிர்ந்த ஒளியினை உடைய முத்துக்கள், விரும்பும நடையினை உடைய குதிரையினது காலினை வடுச்செய்து அதன செலவினைக கெடுக்கும, நல்ல தேரை உடைய பாண்டியனது கொற்கை யென்னும பதியின் கடற்கரைக கண்ணுள்ள, வண்டுலை வாய திறக்கப் பெற்ற வளைந்த கழியிடத்திலுள்ள நெய்தற் பூவானது, புறங் கொடுத்த அழகிய ஒளி பொருந்திய முகத்தின கண்ணுள்ள மையுண்ட கண்களது செருக்குய பார்வையினை முன்னே நின்று கண்டராயின இங்ஙன கழறிக கூறீர.

—வெண்கண்ணனார்

131 - பாலை

[பொருள் கடைக கூட்டிய நெஞ்சிற்குத தலைமகள சொல்லியது]

நெஞ்சமே!

வானை அளாவ உயர்ந்த கரிய அடியினை உடைய இகணை மரத்தினது பசிய நிறமுடைய மெல்லிய இலைகளை நெருங்கச் செறித்து வைத்தாற போன்ற வண்டு மொய்த்து இருண்ட தாழ்ந்த பெரிய கூந்தலையும், வண்டுகள் தேன் உண்ணும்படி மலர்ந்த மலர்களால ஆய பெரிய குளிர்ந்த மாலையையும உடைய இத்தலைவியினும் நமக்கு ஈதலே சிறந்தது என்று, சீழ்க்கை போலும் ஒலியுடன் செல்லும அம்பினது தப்பாத தொடையினை உடைய வெட்சிமறவர் விடியற காலையில் பசுக்களைக் கவர்ந்து

கொண்டு போன அச்சம் தரும கொடிய சுரநெறியிலே, நெடுந்தூரம் நடந்து வருதலின நடை ஓய்ந்துவிட்ட கன்றினது, கடைக கண்ணினின்றும் ஒழுகும நீரைத் துடைத்த சுரந்தையோரது பெயரும சிறப்பும பொறித்து மயில் தோகையினைச். சூட்டி விளங்கும நிலையினை உடைய நடுகல்லின முன், ஊனறிய வேலும அதன்கண் சாத்திய கேடகமும செலலும வழிதோறும பகைவர் போாமுனை யிருபபை ஒககும அச்சம தரும இயலபினை உடைய காட்டில எனனோடு வருக எனபையாயின, யான் வருவேன அல்லேன; நீ மேற்கொண்ட வினை வாய்பதாக.

—மதுரை மருதனின நாகனூர்

132 - குறிஞ்சி

[தோழி தலைமகளை இடத்துய்த்து வந்து தலைமகனை எதிர்பட்டு நின்று வரைவு கடாயது.]

நுணணிய தொழில் திறம அமைந்த பூணணிந்த மார்பனே! தினையும முதிர்ந்து வளைந்த கதிர அறுக்கப் பெற்றன. இவள நெற்றியும காம நோய் மிகுந்தமையால் ஒளி பொருந்திய அழகு தொலையப் பெற்றது. இவ்வூரா ரும் அதனை நோக்கி இமையில்லாதன கூறுவர். ஆதலால், களிற்றி யானையின் மதம் பொருந்திய கன்னத்தையுடைய முகத்தைக் கிழித்த அம்பினையும், வெள்ளிய கொழுப்புடன் கூடிய உணவினையும உடைய வேடர்களது தங்கையும் அழகிய மூங்கிலைப் போன்ற மெல்லிய தோளினையும், அழகிய இமையுடன் கூடிய குளிர்ந்த கண்ணினையும், அசையும் இயலினையும் உடைய கொடிச்சியுமாகிய இவளை அருள் செய்தாய் ஆயின், வாமை மழைத்துளியை முதற் கண்ணே பெய்த பக்க மலையிலே பெரிய சுனைக கண்ணே குவிந்த அரும்பினை விரித்த குறுகிய சிறையினவாய வண்டு

களை வேங்கையின் விரிந்த பூங் கொத்துக்களில் தாதினை ஊதிக் காந்தளின் தேன் பொருந்திய குவிந்த குலையில் உறங்கி, யானையின் பெரிய கன்னத்தில் ஒழுகும் மதத்தினை உண்பதாகக் கருக் காணும் பெரிய மலையைச் சூழக் கொண்ட உறைதற்கு இனிய நுமது ஊர்க்கு வரைந்து கொண்டு செல்வாயாக.

—தாயங்கண்ணனார்

133 - பாலை

[பிரிவிடை ஆற்றாளாயினள் எனக் கவன்ற தோழிக்குத் தலைமகள் ஆற்றுவல் என்பது படச் சொல்லியது]

தோழி, சிவற்பறவையின் காலில் உள்ள முள்ளை ஒத்த அரும்பு முதிர்ந்த வெட்சிப்பூக்கள், வெட்டி பண் படுத்திய கொல்லை நிலத்திலுள்ள குருந்த மலர்களோடு கற்பாறையிலே பரந்து கிடக்கும் மிளை என்னும் நாட்டின் பாலை நெறியின் ஈரமுடைய மேட்டு நிலத்தே தழைத்த வரிகளையுடைய மரலைக்கடித்து உண்ணும் மடப்பத்தையுடைய பெண்மானுடன் கூடிய முறுக் குண்ட கொம்பினையுடைய ஆண்மான்களையுடைய காட் டினைக் கடந்து சென்ற நம் தலைவர், குன்றிமணி போன்ற கண்களையுடைய நல்ல நிறம் வாய்ந்த மயிரையும், மெல் லிய கால்களையும் தாடியினையும் உடைய ஆண் வெள் ளி சிவந்த பரல்கள் மிகுதியாக உடை வன்னிலத்தில் கிளறிப்போட்ட புழுதியில் மணநாளை அறிவிக்கும் இயல் புடைய வேங்கைப் பூக்கள் உதிர்ந்து சிறந்த வெறியாடு களம்போல அழகு செய்ய, கார் காலம் கூடியதால் பசிய முட்புதர்களையுடைய முல்லை நிலத்தே வில்லினால் அடிக் கப்பட்ட பஞ்சுபோல வெளியே மேகம் தவழ்ந்து எழும் புதுக் கொல்லைகளையுடைய சிறிய மலையின் பக்கவில் கரிபரந்தாற் போன்ற காயாவின் வாடற்பூக்களோடு

நெருப்புப் பரந்தாற் போன்ற இலவம் மலர்கள் கலக்கு அப்பூக்களின் ஒழுக்குதலைச் சுமந்துவரும் இனிய புனலையுடைய காட்டாற்றின் கண்ணே காற்று எழுப்புதலின் மேலே எழும் துளிகளையே உணவாகிய எம்முடன் வருதற்கு வன்மையுடையையோ என்று பெருமை தங்கிய ஒருமொழியினைக் கூறி வினவினா. (ஆதலின் விரைந்துவந்து உடன்கொண்டு செலலுதலும் கூடும்.)

—உறையூர் மருத்துவன் தாமோதரனார்

134 - முல்லை

[வினைமுற்றி மீண்ட தலைமகன் பாகற்கு உரைத்தது]

பாகனே! நமது விரைந்த குதிரைபூண்ட தேரின் ஒலியினைக் கேட்டால வாழையின் பெரிய பூமடல்கள் முறையாக முற்றி உதிர ஏஞ்சிய குவிந்த மொட்டும் ஒழிந்த குலையினை ஒத்த முறுக்கிய கொம்பினையுடைய மானேற்றுடன் திரண்ட காலினையுடைய அழகிய பெண் மானினது விருப்பம் பொருந்தும் நிலையினதாகிய நன்னிரவின் கூட்டம் நிகழ்தலும் கூடுமோ? (கூடாதாகலின்) நிறைந்த சூலினையுடைய கரிய மேகங்கள் கார்காலத்தினைத் தந்து தங்கிற்றாக மழை தப்பாது பெய்தலால் காடு அழகு பெற்று நீலமணியைப் போன்ற காயாவின் அழகிய மலர்களின் இடையிடையே சிவந்த புறத்தினையுடைய இந்திர கோபப் பூச்சி பறத்தலோடு முல்லையினின்றும் உதிர்ந்த நன்றாகிய பல பூக்களும் பரந்துகிடத்தலால் ஓவியம் வல்லோன் செய்த ஓவியம் போன்ற சிவந்த நிறமாகிய முல்லை நிலத்தே தாவிச் செல்லும் தாளச் சீர் விளங்கும் நடைவாய்ந்த செருக்கிய குதிரையின் தாவிச் செல்லும் இணையொத்த கால்கள் மெதுவாக நடக்கும்படி தாற்றுக் கோலால் குற்றுதலை மறந்து செலுத்துவாயாக.

—சித்தலைச்சாத்தனார்

135 - பாலை

[தலைமகன் பிரிவினகண வேறுபட்ட தலை
மகள தோழிககுச சொறறது.]

காதலையுடைய அழகிய தோழியே! நம் காதலர் காயும ஞாயிறு தாககுதலால அசையும் தளிரையுடைய இருபபை மரததின இதழ குவிநத வெள்ளிய பூககள யானைத தநததததால கடைநது செயத கழாஙகுபோல பாறைமீது பரவிக கிடககும காடுகடநது சென்றனா ஆதலின அவரைபபிரியாா என்று தெளிவு அடைநதிருநத எனமனம, அடுமபோரினையும நீஙகாத சிறநத புகழினையும் வானை அளாவிய பெரிய குடையினையுமுடைய கழுவுள் எனபானுடையதும பதினான்கு வேளிர் ஒருஙகு கூடித் தாககியதுமாகிய காமூரைப போன்று கலஙகா நின்றது; தேமலுடன கூடிய எனது மாமைநிறமும தளா போலும அழகும கெட்டொழியப புதாகளில படர்ந்த பீாககினது புதிய மலரை ஒககப பசலைபரநத நெறறியை யுடையேனுகி ஓவியம வலலாா பாாதது எழுதுதறகு அரிய அழகிய குளிாநதகண அழத துன்பம் பெருகி ஆதிமந்திபோல அறிவு திரிநது யான் மயஙகியுள்ளேன.

—பரணர்

136 - மருதம்

[உணாபபுவயின வாரா ஊடறகண தலை
மகன தன னெஞசிறகுச சொலலியது.]

நெஞசே, குற்றம நீஙக இறைச்சியுடன் கூட்டியாக்கிய நெயமமிகக வெள்ளிய சோறறை வரைதலில்லாத வள்ளன்மையுடன் உயர்ந்த சுற்றத்தாா முதலாயினரை உண்பிதது, புள்நிமிததம இனிதாககக்கூடத் தெள்ளிய ஒளியையுடைய இடமகன்ற பெரிய வானம் களங்கமற விளஙகுதலுறத் திஙகளை உரோகிணி கூடிய குற்றமற்ற

நனஞட்சோககையில மணமனே அழகுறுததிக கடவுளே வழிபட்டு ஒலிககும மணமுழவுடன பெரிய முரசம் ஒலிககத தலைவிக்கு மணநீராட்டிய மகளிா தமது கூரிய கணகளாலும இமையாராய் நோக்கி விரைநது மறைந்திட மெலலிய பூவையுடைய வாகையின புலலிய புறததினே யுடைய கவாத்த இலையை முதிய கன்று கறித்த பள்ளத தில படாநத அறுகினது ஒலிககும குரலையுடைய மேகத் தின் முதற் பெயலால ஈன்ற கழுவிய நீல மணியை ஒத்த கரிய இதழையுடைய பாவை போலும கிழங்கிடத்துளள தண்ணிய நல்ல அரும்புடன் சேரககட்டிய வெளளிய நூலைச சூட்டித் தூய உடையால பொலியச செய்து விருப்பம உண்டாக நெருங்கி மேகம ஒலிததாறபோன்ற மண ஒலிமிகக பநதலிலே அணிகளே அணிவிதத சிறப்பி ஞேடு தோனறிய வியர்வையாறறிச் சுற்றததாா நமகக்குத் தந்த முதல் நாளிரவில வெறுப்பு நீஙகிய கறபினேயுடைய என உயிாககு உடமபாக அடுததவள கசஙகாத புதிய ஆடையாள உடல முழுதும போாத்தியதால் மிகக புழுக் கததை எயதிய மனது பிறைபோன்ற நெறறியில் அரும பிய வியாவையை மிகக காறறுப் போககிடச் சிறு பொழுது திறவாய் என்று கூறி அன்பு மிகுநத நெஞ்ச மோடு போர்வையைக கவர்தலின் உறையினின்று எடுதத வாளைப்போல அவள் உருவம வெளிபபட்டு விளங்க மறையும் வகை அறியாதவளாகி ஆம்பற்பூவின் முறி நகப் பட்ட இதழ்களால ஆய பருத்த நிறம் பொருநதிய மாலையை நீக்கி வண்டுகள் ஒலிக்கும் ஆராய்ந்த மலரினைச் சூடிய பெரிய பலவாய கூந்தலின இருளால் மறைத்தற் குரிய உறுபபுககளே மறைதது விரைவாக நாணி விருப்பம் அடைந்து இறைஞ்சினுள் : (அத்தகையாள் இன்று நாம் பல கூறியுணர்த்தவும் உணர்ந்து ஊடுகின்ருள் ; இவள் என்ன உறவினள் நமக்கு !)

—*விறறூாறறு மூதெயினஞர்*

137 - பாலை

[தலைமகன் பிரியுமெனக் கருதி வேறுபட்ட தலைமகட்குத் தோழி சொல்லியது]

சுரநெறியில் செல்லும் புதியர் சேற்றைக் கிண்டி ஊறிய நீரையுண்ட சிறிய பலவாய கேணிகளைத் தன் பிடியின் அச்சுவடென விரும்பி களிறுகள் தொட்டுப் பார்த்துக் கடந்து செல்லும் காட்டாற்றினையுடைய அச்சுர நெறியில் சென்று சோதலை நம் தலைவர் இசையாராயினும் பகைவரை வென்று அடிக்கும் முரசினையும் போர் வென்றியும் உடைய சோழரது இனிய கடுப்புமிக்க கள்ளினையுடைய உறையூரிடத்து வருநீர் உடைத்திடும் கரைந்து மெலிந்த கரையினையுடைய பெரிய ஆறாகிய காவிரியின் அழகிய வெண்மணல் நிறைந்த தேன்நாறும் குளிர்ச்சி பொருந்திய பொழிலில் பங்குனி விழாக் கழிந்த பிற்றைநாளில் பூக்களுடன் கூடிய இலைகள் நிறைந்த மரங்கள் அடர்ந்த சிறுகாட்டில் அடுதல் இன்மையின் தீயிலலையாகி வெற்றடுப்புக்களையுடைய விழாக்களம் போல உனக்கு நெற்றி பெரிதும் அழகற்ற நிலையினைக் கொண்டது, துளையிடாத புதிய முத்துக்கள் விளையும் தெளிந்த கடலையுடைய வீரனைக் திண்ணிய தேரினையுடைய பாண்டியனது பொதியலின் பக்க மலையில் உள்ள நல்ல அழகிய நெடிய மூங்கிலை ஒக்கும் நின் தோளும் பழைய அழகு கெட்டன, யான நோவேன.

—உறையூர் முதுகூத்தனார்

138 - குறிஞ்சி

[தலைமகன் சிறைப்புறத் தானாகத் தோழிக்குச் சொல்லுவாளாயத் தலைமகள் சொன்னது.]

அன்புடைய தோழியே! கேட்பாயாக;

நெடுநாளாக நின்னொடு கடிந்து வரைந்துகொள்வேன் எனத் தெளிவித்து வந்த நல்ல மலைநாட்டையுடையனாகிய நம் தலைவன் இரவுக் குறிவரும் நடு இரவில் அவர் வரும் குன்றின் உச்சியில் வழி தவறுமாறு செறிந்த அணுகுதற்கு அரிய மிகக இருளிலே தனது அழகிய முடிமணியை உமிழ்ந்த நாகமானது காந்களது கொழுவிய மடலையுடைய புதிய பூவினை ஊதித்தாதினை அளைந்த வண்டின் நல்ல நிறத்தினைக்கண்டு தன் மணியென மயங்கும் அரிய பிளப்புகளையுடைய இன்னாத நெடிய வழியை என் மனம் நினைந்து கவலும், அதனால் குவளைப் பூவைப் போன்ற எனது மையுண்ட கண்களில் தெளிந்த நீர் ததும்பியான சிறிது வருந்திய துன்பத்தினைக் கண்டு நமது அன்னையானவள் இது தெய்வத்தால் ஆயதோ எனும் வேறோர் ஐயமுற்றனளாக, கட்டு விச்சியும் வேலனும் வேம்பினது நாற்றமுடைய பசிய இலையுடன் நீலப்பூக் களைச் சூடி மாறுபட்டபகைவரை வென்ற கடல் போலும் சேனைகளையும் திருந்திய இலையினைக் கொண்ட நெடிய வேலையுமுடைய பாணடியனது பொதிய மலையில் அடைதற்கரிய உச்சியினின்றும் இழியும் ஒலிமிக்க அருவியின் ஒலிபோல ஒலிக்கும் சீரையையுடைய இனிய வாச்சியங்களை ஒலித்துக்கையால் வணங்கி, அச்சம் தோன்றும் தலைமையையுடைய முருகனை முன்னைக்கண் வருவித்து அவனது கடம்பினையும் களிற்றினையும் பாடிப் பனந்தோட்டினையும் கடப்ப மாலையையும் கையிற்கொண்டு அணிந்து ஆடுதல் நன்றாமோ.

—எறைப்பன்றி நாகன் குமரனார்

139 - பாலை

[பிரிவிடை மெலிந்த தலைமகள் தோழிக்குச் சொல்லியது.]

அகன்ற நெற்றியையுடைய தோழியே, மேகம் உறங்குவது போல இருண்டு கண் இமைப்பது போல விளக்கமின்னி நீரைக் கொண்டு மேலேறுவது போல ஒலிமிக்குப் பரந்து நிலத்தின் உள்ளம் துணுக்குற ஒழியாது இடித்து, மிகுந்த நீரைச் சொரிந்த நீண்ட பெய லைக்கொண்ட கார்காலத்தின் கடைநாளில் பெய்து நாள் கழிந்த தூய்மையில்லா வெள்ளிய மேகம் வானையளாவிய உயர்ந்த மலையில் தவழும் வைகறையாகிய புதல்கள் ஒளியால் சிறந்த காண்டற்கு இனியவாகும் காலத்தே, குளிர்ந்த நறிய குளத்தின் நீரை நிறைய உண்டு அருகம் புல்லை மேயும் வெள்ளிய புறத்தினையுடைய திரிந்த கொம் பினையுடைய ஆண்மான் நீண்ட மணலின் ஒரு பக்கத்தே மலர் விரிந்த பிடவினது கொழுவிய நிழலிலே அழகிய தன் பிணையுடன் இன்பம் பொருந்தத் தங்கும் செவ்வரக்குப் போன்ற நிறத்தினையும் அழகினையும் உடைய தம்பலப் பூச்சிகள் பரப்பி வைத்தாற் போலப் பலவும் ஒருங்கே பரந்து நீரொழுகிய ஈரமுடைய இடத்தில் அழகுடன் விளங்க இன்னும் நமது காதலர் வந்திலரேல் அவரது நினைவு என்னையோ? அவர் மீண்டும் வருவோம் என்று கூறியது தொகுதியையுடை மேகங்கள் இடிகளைக் கொண்ட இந்தப் பருவமன்றோ!

—இடைக்காடனார்

140 - நெய்தல்

இயற்கைப் புணர்ச்சி புணர்ந்து நீங்கும்
தலைமகள் பாங்கற் குரைத்தது]

பெரிய கடலில் மீன் வேட்டை செய்யும் சிறு குடியில் வாழும் பரதவர் பெரிய உப்பங்கழியாகிய வயலில் உழாமல் விளைவித்த வெள்ளிய கல் உப்பின் விலை கூறி ஞாயிற்றின் வெம்மையால் ஆய பிளப்புக்களை உடைய குன்றங்களைக் கடந்து போகும் எருதுவினை விரையத்

தூண்டும் கோலகளை உடைய உப்பு வாணிகரது காதலை உடைய இளைய மகளை சிலவாகிய திரண்ட இலங்கும் வளைகள் ஒலிகக வீசி, நெல்லுககு ஒத்த அளவினதே வெளளிய கல் உபபு எனறு சேரியில பணட மாறறலாகிய விலை கூறலின, ஒலிவேறறுமை அறியும் மனையில உள்ள நாய வேறறுக குரல எனறு குரைத்து வர, அதறகு அஞசிய மதாததகயல் இரணடு எதிாததுப் பொருவது போனற அவள் கணகள், எமககு, புதுககொலலை ஆககி முயலும குறவன மரஙகளைச் சுடடெரிககும் தீயின் நிழலை ஒககும.

கரிய பழஞ் சேற்றிலே அழுந்திய பண்டியின் இடை யூறு நீங்க வருந்தி இழுககும அவள் தநதை கையிற பறறிய பகடு போல வருநதி வெய்யவாகிய உயிாத்தலைச் செய்யும் நோய் ஆகின்றது.

—அமமூவனார்

141 - பாலை

[பிரிவிடை ஆறறாள எனக கவனற தோழிககுக கிழத்தி உரைத்தது.]

தோழியே!

நான் கூறுவதனைக் கேட்பாயாக. ஒவ்வொரு இரவும கனவு இனிய தன்மை உடையதாக இருககினறது நனவிலும புனையப்பெறற தொழில்களை உடைய நல்ல மனையில புள் நிமித்தஙகள் நல்லனவாக இருககின்றன. என் உள்ளமும் சுருஙகாது விருப்பம மேவி அமைதி பெற்று இருக்கும்;

முற்ற உலாந்து தூயமலர்கள் நெருங்கப் பெற்று மயிர்ச் சாந்து மணக்கும் தண்ணிய நறிய கூந்தலை உடைய புதிய மணமகள் உணவு மிக்க மண மனையில் பல புடை களை உடைய அடுப்பில் பாலை உலையாக வார்த்துக் கூழை

யாகிய கூந்தலையும சிறியவளையலையும உடைய இளைய மகளிருடன பெரிய வயலில விளைந்த நெல்லின வளைந்த கதிரினை முறித்துப பசிய அவலாகக குற்றும கரிய வயிர மாய உலக்கையின விரைந்த இடிக்கு அஞ்சிய நிறைந்த சூலினை உடைய வெள்ளிய பறவை, இனிய குலையினை உடைய வாழையின உயர்ந்த மடலில இராது நெடிய காலினை உடைய மாமரத்தின கண் குறுகப்பறந்து செல்லும் பதியாய கெட்ட குடிகளைத் தாங்கிய புகழை யும வெல்லும போரையும உடைய கரிகால் வளவனது இடையாற்றினைப் போன்ற நல்ல புகழ் வாய்ந்த செல்வத் தினை ஈட்டிவர, மலையிடத்துள்ள வேங்கை மரத்தின பல புள்ளிகளை உடைய புலியின நிறத்தினைப பொருந்திய பூக்களின் இடையே பெரிய கிளையினை உடைய நாரத்தை மரத்தின நறிய அழகிய புதிய மலர்கள உதிரக குரங்குகள் பாய்ந்து தாவும தேன மணம வீசும நீணட சிமயங்களில விளங்கிய வேங்கட மலையைச சார்ந்த ஊர்களை உடைய சுர நெறியைக கடந்து சான்றோர் கலப்பைகள் மடிந்து உலகத்தின கண் உழுதொழில் மடிந்துவிட மழை பெய்தல் ஒழிந்த வானத்தின் கண்ணே குறிய முயலாகிய மறுவின நிறம் விளங்க மதி நிறைவுற்றுக கார்த்திகையைச சேரும இருள் அகன்ற நடு இரவில மறுகுகளில விளக்கு களை வரிசையாக ஏற்றி மாலைகளைத தொங்கவிட்டுப் பழமையான வென்றியை உடைய முதிய ஊரின் கண் பலரும் ஒருங்கு சேர்ந்த விழவினை நம்முடன் கொண்டாட வருவாராக.

(வி - ம்) அறுமீன் - கார்த்திகை. கார்த்திகைத் திங்க ளின் கார்த்திகை நாளில வீதிகளில நிரை நிரையாக விளக்கு ஏற்றி விழாக கொணடாடும் வழக்கம் பண்டு தொட்டு உள்ளது என்பது இப்பாடலாலும் இன்னும் பல பாடல்களாலும விளங்கும.

—நக்கீரர்

142 - குறிஞ்சி

[இரவுக் குறிவந்து நீங்குந் தலைமகன் தன நெஞ்சிறகுச சொல்லியது.]

நெஞ்சே வாழிய! நம் காதலியானவள், நீதி முறை யில் வழுவாமல் கடமையினைச செய்து பெறற உரல் போலும் அடியினை உடைய யானையை உடைய நன்ன னது பாழியில் உள்ள பலியிடறகு அரிய தன்மையை உடைய அஞசத தக்க பேய்ககு ஊட்டுதலை ஏறறுக கொணட வாயமைத தன்மை உடைய பிஞிலி எனபான புட்களுககுப் பாதுகாவல ஆகிய பெரும புகழினை உடைய வெளளம போலச சேனையினை உடைய அதிகன் என்பானைக கொனறு மகிழ்நது, ஒளவாள் அமலை எனனும வெனறிக கூததை ஆடிய போாககளப் பூசலைப போலப பலரும அறிநது அவா கூறலை அஞசி, நீரின திரட்சியைப் போன்ற குறறமறற வெளளியினுலாய வளைவு பொருநதிய திரணட வளையலகள செறிககப பெறற முனகையளாய நீா குறைநத அறலை ஒதத கரிய பலவாய கூநதல் அகறசி இலலாத பிடரியின் பால் உள்ள அணியோடு கூடி அசையக கடல மீனகள துயிலும நளளென்று ஒலிககும இடையாமத்தில அழகு கிளர்நத பொலிவினை உடைய செய்தொழிலில சிறநத பாவை நடை கறறுல் போன்ற நடையினளாய மெல்ல மெலல வந்து, மழையின் அலைத் தலால கலங்கிய மலைப் பூக்களால் ஆய மாலையினின்றும், உலைககளதது அடிக்குங்கால் தெறித்து விழும், பொற்றாள் போல் தேன் துளிதது விழ, வடித்தல் அமைந்த யாழ் நரம்பின் ஒலி போல இனிய மொழிகளைக் கூறி வட்டமாய முலைககணணின் வடுவுணடாகத் தழுவினுள் ;

இலவ மலர் போன்ற அழகிய சிவந்த நாவினுல் புலமையால் உயர்த்திக் கூறப்பெறும் மேலோர் புகழ

பலரினும மேமபட்டுக கொடுத்தலால கவிந்த கையினை உடைய வளளலாய போா வெலலும மாநதரம பொறை யன கடுங்கோ என னும் சேரமனனைப பாடிச சென்ற வறுமை உடையோரது பிசசை ஏறகும கலம்போல இனிப பெரிதும நிறைவுற்று மகிழவாயாக.

—பரணர்

143 - பாலை

[பொருள்வயிற பிரியக் கருதிய தலைமக னைத தோழி தலைமகளது ஆறறுமை கணடு செல வழுங்குவித்தது]

ஐயனே! பொருள் ஈட்டும வினைககண பிரிதலை எணணிக்காடு அழகுகெட ஞாயிறறின கடிய கதிா அளவு கடந்து காயதலின் நீணட கிளைகள வறியன ஆக, ஒல லெனனும ஒலியுடன் வாடிய பல அகன்ற இலைகள மேல காற்றால உதிர்ககபபெறும் தேக்கு மரங்கள் நிறைந்த பககமலைகளாய அவவிடததுக காயநத தூறுகளில பிறந் ததும காறறினால் வளாநது ஓங்கியதுமான மிகக தீயின் ஒளிமிகக நீண்டு ஒழுஙகு மேலே எழுந்து மலைப பின வாகிய குகைகளில முழஙகும வெப்பம மிகக மலையைச் சார்ந்த அரிய சுரததினைக கடந்து நாம் போவோம் என்று கூறிய நமது சிலவாய சொல்லைக கேட்டறகே, இததலை விக்கு, பழியிலலாத கொடிய போாவல்ல சேரன படைத் தலைவனை, பரிசில விருப்புடன் வாழ்வாாககு நலல அணி கலன்களை அளிக்கும. தபபாது வெற்றி அளிக்கும் வாளினையும் புனைநத கழலினையும உடைய பிட்டன் எனபானது மேகம தவழும உயாநத உச்சியினை உடைய குதிரை மலையின பககவரையில அகன்ற பாறையில் உள்ள நெடிய சுனையிடத்து மழைத்துவலையால மலர்ந்த குளிர்நத மணம் கமழகின்ற நீலமலர் நீர் ஒழுகுவது போல

கணகள நீரைச சொரிநதன யான அது கண்டு நோவேன ஆயினேன.

—ஆலமபேரி சாததனார்

144 - முல்லை

[வினைமுற்றிய தலைமகன தன நெஞ்சிற்கு உரைப்பானாய்ப் பாகற்குச் சொல்லியது.]

நெஞ்சே வாழிய!

நம தலைவி தன் தோழியை நோக்கித தோழியே! நம் தலைவா தாம வருவோம என்று கூறிய நாளும் பொயத்தன, செவவரி பரநத கண்களினின்று நீரும இல்லாது ஒழுகு கின்றன. குளிர்ந்த மழையால அரும்பிய பசிய முல்லைக் கொடியினது கூரிய முனைவாயநத வெள்ளிய அரும்புகள் மலாநதன. மாலையைத தரிக்கும அழகினை இழநத கூநதலை யும நினையாா ஆயினா அறத்திற்கும அஞ்சுகின்றிலர்.

இங்ஙனமெல்லாம ஆகலின அவரிடத்தினின்றும அருள மாறினும மாறுக எனச் சிறியவாகச சொல்லிப் பெரியவாக வருத்தம் உறுவாள் ஆயினும், வானில் இடி யேறு முழங்கினும அதற்கு எழுந்து தானும முழங்கும், மதம பொருந்திய களிறு சூழலும பாசறைகக்ண போர் விருமபிக் கிளர்ந்தெழும் வீரா தம கையிடத்ததாகிய கூரிய வாளின் குவிநத முனை சிதைந்திட மாற்றார் படையை வீசிக் கொன்று, மான்பாய்ச்சிய உதிரம் வானின்கண் உள்ள மீன் போல இடந்தோறும் இடந்தோறும் மின்ன, அறிய வேண்டுவன வற்றை எல்லாம ஆராய்ந்து அறிந்து போரினை வென்ற செல்வத்தை நம் சுற்றத்தார் விரைந்து சென்று உரைக்கக கேட்கும்போது குளிர்ச்சி பொருந்திய நறிய மாலை குழைந்திட நம்முடன் வெறுப்பு ஒழிநத கூட்டம் பெற்றவளைப் போல மகிழ்வள் அன்றோ?

—மதுரை அளக்கர் ஞாழலார் மகனார் மள்ளனார்

145 - பாலை

[மகட் போக்கிய செவிலித்தாய் சொல்லியது]

வேர் முதல் முழுமரமும் வற்றி நின்ற துளைபட்ட அடியினை உடையதும், தேரின் மணி ஒலி போலச் சிள் வீடு என்னும் வண்டுகள் ஒலிப்பதும் ஆகிய வற்றல் என்னும் மரத்திடத்து உள்ள பொன்னிறம் வாய்ந்த தலையை உடைய ஓந்தி, வெயிலால் அழகு ஒழிந்த ஊர்களில் வருத்தம் கொள்ளுதலின் மெலமெலனத் தாவும் வெள்ளிய ஞெமை மரங்களை உடைய அகன்ற காட்டகத்தே, ஆட்கள் செல்லாத அரிய நெறியை உடைய வாள் போலும் வரியினை உடைய புலியுடன் போர் செய்தமையால் புண் மிக்க யானைகள் புள்ளிகள் சிதைந்த முகத்தினவாய்க் குருதி ஒழுக உயர்ந்த உச்சியினை உடைய நெடிய சிகரத்தில் இடிக்கும் இடிபோல முழங்குகின்ற அரிய பாலை நிலத்திலே இரங்கத்தக்களாய் என் மகள் அத்தலைவன் உடன் சென்றுள்ள என்று கண்டோர் கூறுவார்;

களிக்கும் மயில்கள் யானை போலும் குரல் உடைமையால் யானையங்குருகு என்ப் பெயர் பெறும் பறவைகளுடன் சேர்ந்து ஒலிக்கும்படியான, இடையறாது ஒலிக்கும் முழவினையும் செல்வம் நுகர்ந்து வாழும் வாழ்க்கையினையும் உடைய நெல்மிக்க தந்தையின் அகன்ற இடம் உடைய மாளிகையில், முறையாக அடியிட்டு நடக்கினும் வருந்தும் ஐம்பகுதியான சிறிய பலவாய கூந்தலை வேய்ந்த மாலையுடன் கையில் பற்றி, இரங்காது, அடிக்கும் கோல் சிதையும்படி (முதுகில) அடிக்கவும், என் முதுகு எனக்கு உரியது என்று கருதாது நின்ற அமர்த்த கண்களை உடைய எனது மகளைத் துன்புறுத்திய கைகள், பெரிய புகழினை உடைய அன்னியானவன் குறுக்கைப் பறந்தலை என்னும் போர்க் களத்திலே திதியன் என்பானது பழமை

பொருந்திய பருத்த அடியுடன் துணித்திட்ட நனைருகிய மெல்லிய பூங்கொத்துக்களை உடைய புன்னை மரம்போல பெரிய துன்பத்தை அடைவனவாக.

—கயமனார்

146 - மருதம்

[வாயில் வேண்டிச்சென்ற பாணற்குத் தலைமகள் வாயில் மறுத்தது.]

வலிமிக்க திண்மையையும் தலைமையையும் உடைய எருமைக்கடா, குளிர்ந்த மலர்களை உடைய பொய்கையில் பகல் எல்லாம் கழியச் சுழன்று, மடப்பம் வாய்ந்த கண்ணினை உடைய மாண்புற்ற பெண் எருமையினை அணைந்து தோட்டங்களில் பொருந்தி மேய்ந்து வயல்களில் தங்கும் ஆரவாரம் பொருந்திய மகிழ்ச்சியை உடைய ஊரனது ஒலிக்கும் மணி பொருந்திய நெடிய தேரானது ஒளி பொருந்திய அணிகளை உடைய பரத்தையர் சேரியினைக்கண் பலநாள் இயங்குதல் அமையாதாயின், மாயம் செய்யும் பரத்தமைத் தொழில் உடைய அவனது வாய்மை போலும் மொழியினை எம்மைப் போல மெய்யென விரும்பிக் காற்று மோதுதலின் அசையும் மழை பெய்யப்பட்ட மலரைப் போலக் கண்கள் நீரினை மார்பிலே சொரியக் கண்கள் கலங்கி ஆயத்தாரும் அயலாரும் மயங்கத் தன் தாயார் பாதுகாத்து வளர்த்த அழகிய நலத்தினை வேண்டாது இழப்பாளாகிய விளங்கும் அணியினை உடையாள் யாவளோ, அவள் இரங்கத்தக்காள்.

—உவர்க் கண்ணூர்ப் புல்லங்கீரனார்

147 - பாலை

[செலவு உணர்த்திய தோழிக்குத் தலைமகள் சொல்லியது.]

[தோழியே நம தலைவன பிரிதலால்,] பலவற்றையும் வெறுதது உண்ணாத வருததத்தால உயிர மெலிநது கெடவும, தோள பழைய அழகு கெடவும, நாளதோறும் நம்மைப் பிரிநத தலைவரது நீககததிற்கு இரஙகி இருநதும் அதனைப போககும மருநது பிறிதொனறும இல்லாமையால் வேறு செயல இலலேன் ஆயினேன்.

ஆகலின் உயாநத மலைசசாரலில பிடவுடன சேர மலாநத வேஙகையின மணம கமழும பூவுடன கூடிய தழையை வேறு வேறாக வகுத்து வைத்தாற் போனற தசையின மறைபபு நீங்காத வளாநத நகத்தினை உடைய குட்டிகள மூனறை ஒருசேரபபெறறதும முடககமான இடத்திலே பாறையின பிளப்பாகிய குகையில உள்ளதும் ஆகிய, ஓயநத பெணபுலி பசி மிக்கதாக, புள்ளிகள் விளங்கும பிளநத வாயை உடைய ஆண்புலி அறல பட்ட கொமபினை உடைய ஆண மானினது குரலினை உற்றுக் கேடகும கவர்தத வழிகள பொருநதிய செல்லத் தொலையாத நீணட காட்டிலே, தன் கணவனைத் தேடிச் சென்ற வெளளிவீதி என்பாளைப் போனறு யானும் செலலுதலைப் பெரிதும விருமபி உளளேன்.

—*ஔவையார்*

148 - குறிஞ்சி

[பகல வருவானை இரவு வருக எனறது.]

திரண்ட பனையை ஒதத பருத்த அழகிய வலிய கையையும கொலலும சினம் நீஙகாத செருக்குப் பொருந்திய வலிமையினையும, வணடு மொய்ககும மதத்தினையும், நிமிர்நத கோட்டினையும் உடைய யானை, குளிர்ந்த மணம் கமழ்கின்ற பக்கமலையில் உளள மரம வீழும்படி ஒடித்துத தளளி மாறுபாடு உறற புலியினைக் கதறுமாறு குத்தி அதன் வெறறியினைத் தொலைத்துச் சிறிய தினைவிளைந்த பெரிய புனத்தினைக கவர்ந்து கொள்ளும் நாடனே!

கடிய செலவினை உடைய குதிரையைப் பெற்ற ஆய எயினன் என்பான் நெடிய தேரை உடைய மிஞிலி என்பானோடு போர் புரிந்து களத்தில் இறந்தனனாக, (புள்ளினப் பாதுகாவலனாகிய அவனை ஏனைப் பறவைகளைப் போலச் சென்று) காண இயலாத பகற் குருடாகிய கூகை யானது நாணுதல் உற்றுக் கடிய பகலிலே இயங்காது துன்பம் அடைந்தாற் போல இவருக்குப் பகற் குறிக்கண் செல்லாத துன்பம் பெரிதாயிற்று; அதனால் சோலையின் கண் மூங்கிற் குருத்தினைத் தின்னும் பெரிய களிறு இயங்கு கின்ற மலைச்சாரலில் உள்ள சிறிய பாறைகள் செறிந்த நெறியில் நீ மாலைக் காலத்தே வருதல் வேண்டும்

—பரணர்

149 - பாலை

[தலைமகள் தன் நெஞ்சிற்குச் சொல்லிச் செலவழுங்கியது]

எனது நெஞ்சமே!

பெரிய கையினை உடைய கரடியின் பெரிய கூட்டம் சிறிய புல்லிய கறையான் நீண்ட நாள் முயன்று ஆக்கிய உயர்ந்த சிவந்த புற்றில் மறைந்து கிடந்த புற்றாஞ் சோற் றினைத் தின்று அதை வெறுத்த தாயின் புற்கென்ற அரை யினை உடைய இருப்பை மரத்தின் தொளை பொருந்திய வெள்ளிய பூவைக் கவர்ந்து உண்ணும் சுரத்தின் நீண்ட வழியே சென்று பெரிதும் அரிதாக ஈட்டும் சிறந்த பொரு ளினை எளிதாகப் பெறுவதாயினும், சேர அரசரது சுள்ளி யாய பேர்யாற்றினது வெள்ளிய நுரை சிதற யவனர்கள் கொண்டுவந்த தொழில் மாட்சிமைப்பட்ட நல்ல மரக் கலம் பொன்னுடன் வந்து மிளகொடு மீளும் வளம் பொருந்திய முசிறி என்னும் பட்டினத்தை ஆரவாரம் மிக வளைத்து அரிய போரை வென்று அங்கு உள்ள பொற்

பாவையினைக் கவர்ந்து கொண்ட நெடிய நல்ல யானைகளை யும் வெல்லும் போரினையும் உடைய செழியனது கொடி அசையும் தெருவினை உடைய கூடலின் மேல்பால் உள்ள பல பொறிகளை உடைய வெல்லும் மயிற் கொடியினை உயர்த்த இடையறாத விழவினை உடைய முருகனது திருப் பரங் குன்றத்தே, வண்டு வீழ நீண்ட ஆழமான சுனையிற் பூத்த நீலப் பூவின் புதிய மலர் இரண்டின் சேர்க்கை போன்ற இவளது செவ்வரி படர்ந்த மதர்த்த குளிர்ந்த கண்கள் நீரினைக் கொள்ள வரமாட்டேன்; நீ வாழி!

—எருக்காட்டூர்த் தாயங் கண்ணனார்

150 - நெய்தல்

[பகற்குறி வந்து கண்ணுற்று நீங்கும் தலைமகனைத் தோழி தலைமகளை இடத் துய்த்து வந்து, செறிப்பு அறிவுறீஇ வரைவு கடாயது.]

மாலை பொருந்திய மார்பனே!

நீ பிரிந்த காலை விரைந்த செலவினையும் வாள் போன்ற கொம்பினையும் உடைய சுறாமீன் இயங்கும் சங்குகள் மேயும் பெரிய துறையை உடைய இதழ் செறிந்த நெய்தலது கண் போலும் பெரிய மலர், மாலைப் போதில் அழகிய இதழ்கள் குவிய விடியலில் அரும்பிய செருந்தியின் போதுகள் இதழ் விரியத் தேன் நாறுகின்ற குவளையுடன் குளிர்ச்சி உற மலர்கின்ற உப்பங் கழியையும் சோலையினை யும் காணுந்தோறும் பலவும் எண்ணி வெறுத்து நம் தலைவர் வாராரோ எனத் தலைவி வருந்துவள்;

அதன் மேலும், அன்னையானவள் பின்னும்படி (வளர்ந்து) நெறிந்த கூந்தலையும் பொன் போல மார்பில் தோன்றிய தேமலையும் கச்சு அறக் கண்ணுடன் உருப்

பெற்று எழுந்த முலையினையும் பார்த்துப் பெரிதும் அழகுடையை என்று பலமுறையும் கூறிப் பெரிய தோளை முழுவதும் சோர்ந்து நெடிது நினைந்து (தலைவியை) அரிய காவலில் வைத்தனள்.

—குறுவழுதியார்

151 - பாலை

[*தலைமகனை பிரிவின் கண் வேறுபட்ட தலைமகள் சொல்லியது*]

தோழி வாழி,

இடமெல்லாம் விரிந்து மிக்கக் காற்று வீசுந்தோறும், கலங்கியதும் புள்ளிகளையும் வரிகளையும் உடைய கலை மானின் தலையின் அடியிடத்தில் கப்புவிட்ட கொம்பு போன்ற கவட்டினை உடைய குறிய காலினை உடை வாகை மரத்தின் கிளையில் விளைந்ததும ஆகிய நெற்றின் குலை ஆடும கூத்தியரது கோலால அரித்து எழும ஒலி உண்டாக்கும் பறைபோல வியப்பு உண்டாக ஒலிக்கும பதுக்கையினை உடையதாய குறைந்த நிழலை உடைய கள்ளியின் முட்பொருந்திய அடியில தங்கி வழிச செல் வார்க்கு உண்டாகும நிகழ்ச்சிகளைக கூறும் சிறிய செவ்விய நாவினது மணி ஒலி கேட்டாற போலும் தெளிந்த குரலைக்கொண்ட சோதிடங் கூறும வாயை உடைய பல்லிகளைப் பெற்ற காட்டைக் கடந்து சென்ற நம் தலைவர், தம்மை விரும்பி இருப்போரைப் புறந்து தாம விரும்பிய இனிமை பொருந்திய நட்பினரோடு இன்பம் மிக இயைந்து மகிழ்ந்து இருத்தலை மாட்டாராவர். வறுமை யுற்றோர் என்று கூறி மிக்கப் பொருளை ஈட்ட லினையும் நெஞ்சத்தால் நம்மிடத்து மிக அருள உடையர் அல்லராவர்.

—*காவன் முல்லைப் பூதரத்தனார்*

152 - குறிஞ்சி

[இரவுக் குறிவந்து நீங்கும் தலைமகன் தன் நெஞ்சிற்குச் சொல்லியது]

நெஞ்சே!

நம் நெஞ்சம் நடுங்குதற்குக் காரணமான பிறிதொன் றால் தீர்தற்கு அரிய துன்பமானது இரவந்து கூடிக் குன் றிடத்துப் பொருந்திய தனது சிறிய ஊருக்குச் செல்ல மீளவோளாய நம் தலைவியின் வளைந்து சுருண்ட கூந்தல் கள், நுணணிய கோலை உடைய பாணரைப் புரந்த பெரிய புகழையும் சினமிக்கப் படையினையும் உடைய தித்தன் வெளியன் என்பானது, ஒலிக்கும் நீர்ப்பரப்பினை உடைய கானலம் பெருந்துறை எனனும் பட்டினத்தே பொன் னைக் கொணடுவரும் நலமாக்கலம் சிதையுமாறு தாக்கு கினற சிறிய வெள்ளிய இருமீனின் தொகுதி போன்ற மிக்கப் பகையைத் தரும் வளமிக்கப் பிண்டன் என்பா னது போர் செய்யும் மாறுபாடு சிதைய வென்ற வெற்றி வேலையும், புகழ் மேவிய நல்ல ஈகையினையும், களிறுகளை வழங்கும் வண்மையாளுகிய களிப்பினையும் உடைய பாரம் என்னும் ஊர்க்குத் தலைவனுகிய ஆரமபூண்ட நன்னன் என்பானது ஏழில் என்னும் நீண்ட மலையின் பாழி என்னும் பக்கமலையிடத்து உள்ள களிக்கும் மயிலின் தோகையை ஒத்தன;

இவள் தோள்கள், வலிய வில்லை உடைய வீரர்கட் குத் தலைவனுன நள்ளி என்பானது சோலைகள் பக்க மலை யிடத்தே வண்டுண்ண விரிந்த கடவுள் சூடுவதற்கு உரிய காந்தட் பூவுள்ளும் வியப்பு மிக்க அழகிய மலர் பலவும் ஒருங்கு சேர்ந்து நாறுவது போல மணம் வீசி, பரிசில் கருதி வந்தார்க்கு அவர் கலவியில் வல்லுநராயினும் அல்லாராயினும் மிடாச் சோற்றை உண்கலம் நிறையும் படியாக அளிக்கும், பெரிய யானைகளையுடைய ஆய்

என்பானது காட்டினை உடைய தலையாறு எனனும் இடதது நிலைபெற்ற மிக்க உயர்நத மலையிடத்து உளள மூங்கிலில பொருநதிய கணுககளில நடுவிடதது ஒதது, சேய்மைககண் உள்ளனவாயினும நாம் நடுஙகத்தக்க துயரினைத் தரும.

-பரணர்

153 - பாலை

[மகட் போக்கிய செவிலித்தாய் சொன னது]

இரங்கத் தக்களாய என்மகள் அழகிய இனிய சொற கனை உடைய ஆயத்தாருடன் பொருநதிப் பநதாடு மிடத் துச சிறிது சென்று வருவாள் ஆயினும் மிகவும நொநது பெரிதும் வருநதுவாள்,

உயர்ந்த மலைச் சாரலில உளள வண்டுகள் பாய்ந்து ஆராவாரிககுமு விளக்க முறற கொததுககளை உடைய கோங்கினது உயர்ந்த உசசியில் இரவின கண் மீனொடு விளஙகுமு வால எனத தோனறிய (பின) காறறு அடிதத பின் கழன்று விழும் இடனை எல்லாம மணம வீசும புதிய மலர், கையினால் விடப்பெறும் சுடரப் பொறி போலத் தோன்றும மேகம் பொருந்திய பெரிய மலை குறுக்கிட்ட சுர நெறியில், வேனிறகாலத்துக் காய்கின்ற ஞாயிறறின கதிர் கெடுத்த வெப்பம் மிகக காட்டிலே விரைந்து அடிக் கும் மிக்கக காற்றுத் தழைத்த மூங்கிலின் கணுககளைப் பொருநதித் தாக்கலின் எழுப்பப்பட்ட விளங்குகின்ற பொரியைச் சிதறியெழுகின்ற மிக்க நெருப்பினால் பசுமை அற்ற உச்சியை உடைய, பயன் ஒழிந்தவும் தன் அடிகட்கு ஏற்றன அல்லவும் ஆகிய அரிய வழிகளை இப் போது மென்மைத் தன்மை உடைய அவள் கொடுமை உடைய தலைவன் தன் மார்பினாலே முற்ற வளைத்து இனிய சொல்லாலே கட்டிவிட அதனை விரும்பி நம்

மிடத்தே உண்டாகும் துன்பத்தினை நினையாள் ஆகி விரையச் செல்ல வல்லமை உடையள் ஆவளோ; என் உள்ளம் அதனை நினைந்து வருந்துகின்றது; யானும் நோகிறேன்.

—சேரமான் இளங்குட்டுவன்

154 - முல்லை

[வினை முற்றிய தலைமகன் தேர்ப்பாகற்குச் சொல்லியது]

பாகனே!

மிக்க மழை பெய்தமையால் பயன் மிக்க முல்லை நிலத்தே ஆழமாகிய நீரினை உடைய பள்ளங்களில் உள்ள பிளந்த வாயினை உடைய தேரைகள் நீண்ட வழி எல்லாம் சிறிய பலவாய இசைக் கருவிகளைப் போல ஒலிக்கவும், குறிய புதராகிய பிடவின் நீண்ட காம்பினை உடைய மலர்கள், செம்மண்ணாகிய நிலத்திடத்தே நுண்ணிய மணலில் உதிர்ந்து அழகு செய்யவும், கொடிய சினமுடைய பாம்பின் படம் மேலே நிவந்தாற் போன்ற தண்ணென மணக்கும் காந்தட் பூவின் தாது கட்டு அவிழ்ந்து விரியவும், முறுக்கிய கொம்பினை உடைய ஆண்மான் தெளிந்த நீரைக் குடித்து விருப்பம் வாய்ந்த பெண்மானுடன் இன்பம் மிகத்தங்கவும், அழகு பெற்ற காட்டின் குளிர்ந்த செவ்வி வாய்ந்த பெரிய வழியிலே,

ஓடும் வேகம் குறையாத கொய்யப்பட்ட பிடரி மயிரினை உடைய குதிரையின் தாளின் அளவு தாழ்ந்த மாலையிடத்து மணி இலங்கி ஒலிக்கத் தேரை ஓட்டுவாயாக; சீர் மிக்கு நம்மிடத்து விரும்பிய கொள்கையினை உடைய அழகிய மாமை நிறத்தை உடைய நம் தலைவியை விரைந்து சென்று அடைவோம்.

—பொதும்பில் புல்லாளங் கண்ணியார்

155 - பாலை

[தலைமகன் பிரிவின்கண் வேறுபட்ட தலைமகள் சொல்லியது.]

தோழி!

அழகிய அணியுடையாளே! பாவ நெறியில் செல்லாத வாழ்க்கையும் பிறன் மனைவாயிலில் சென்று நில்லாத மேம்பாடு மாய இவ்விரண்டும் பொருளானே ஆகும் என்று சொல்லி, நமது இருண்ட அழகிய கூந்தலைத் தடவிய தலைவர், பலவிடத்தும் பாற் பசுக்கூட்டம் சோர்ந்துள்ள பாழூடு என்னும் அவ்விடத்தே நீண்ட சீழ்க்கை ஒலியை உடைய கோவலர் தோண்டிய கிணற்றினின்றும் முகந்த வளைந்த வாயினை உடைய குடத்தினின்று நீர் வடிந்து செல்லும் சிறிய குழி நீர் இன்றிக் காய்ந்ததனால் ஆயவருத்தத்துடன் நீர் வேட்கையைத் தணித்தற்குச் சேர்தற்கு வேறு இடம் பெறாமல், பெரிய களிறு மிதித்து ஏங்கிய அடிச்சுவட்டில் பெரிய புலிகள் அடிவைத்து நடந்து சென்ற சேற்று நிலமாகிய ஈரம் உடைய வழிகள், குற்றமற்ற நாவினை உடைய கூத்தர் தோளின் பின்னே கட்டிய மார்ச்சனை அமைந்த மத்தளத்தின் கண்ணிடத்தே விரலன் அடித்த வடுக்கள் போலத் தோன்றும் மரல்கள் வாடிய இடங்களை உடைய மலையைக் கடந்து சென்றுளார்;

அவரது பிரிவால் நாம் துன்பத்தை அடைவோம் ஆயினும் அவர் தமது பொருள் ஈட்டும் வினையினை முடித்து வருவாராக.

—*பாலை பாடிய பெருங்கடுங்கோ*

156 - மருதம்

[தலைமகனை இடத்துய்த்து வந்த தோழி தலைமகனை வரைவு கடாயது.]

முரசங்களை உடைய செல்வரது குதிரையது தலையின் உச்சியிடத்து இணைத்துத் தைத்த கவரியைப் பிரித்து வைத்தாற்போலத் செழுமை வாய்ந்த வயலிலுள்ள நெல்லின் சிவந்த அரிகளையுடைய இளங்கதிரை முதிய பசுவினம் பறித்துக் கண்டு அஞ்சி வயல் காவலர் கரும்பினை உண்பித்துப் பாகலின் சிறந்த கொடியைப் பகன்றையின் கொடியுடன் அறுத்து (அவற்றால்) காஞ்சி மரத்திடத்துக் கட்டி வைக்கும் நீர்வளம் பொருந்திய ஊரை உடைய தலைவனே!

பெருமானே! அன்னை துறையிடத்து நிலைபெற்ற தெய்வத்திற்குக் கையுறைப் பொருளாகக் கள்ளினையும் மாலையையும் நிமிர்ந்த கொம்பினையும் தொங்கும் காதினையும் உடைய வெள்ளாட்டுக்கிடாய் உட்படச் செலுத்தியும், தன் மகளுக்கு உற்ற நோய் தணியும் உபாயம் அறியாளாய் அழ, இத்தலைவியின் நீலமணி போன்ற மேனி பசலையால் பொன்னிறத்தினை அடைதல், நீலப்பூப் போலும் மையுண்ட கண்ணினையுடைய இத்தலைவியும் நானும் செவ்விதாகக் கழுநீர் ஆம்பல் இவற்றின் இதழ் ஒடியாத பூக்களுடன் கூடிய பசிய தழை உடை உடம்பின்கண்ணே அலைத்திட ஞாயிறு காய்தல் இல்லாத காலைப் பொழுதில் விளையாடி (பின்பு) நீவாழ்வாயாக எனக் கூறிவந்து நின்னுடன் நகையாடிப் பிழைத்த குற்றத்தால் ஆயதன்றோ?

—ஆலங்குடி வங்கனார்

157 - பாலை

[பிரிவுணர்த்திய தோழிக்குத் தலைமகள் சொல்லியது]

தோழி! போர் நிகழ்ச்சி குடிகளை இடம் பெயரச் செய்தமையின் பொலிவற்றிருக்கும் மன்றிடத்தே, மழை பெய்தலால் இளகியும் வெய்யில் உற்றதலால்

காயாநது நுணுகியும் வணணம் முதலிய வேலைப்பாடுகளை அழிநத பாவையைப் போல, மேனி வாடி மனையினகண தலைவரைப பிரிநது தனிததிருததலை வலலார்ககு, கள விறதம மகளிர் இடையில் சுமநதுவந்த விரிநத வாயை யுடைய பானையின குவிநத முனை சொரிநத அரிககப் பெற்ற நிறமுடைய கள்ளின வண்டலை நிறையக குடித் துப் போரினை விரும்பி ஆரவாரிககும சிவநத கணணை உடைய வீரா விலலால் எயய வீழ்நதோரின் கற குவிய லின அயலதாய கோஙகின்மீது படர்நது, இரவில மலாநத பசிய அதிரற கொடியைக காட்டுயானைகள பெரிய இருள புலருகின்ற விடியலில் அருமபுடன இழுததுக கவனமாக உண்ணும் அச்சம் வருகினற சுர நெறியிலே தனியராகச் செல்லும் நம் தலைவர் அதனை அவா தம மனம விரும்பி ஏறறுககொள்ளுமபடி சொலலுவர; யான அவ்வாறு தனிததிருததலை மாட்டுகிலேன்.

—வேமபற்றூாக குமரனா

158 - குறிஞ்சி

[தலைமகன் சிறைபபுறததானாகத தோழி செறிவித் தாய்க்குச் சொல்லுவாளாய்த் தலைமகன் கேட்பச் சொலலியது.]

அன்னை வாழி! இடிமுழங்கும் தொகுதியவாய மிகக மழை பெய்துவிட்டு அப்பெயல் நீங்கி ஒலியடங்கிய செறிந்த இருளை உடைய நள்ளிரவில இவள் மின்னல் நிமிர்ந்தால் ஒத்தவாய்க் கனத்த குழைகள் ஒளிவிடப் பின்னல் செறிந்தமையின் நெறிப்புடன அகன்ற கூந்தலை உடையளாய் மலையினின்றும் இறங்கும் மயிலைப் போலத் தளர்ந்து நடந்து பரணில் ஏறி இறங்கிவரக் கண்டேன் என்று கூறி இவளை வருத்தாதே நான் கூறு வதனை விரும்பிக் கேட்பாயாக;

தெயவங்களுடைய மலையை அடுத்த நம் தோட்டத்தின்கண் ஒரு தெயவம் ஒளிதங்கிய பூவைச சூடித் தாம் அவவபபோது விருமபிய உருவங்கொணடுவரும ; (அன்றியும) நனவினது உண்மைத தோற்றம போலவே துயில்வோரைக கனவு அவவிடதது மயக்கலும் உண்டு; இவளோ, விளககு இலலாமல தனியளாய் இருத்தற்கும் நடுஙகுவள் ; அசசம தோன்ற மன்றததின்கண் ணுள்ள மராமரததிலுளள கூகை குழறிலும மனம நடுஙகிப் பாதுகாபபான இடததிறகு வநதுவிடுவாள ; அதன மேலும் புலிககூட்டததை ஒதத நாய்கள் தொடர்தல நீங்கினவாயினும முருகனை ஒதத சினததினையும் கடிய வலியினையும உடைய எம தநதை இலலிடததாளுகவும், இத்தலைவி இஙஙனம தோடடததிறகுச சென்றுவரல அருகுவள் ஆகாளோ?

—கபிலர்

159 - பாலை

[பிரிவிடை வேறுபட்ட தலைமகளைத் தோழி வற்புறுத்தியது.]

காதலை உடைய தோழியே! தெளிந்த கழியின்கண் விளைந்த வெள்ளிய கல் உப்பினது விலையைக் கூறி விற்ற உப்பு வாணிகர் வளைநத நுகத்தையுடைய வணடிகளிற் பூட்டிய வலிபொருநதிய பிடரியினை உடைய எருதுகள் பலவற்றையும மேயுமபடி அவிழ்ததுவிட்டு (உண்டு) இளைபபாறி விடுததுச் சென்ற ஒழிநது கிடந்த கல்லாகிய அடுபபிலே, வடிததலுற்ற அமபினையும் வளைந்த வில்லினையும உடைய கரநதை வீரா மாற்றார்க்கு வருத்தத்தை விளைககும வலிய வில்லினை மிக வளைத்துப் பல பசுக்களையுடைய நீணட நிரையினைக கவர்நதுகொணடு கல் என்னும ஒலியுடன் வரும வெட்சி மறவர் போரினை அலைத்து ஓடடிய பெரிய செருக்கினையும் வெற்றியையும் உடைய

ராய், மிக்ககுரலையுடைய கடியதுடியின் ஒலிக்கு ஒத்த தாளத்தோடு ஆடித் தழையுடன் கட்டிய கண்ணியைச் சூடினராய் ஊனைப் புழுக்கி உண்ணும் கவர்த்த நெறிகளிலே நம் தலைவர் சென்றார் என்று மிகவும் துன்புறாதே;

வானிடத்தே சிறந்த இடி ஒலிக்கும் நெடிய உச்சியை உடையதும் நறிய பூக்களை உடைய சாரல்களை உடையதுமான குறும்பொறை என்னும் மலைக்குக் கிழக்கின்கண் உள்ளதும் வில் பொருந்திய பெரிய கையினை உடைய போர் வெல்லும் சேரனது வண்டுகள் மொய்க்கும் (மதம் வழியும்) கன்னத்தினையும் சிறிய கண்ணினையும் உடைய யானையின் பூண்பூண்ட பெரிய கோட்டினை ஒடியும்படி அழித்துக் கொடுமுடி என்பான் காத்து வருகின்ற விளங்கிய இடத்தை உடைய நெடிய மதில் சூழ்ந்த நெடுந்தூரம் சென்று விளங்கும் சிறப்பினை உடைய ஆமூரை அடைவராயினும் நினது பூண் சுமந்த மார்பினைப் பொருந்துதலை மறந்து அங்கே மனம் பொருந்தித் தங்கிவிடுவார் அல்லர்.

—ஆலம்பேரி சாத்தனார் சாதேவனார்

160 - நெய்தல்

[தோழி வரைவு மலிந்து சொல்லியது]

நிறையவாய சூலுற்ற யாமை அடும்பினைக் கொடி சிதைய இழுத்து வளைந்த உப்பங்கழியிடத்து வெள்ளிய மணல் மேட்டின் பக்கத்தே சேர்த்து (அதன்கண்) மறையும்படி ஈன்று புதைத்த யானைக் கொம்பினால் செய்த வட்டின் வடிவம் உடையப் புலால் நாறும் முட்டையைப் பிளந்த வாயினை உடைய ஆண் யாமை அதனிடத்தினின்றும் குஞ்சு வெளிப்படும் அளவும் பாதுகாத்திருக்கும் சோலையை உடைய கடற்கரைத் தலைவனது, வலிய தேரானது அம்பின் வேகம் போலச் செல்லுதலைப் பயின்ற

அழகிய நடையினை உடைய குதிரைகள் தாற்றினால் குத்தப்பெற்றன வேகம் அளவு கடத்தலை அருசிக கடி வாளத்தினால் குறிப்பிக்க மெல்லத் தாவிச் செல்லுதல் கொண்டமையின செழுமை வாய்ந்த நீரினை உடைய குளிர்ந்த உப்பங்கழியினைக் கடக்குங்கால அத்தேர் உருளை யின கூரிய முனையால அறுக்கப் பெற்ற பொதிந்த அரும்பு களை உடைய நெய்தல பாம்பின் மேலே தூக்கிய தலை யைப் போல வாடி மேலே எழ இதுகாறும் இராக காலங் களில வந்து கொண்டிருந்தது ;

(இன்று அத்தேர்) பாயும் குதிரை வேகத்தால் சிறப் புற்று மறையாமல ஒலலென ஆரவாரம செய்யும் ஏவல் இளையரொடு வலிய வாயினாலே அலராகிய ஒலியைச் செய் யும் சிறிய ஊர்ப்பெண்டிர காணப பகலிலே வந்தது; அதனால எனது நிறையில்லாத நெஞ்சம நடுங்கியது அது இரங்கத் தக்கது. ஒடுங்கிய கரிய கூந்தலை உடைய தோழியே நினக்கும அவ்வாறு நெஞ்சு நடுங்கியதோ ?

—*குமிழி ஞாழலார் நப்பசலையார்*

161 - பாலை

[பிரிவு உணர்த்திய தோழி தலைமகளது வேறுபாடு கண்டு முன்னமே உணர்ந்தாள நம பெருமாட்டி என்று தலைமகனைச செலவு விலக்கியது]

-(தலைவ) வண்டுகள் மலா இதழுள் புக்குத் தேனை உண் ணத் தழைத்த கரியபலவாய கூந்தலையும அழகிய மாமை நிறமுடைய மேனியினையும் ஆய்ந்த அணிகளையும் உடைய இளையளாய தலைவியின திதலை படர்ந்த மாரபின்கண் வீற்றுத தெய்வமென உருக்கொண்ட நல்ல வளர்ச்சியை உடைய இளைய முலைகள் நனைய, பல இதழை உடைய நீலப் பூப போன்றமையுண்ட கண்கள் நீர் பரந்து ஒழுகின ;

வளைந்து சுருண்ட கோதப் பெருத மயிரினை உடைய கொடிய மறவர் குதைஅமைந்த அம்பினை முழுதும் இழுத்து விடுத்து வழிச செல்லும புதியரைக கொனற அச்சம் தோன்றும கவாதத நெறியில பொருந்தும முடை நாறும புலாலை விரும்பி உணணும வாழ்க்கையினை உடைய சிவந்த செவியைப் பெறற பருந்தின் சேவல நெருங்கிய தன சுற்றத்தினை அழைக்கும் அச்சம் தோன்றும் கானத்தைப் பொருளை விரும்பிக கடந்து செலல எண்ணினீா என்பதை அவள முன்னரே நனகு கேட்டுளாளோ? ஆயின் நீர் எணணியாங்கு பொருள ஈட்டும் வினையின்கண் அவளைப் பிரிந்து செலலுதல யாங்ஙனம இயலும்?

—மதுரைப புலவை கணணனார்

162 - குறிஞ்சி

[இரவுக் குறிக்கண் தலைமகளைக் கணா ஏறற்று நீங்கிய தலைமகன் தன் நெஞ்சிறகுச சொல்லியது]

நெஞ்சே!

கொள்ளக் கொள்ளக் குறை படாததும சங்குகள் பெருகும் ஆழத்தினை உடைமையில் அளத்தற்கு அரிதாகியதும் கரிய தோற்றத்தினை உடையதும் ஆகிய கடலைக் கண்டால் ஒத்த வானில், தீயின் கொடியை ஒத்த மின்னல் மேகத்தைப் பிளந்துகொண்டு அசைந்து செல்லக் கடுமையாக இடிக்கும் இடியுடன் நீரைச் சிதறி முடிவிடம் அறியாவாறு மேகம் மழை பெய்தலைச் செய்யும் நடு இரவில் அரிய காத்தல் தொழிலை உடைய காவலர் நெகிழ்ந்து இருந்த செவ்வியை நோக்கிக குளிர் பொருந்திய வாடைக் காற்று வருத்த, தன் தந்தையின் நீண்ட மாளிகையின் ஒரு பக்கத்தே நின்று கொண்டு இருந்தே

ளுக, வாயமைச சொல்லினையும நலல புகழையும் அடை விககும இரவலர்ககு அவா எணணிய விருபபம பிழைததல் அறியப்படாத ஈகையினையும உடைய, வீரக் கழலை அணிநத அதிகன் எனபானது, காயததல் தப்பாத பய னுடைய பலா மரததிேனாடு வேஙகை மரமும பொருநதி யுளள மலையிடம அழகுபெற விலலை உடைய சேனை யைப பெறற பசும்பூட பாணடியனது களிறறின மீது எடுதத வெலலும கொடியை ஒபப, அழகுபெற மினிர் வனவாய இழியும உயாந்து காணபபடும அருவிகளை உடைய செஙகுததான நெடிய மலையின சாரலில உள்ள அச்சம தரும தெயவப பெணகளைப் போலப் பெறுதறகு அரியளாய நம தலைவி அறல் போல விளஙகும் கூந்தலினை யும நீலமலா என ஒளிபொருநதிய முகத்தில சுழலும அழகிய இதழினையும குளிாநத கணணினையும வணடு கள விருமபும முலலை அருமபினை வரிசையாக நிறுத்தினாற் போனற வெள்ளிய பற்களையும புனனகையால மாண்புற்று விளஙகும நனமை வாய்நத பவளம் போன்ற வாயினையும் உடையளாய அழகு வாயந்த சிறநத வளையல் விளங்கக் கையை வீசி, காறறு வீசபபெற்ற தளிர் என நுடங்கி வந்து நமது நோயாகிய வருததம் நீஙக முயங்கினள.

—பரணர்

163 - பாலை

[பிரிவின் கண் வறபுறுககும தோழிககுத் தலைமகள ஆறறுமை மீதூரச சொல்லியது.]

பலவகையாய மலர்களும் குழைந்திட வானின் கண் முழங்கிக கூடிய குளிாநத மேகம் சொரிந்து போன குறைநத பெயலைக்கொணட கூதிரின் கடை நாளில் மனததே வெறுப்புமிக யாம் தமியேமாகப் பிரிந்து சென்ற தலைவரை எணணி எஞ்சிய சில வளைகளும் கழன்று போகப் பெரிய ஆர்வம் கொண்ட உள்ளத்தோடு அவர் மீண்டு

வரும திசையை நோக்கி (வருந்தி) இறததற்கு ஏதுவாகிய துனபததோடு கூடி இருத்தலின அளிககததககாள இவள என்று நினையாது, யானை (நீரைப் பருகி) பெருமூசசெறி வது போலும இடம மறைய வீசும பனித் துளியில் தாமரை மலர் கரிந்திடும முன்பனிக காலத்துப பாதி இரவில் மலையையும் நடுங்கச் செய்வது போனற குளிரைக கொண்ட வாடைக காற்றே நீ என்பால்தான் நலியவந் ததை போல இருக்கின்றாய்; நீர ஓடும் வாய்க்கால் இடத்து உள்ள நுண்மணலால் ஆய மேடு கரைந்திடல் போல நெஞ்சம் கரைந்து இளைக்க கொடியராய அத்தலைவர் சென்ற திசையில் அயராது இன்ன கொடிய தன்மையோடு செல்வாயாக, (செல்லின்) பொருள் ஈட்டும் தொழிலில பெருவேட்கை உடையார் எனனை நினைத்து வருதலும உண்டு.

—கழார்க்கீரன் எயிற்றியார்

164 - முல்லை

[பாசறைக்கண் இருந்த தலைமகன தன் நெஞ்சிற்குச் சொல்லியது.]

நெஞ்சே!

பகைவரது மறிற் கதவினைச் சிதைத்த பூண் சிதைந்த கொம்பினையும் கட்டுத்தறியினை ஒடிக்கும் காலினையும் உடைய யானைகளைக் கொண்ட கொடிய சினத்தினை உடைய நற்வேந்தன், இப்போரினை முடிக்கப் பெறின் ஞாயிறு தன் கதிரே கையாக ஈரத்தினைக் கவர்ந்து பசுமை அறக் காய்தலின் நீர் இல்லையாகி ஒழிய, விளைத்தல் பொருந் திய மிக்க இடம் வாய்ந்த பெரிய பூமியிலே காடு (பண்டை) அழகினை எய்த மிக்க மழை பெய்தமையால் பொறிகளையும் வரிகளையும் உடைய கூட்டமாய வண்டு கள் ஆரவாரம் செய்ய மணம் வீசும் முல்லைப் பூவுடன்

செஙகாநதட் பூவும் வேறு பல பூககளும ஒருங்கு மலரக காடு மலா மணம பொருநதியது ,

நம தலைவா நிலை எனன ஆயிற்றோ என மயங்கி நீரினைச சிநதா நிறகும கணகளுடன மனையின்கண வருந்தி இனறுமையுடன தஙகி இருப்பாளாய தலைவி (நமமைக் கணடு பழைய நலததினை அடையும நலல காலம இது வாகும காணபாயாக.

—மதுரைத தமிழ்ககூத்தன நாகன் தேவனூர்

165 - பாலை

[மகட போக்கிய தாயது நிலைமைகணடார் சொலலியது.]

மெல்லிய தலையை உடைய இளைய பெண யானை குழியில அகப்பட்டுககொள்ளக களிற்றியானை கூப்பீடு செயது ஆர்வாரததுககு அஞ்சி விரைநது எழுந்த சிவந்த வாயதாகிய அதன கனறு, தாதாகிய எருவினை உடைய தெருககள் பொருந்திய பழைய ஊராகிய அவ்விடத்து எருமையாகிய நல்ல மாட்டினின்றும் பெருகுகின்ற முலைப்பாலை உண்ணும் இடமாய பல நாடுகளைக கடந்து சென்ற நன்மை உடையாள் பொருட்டு ஆயமும் பொலிவிழந்து வருந்துகின்றது ;

தாயும என் உயிர் கெடுவதாக என நொநது கூறிக் கொணர்ந்து பரப்பிய மணலிற கிடநத மகளது பாவையை எடுத்து அதன கண்ணையும் நெறறியையும் தடவி வளைந்த நொச்சியின் வரிவரியாக உள்ள நிழலில தட்பமுறக் கிடத்தித தாழிககண்ணே உளள குவளையின் வாடிய மலரைச் சூட்டி எனது அரிய மகளே நினது இனிய தோளைத் தருவாயாக என்று கூறித் தழுவி அழாநிறபள்.

166 - மருதம்

[பரத்தையோடு புனலாடிய தலைமகனைத் தலைமகளிடைப் புக்கு யான் ஆடிற்றிலேன் என்றான் என்பது கேட்ட பரத்தை தன் பாங்காயினோர் கேட்பச் சொல்லியது.]

தோழி வாழி!

நல்ல மரங்கள் சூழ்ந்த (கள் விற்கும் இல்லிலுள்ள) பல நாளும் வடிக்கப் பெற்ற கள் நிறைந்த சாடியை முக்கும் கலம் உடைத்திடின் விரவிய மழைத்துளி போலத் தெருவெல்லாம் துளிக்கும் (ஊராய) பழைய பலவகை நெற்களையும் உடைய வேளூரின் வாயிலிடத்து நறுமண நீர் தெளிக்கப் பெற்ற நாறும் கொத்துக்களால் ஆய பூமாலையைப் புள்ளிகளையும் வரிகளையும் உடைய கூட்டமாய வண்டு அஞ்சி ஊதாது ஒழிவதற்கு ஏதுவான உயர்ந்த பலிகளையே பெறும் அச்சந்தரும் தெய்வம் அளிந்த கரிய கூந்தலை உடையாளாய நின்னுலை ஐயுறப் பெற்றானுடன் யான் புனலாடி வந்தேனாயின் எனனை வருத்துவதாக என்று தன் மனைவியை அவன் கணவன் சூளுரைத்துத் தெளிய வைப்பானாயின் நேற்றுப் புதிதாக வந்த காவிரியின் கரை உச்சியினைத் தோய்ந்து வரும் மிக்க வெள்ளத்தில் மாலையை அணிந்த களிற்றினைப் போன்று புணையின் தலையிடத்தைத் தழுவியிருந்து கூட்டத்திற்குரிய பெரிய அணியால் பொலிவுற்ற நம்மோடு கூடிப் புனலாடினோர் யார் சொல்.

—இடையன் நெடுங்கீரனார்

167 - பாலை

[தலைமகன் பொருள் கடைக்கூட்டிய நெஞ்சிற்குச் சொல்லிச் செலவழுங்கியது.]

நெஞ்சே! பளிங்கு மணியினைப் போன்ற பாகுபாடு அமைந்த அழகினை உடைய பசிய சரத்தால் ஆய

மேகலையை அணிந்த அலகுலை உடைய மாமை நிறத்தின ளாய நம தலைவியுடன வானை அளாவும நீணட மாளிகை யில அழகிய வேலைப்பாடு அமைந்த புனையப் பெறற பூககளை உடைய பள்ளியினகண தங்குதலானே இன் றைய பொழுது முழுதும இனிதாகக் கழிந்தது ;

வழிச செலலும வாணிகச சாததினைக் கொன்று அவா பொருளைக கொளளை கொணடு உணணும் வருத்தத்தைச் செயயும அமபினையும வளைந்த விலலினையும உடைய மறவரது மிகக பகையை அஞசிக் குடி போகப் பெற்றமை யின வளன அறற பாகுப் பட்டாந்த பெரிய பாழிடத்தில் முருங்கையினைத் தினற பெரிய கையினை உடைய யானை யின முதுகினின்று உயர்ந்த பிடரி உராய்தலின் தளர்ந்து செஙகலலால ஆய நீணட சுவரிலுள்ள விட்டயரம் வீழ்ந்த தாக, மணிப்புறு விடடொழிந்த மாடத்தினையும் எழுதப் பெறற அழகிய கடவுள புறத்தே போய் விட்டமையின் பொலிவிழந்து இடையறுது நீகும் பலி மறக்கப் பெற்ற மெழுகபபடாத புல்லிய திண்ணையில் ஈன்றணிமை உடைய நாய் தஙகிய பறிந்த இடத்தை உடைய சிற்றிலை யும்; அவ்விடத்தே இயற்றப் பெற்ற கைம் மரங்கள் சிதையுமாறு பரவி வேலின் முனை போன்ற கூரிய முகத தினை உடைய கரையான் மூடிககொள்ளுதலின் கூரை மடிந்த நல்ல இறப்பினை உடைய அம்பலத்தின்கண் தனிமை வந்தடையத் துயிலாத கண்களை உடையேமாய் நாளைப் போழ்தில் தஙகி இருப்பேமோ? (அஃது இயலா தன்றே.)

—கடியலூா உருததிரங கண்ணனார்

168 - குறிஞ்சி

[இரவுக்குறி வந்த தலைமகனை இரவுக் குறி விலக்கி வரைவு கடாயது.]

வானை அளாவிய மலையை உடைய தலைவனே! இராப் பொழுதை நும்முடன் கூடிக் கழித்துப் பின்பு இரவுக் குறியின் ஏதமருந்திக் துன்பமுறுதலால் நீர் ஒழுகும் கண்களை உடையோமாய் வருந்தி இருக்கின்றேம் ஆகலின், பல்லான் குன்று எனலும் மலையில் பொருந்தும் நிழலினைக் கொண்ட, சேர்ந்த நல்ல ஆனிரையின் பரப்பினைக் கொண்ட குழுமூர் இடத்தே ஈகையாய கடனை ஏற்றுக்கொண்ட கோட்டமில்லாத நெஞ்சினை உடைய உதியன் என்பான் அடுகளம்போல ஒலிக்கும் அருவிகள் ஆரவாரித்து இழியும் பெரிய வரையினது பக்க மலையில் களிறு ஈன்ற அணிமை உடைய பெரிய பிடியினைத் தழுவிக்கொண்டு தனது அசைந்த நடையினை உடைய குழவி உறங்குகின்ற இடத்தைக் காத்திருக்கத் தறுகண்மை உடைய வாள் போன்ற வரியினை உடைய வலிய புலி ஒடுங்கிய முழையை விட்டுப் புறத்தே போய் மலையின் குகையிடத்தே முழங்கி வேட்டுவரும் துயிலும் நள்ளிரவில் விலங்குகள் செல்லும் வழியாய சிறு நெறியில் நீ வருதலை ஒழிதல் வேண்டும்.

—கோட்டம்பலத்துத் துஞ்சிய சேரமான்

169 - பாலை

[தலைமகன் இடைச்சுரத்துத் தன் நெஞ்சிற்குச் சொல்லியது.]

நெஞ்சே,

மரங்கள் உச்சி கரியவும் நிலம் வளங் குன்றவும், அசைகின்ற ஞாயிற்றின் கதிர் சூழப்பெற்ற வெம்மை விளங்கும் அகன்ற பாலை நிலத்தே புலியால் கொன்று தின்னப் பெற்ற பெரிய யானையினது எஞ்சிக் கிடந்த ஊனில் ஆரவாரம் பொருந்திய ஆறலைப்போர் கோலில் கோத்துக் (கொண்டு எய்யது போக) எஞ்சியதை ஒலிக்கும் அலை பொருந்திய கடலில் விளையும் உப்பினைக் கொண

ரும கூட்டம மிகக உப்பு வாணிகா தீக்கடை கோலால் ஆககிய சிறு தீயில் வதககிச சுளேயிற கொணடு இனிய நீரால ஆகிய சோற்றின உலேயில கூட்டி ஆககும பல சுர நெறி களேயும கடநது வநதுளள நமமிடத்து தன் உளளம் படாதலால திருந்திய அணிகளே உடைய நம் தலேவி கதிர் மஙகிய தனிமை கொணட மாலேயில பசலே மிகவும பரந்த மேனியளாகி நீள நினேந்து மெல்லிய விரல்களேச் சோர்த்த நெறறியினளாயக கயல் மீன உமிழும நீா போலக கண் களில நீா நிறைநது ஒழுகப பெரிய தோல் மெலிந்ததால் ஆகிய துனபததுடன வருநதுவள்; ஆதலின் அவள் இரங்கததககாள.

—*தொணடி ஆமூர்ச சாத்தனூர்*

170 - நெய்தல்

[*தலேமகள காமம மிகக கழிபடா கிளவி யால் சொனனது.*]

நணபே!

கரிய நீரோடையில மலர்ந்த கண்ணேப் போலும் நெயதற பூவின கமழும இதழ் மணத்தினே அரிழ்தம் போலும என விருமபிச் சென்று குளிாநத தாதினே உணட வணடின கூட்டம் களிப்பு மிககுப் பறததற்கு முடியாது சோரும் துறையை உடைய தலேவனுககு, கடறகரைச் சோலேயும சென்று தூது கூறுது. உப்பஙகழியும இயம் பாது. வண்டுகள ஒலிககும நறிய மலரினே உடைய புன்னேயும் மொழியாது. ஆதலின் நினேயே அன்றி வேறு எததுணேயும இல்லேன்.

தாழை மரத்தில தாழ்ந்த கிளேயில் விருப்பம் மிக்க பெடையுடன் வருத்தமுடன் தளர்ந்திருக்கும சிறிய கடற் காககை, சுறுமீன் இயங்கும் வேட்டையாடுதல் நீங்கிய இடத்தில உள்ள வெள்ளிய இறால்மீனேப் பற்றி

உண்பதாகக் கனவு காணும் இருள் செறிந்த நடு இரவில் வந்து பலகாலும் எனது மிக்க துயரினை நீக்கியோள் என் பிரிவால் எய்திய தனது மிக்க துயரினைக் கடக்க வல்லளோ என்று அத்தலைவன்பால் சென்று நீயே கூறுதல் வேண்டும்.

—மதுரைக் கள்ளிற் கடையத்தன் வெண்ணாகனார்

171 - பாலை

[தலைமகன் பிரிவின்கண் வேறுபட்ட தலைமகளைத் தோழி வற்புறீஇயது.]

தோழி!

பொருள் ஈட்டி வர விரும்பி, விளங்கும் திரட்சி பொருந்திய அழகிய நின் தொடி கழன்று விழ, வாடிய உச்சியினையுடைய ஞெமை மரங்களையுடைய வழியைச் சார்ந்திருந்த பெரிய மலை அடிவாரத்திலுள்ள சிறிய ஊரில் மருண்ட மக்களாகிய பலர், கொல்லுதல் வல்ல கரடி ஏற்றின் ஒலியினை உணராதவராய், செப்பம் செய்து கொண்ட அம்பினராய், வலிய வில்லைத் தோளிற் கொண்டு இடமெல்லாம் பரவி வருதலின், தரையில் கிடக்கும் உணவினை உண்ணுறுவாய், கிளையில் உள்ள பழங்களைப் போல இனிக்கும் சாற்றினை உடையதும் இனிய துளையை உடையதுமான பலர்களை உண்ண, கரிய கொம்பினை உடைய இருப்பை மரத்தின் மேல் ஏறும் பெரிய கையினை உடைய கரடிகள் திரியும் சுரநெறியைக் கடந்து சென்றோர், விரைவில் வருவர்.

ஆதலால், நெற்றியும் நுண்ணிய பசலை பரக்கப் பெறும், தோளும் பெரிய மலையிலுள்ள காட்டில் ஆராய்ந்து கொண்டு அறுத்த மூங்கில் துண்டைப் போன்ற அழகு ஒழிய வாட்டமுறும், நாள்தோறும் அவா

அருட் பணபினை யான் நினைவேன் என்று கூறி வருநதாதே

—கலலாடனார

172 - குறிஞ்சி

[தோழி தலைமகனை இடததுயதது வந்து தலைமகனை வரைவு கடாயது.]

யானை முழஙகும தனமை வாயநத மலையில தேனு டன கலநது வரும வெளளிய அருவி இனனிசையுடன முழஙகும மததளததை ஒபப இம்மெனும் ஒலியுடன் மலையின குகைகளும பிளப்பிடஙகளும ஒலிக்க விழும மூஙகில நெருஙகிய உயாநத மலைசசாரலில் உள்ள, இரும பினைப போனற வலிய கையினை உடைய வேடுவன் மலாநத மலரினை உடைய வெண் கடம்பினைச் சார்ந்து நின்று அமபினை ஆராயநது களிறறின அரிய மார்பில் செலுததிப் பகையினைக கொலலும் வலிமை வாய்ந்த அதன் வெளளிய கொமபினைக் கொண்டுவந்து, ஊகம் புல்லால் வேயநத தனது குடிசையில புலால நாற்றம் வீச ஊன்று தல செயது, அககுடிசை முனறிலில் உயர்ந்த முழவு போலும பலாக்கனியினின்று பிழிந்தெடுத்த மதுவினை உண்ட களிபபினனுகிச் சுறறத்துடன் ஆரவாரமிக்குச சநதன விறகாலாய தீயில் ஊனுடன கூடிய சோற்றைச் சமைத்து உண்ணும் இடமாகிய குன்றம பொருந்திய நாட்டை உடைய தலைவனே!

நீ அன்பில்லாதவன என்பதை முன்பே அறிந்திலேன். அதனை நான் அறிநதேனுயின, அழகிய அணிகலனையும் அழகிய இதழினையும மையுணட கணகளையும் உடைய இளையளாய என் தலைவியின நீலமணி போலும் சிறந்த அழகு கெடப் பொன்னைப போனற பசலை பெரிதும பரத் தல் இலலையாகும.

—மதுரைப் பாலாசிரியர் நப்பாலனார்

173 - பாலை

தோழி! வாழி!!

அற நெறியினின்றும் நீங்காது இல்வாழ்க்கை நடத்துதலும், சிறப்புப் பொருந்திய சுற்றத்தாரது பலவகையான துன்பங்களைத் தாங்கலும், எக்காலத்தும் முயற்சியால் மெய் வருந்தாமைக்கு ஏதுவாய் ஊக்கமில்லாத உள்ளமொடு இருந்தோர்க்கு இல்லையாகும் என்று பொருள் தேடும் வினையை விரும்பிய உள்ளத்தராய நம் தலைவர், பல புரிகளாலாய நீண்ட கயிற்றாற் பிணித்த வண்டியினை எருதுகளின் வலிய பிடரியிற் பூட்டி ஏற்றமான துறைகளில் ஓட்டிப்பெயர்ந்து, சாத்து வாணிகர் அவற்றை உரப்பும் ஓசையைக் கேட்டு அஞ்சி ஆணமாறும் பெண்மாறும் ஆகிய இனங்களை விட்டு ஓடவும் காடுகள் அழிந்து கெடவும் கோடை வெப்பம் நீரை உறிஞ்சுதலால் வற்றிய அழகிய பெரிய நெடிய மூங்கிலின் கணுக்கள் போலக் கத் தெறித்து விழும் கடுவாய் நெருக்க முத்துக்கள் கழங்குகளைப் போன்று தோற்றம் உடையனவாய், அங்குள்ளோர் ஆகழாங் காடிய பறையுடைய குழியிலே விழும் இடமாகிய, இனிய களிப்பைத் தரும் கள்ளினையும் இறைச்சியொடு தேறலையும் உடைய நன்னனது, யானை அளாவிய நீண்ட மூங்கிலையுடைய மலையினையும் பொன் பொருந்திய இடங்களையும் உடைய மலையினைக் கடந்து சென்றோராய நம் தலைவர், நல்ல நெற்றியையும் கரிய பெரிய கூந்தலையும் உடையாளே! அரிய துன்பத்தால் வருந்துதலைச் சிலகாலம் பொறுத்துக் கொள்ள வேண்டும் என்று கூறி, நினது நல்ல ஒளி பொருந்திய வளையினைத் திருத்தித் தலையளி செய்தனராதலால் விரைவில் வருவர்.

—முள்ளியூர்ப் பூதியார்

174 - முல்லை

[பாசறைக்கண் தலைமகன் தன்னெஞ்சிற்குச் சொல்லியது.]

பேரரசர் இருவர் பகைமை கொண்டு போர் செய்யும் பெரிய போர்க்களத்தே, தமது ஒப்பற்ற படைக்கலத்தைக் கொண்டு எதிர் வரும் படைகளைப் புறங்காட்டி ஓடச்செய்யும் வெற்றியாகிய செல்வம் உடையோர்க்கு இப் பெருமை நிலை பெற்றது என்றுகூறித் தண்ணுமை முழக்குடன் பொருந்த அரசன் அளிக்கும் பூக்கோளினை யும் ஏலாது தவிர்த்து, நாம், தன்பால் விரைந்து செல்லுதலை அறியாளாய், வேங்கையின் மலர்தலுற்ற நறிய மலரை ஒப்ப நன்னிறம் கொள்ள மேனியில் தோன்றிய குற்றமற்ற தேமலையுடையாளாய நல்ல மணலையுடைய அகன்றவிடத்தே நடந்த சிலவாய மெல்லிய நடையினை யும் மாமை நிறத்தினையும் உடைய நம் தலைவி நிமபிய கால்களிற் படர்ந்த முதிய முல்லைக்கொடி தளிர்க்கக் கீழ்த் திசையில் வானத்தெழுந்த கடிய குரலை உடைய மேகம் நீரைப் பெய்து முழங்குந்தோறும் நம்மை வெறுத்துச் செயலற்று ஒடுங்கித், துன்பத்தினைப் பொருந்திப் பசலை பாய்ந்த மேனியளாய் எந்நிலையினை அடைவாளோ?

—மதுரை அளக்கர் ஞாழார் மகனார் மள்ளனார்

175 - பாலை

[பிரிவின்கண் வற்புறுக்கும் தோழிக்குத் தலைமகள் சொல்லியது. பிரிவின்கண் வேறுபட்ட தலைமகள் தோழிக்குச் சொன்னதுமாம்.]

தோழி!

தமது தடித்த தோளின் வலிமையினை உரசிய வேகம் அமைந்த வலிய வில்லில் வைத்து இழுத்து விடும் அம்பு

குறி தப்புதல் இல்லாத திறுகண்மையுடைய மறவர் எய்யுந்தோறும் ஒலித்துச் செல்லும் கொடிய வாயினையுடைய அம்பு வழியில் செல்லும் புதியரது உயிர் கெடப் போக்குதலால் பருந்து தன் இனையினை அழைத்து மிக்க புலாலை உணணும் கொடுமை பொருந்திய சுரநெறியைக் கடந்து சென்ற நம் காதலர் தமது நெஞ்சு உணர கடிய சூள் உரைத்தும் பன்முறை ஆராய்ந்து செய்த வளையலை அணிந்த எனது முன் கையினைப் பற்றித் தலையளி செய்தும், குளிர்ச்சி பொருந்திய மழையைப் பொழியும் மேகம், காற்றைப் போல இயலும் கொடிய தேரினையும், கை வண்மையினையும் உடைய பாண்டியன் நெடுஞ்செழியன் தலையாலங்கானத்துப் போரை வென்று உயர்த்த வேற் படைகளைக் காட்டில் பன் முறை மின்னி, கரிய பெரிய வானின்கண் அவனது வெற்றி பொருந்திய முரசம் எனக் கடிய இடியினைப் பலகாலும் தோற்றுவித்து, நிரம்பிய கதிர்களின் ஒழுங்கினைக் கொண்ட சக்கரத்தையுடைய திருமாலின் பகைவர் போர் ஒழிதற்குக் காரணமாய மார்பிடத்தே தங்கிய மாலைபோலப் பல நிறம் வாய்ந்த அழகிய வில்லை அவ்விசும்பினிடத்தே வளைத்து நிலம் பயனைத் தரப் பாவி இறங்கிப் பெய்யுங் காலத்து,'தாம் செல்லும் வினையை முடித்துக்கொண்டு மீண்டு வருவேம் என்றார் அல்லவா? (அங்ஙனம் வந்திலரே; என் செய்வல்!)

—ஆலம் பேரிசாத்தனார்

176 - மருதம்

[*தோழி தலைமகளை வாயின் மறுத்தது.*]

கடலைக் கண்டாற் போன்ற இடமகன்ற நீர்ப்பரப்பில் நிலை பிளக்குமாறு இறங்கிய வேரில் முதிர்ந்த கிழங்கினையும், மூங்கிலைக் கண்டாற் போன்ற திரளையையுடைய திரண்ட தண்டினையும், யானையின் செவி போன்ற பசிய இலையிடத்தே கழு உயர்ந்து தோன்றலை யொத்த செழித்த

மொட்டுக்களின் இடையிடையே புன்சிரிப்பினை யுடைய முகம்போல விளங்கப் பூத்த பல மலர்களையுமுடைய தாமரையினை யுடைய பறவைகள் ஒலிக்கும் வயலில் உள்ள வேம்பின் அரும்பினைப் போன்ற நீண்ட கண் ணினையுடைய நீர் ஞெண்டானது இரையினை ஆய்ந்து பூராதிருந்த வெள்ளிய நாரையினைக் கண்டு அஞ்சி அயலி லுள்ள தழைத்த சிவதையினையுடைய கரிய சேற்றுப் பிழம்பில் தேமல் போல வரியுண்டாக ஓடிச்சென்று விரைந்து தனது ஈரம் மிக்க மண் வளையுள் பதுங்கும் ஊரனே!

மனையின்கண் விளங்கும் மரத்தில் படரும் வயலை யாகிய கொழுவிய கொடியினை, விளங்கும் மலர்களை யுடைய ஆம்பலோடு சேர்த்துக் கட்டிய தழை உடையை உடுத்தி, விழாவின்கண் ஆடும் மகளிரொடு தழுவி ஆடும் அணியால் சிறந்து, மலரைப் போன்ற மையுண்ட கண் ணினையும் மாண்புற்ற அணியினையும் உடைய நின் பரத்தை தனது குறிய வளையல் அணிந்த முன் கையிற்றால் பிணித்த நெடிய பிணிப்பினை விடுத்துச் சென்ற அவ ளிற்கே வெகுண்டனளாய், தன் முகத்தில் எழுதுவதற்கு ஏதுவாகிய அழகு கெட அழுது ஏக்கமுற்று, பொன்னைப் போன்ற தேமலையும், பலமுறை முறித்துத் கொள்ளலின் சிவந்த மெல்லிய விரலினையும், திருக்கக் கடித்தலால் முனை மழுங்கிய பல்லையும் உடையவளாய ஊர் எங்கும் அலர் கூறப்படும் நின்னைக் காணப்பதற்குத் தேடிச் செல்வாள். (ஆகையால்), நின் காதலியாகிய அவள், எம்மைப் போலப் புலவிய உளைபோலும் குடுமியை உடைய புதல்வனைப் பெற்று, நெல்லுடைய நீண்ட மனையில் நின்னைப் பிரிந்து தங்க என்னகடப்பாடு உடையவளோ.

—மருதம் பாடிய இளங்கடுங்கோ

177 - பாலை

[பிரிவிடை வேறுபட்ட தலைமகளைத் தோழி வற்புறுத்தியது]

தோழி!

காண்டற்கு இனிய மூங்கில் நிறைந்த பக்க மலையிலுள்ள சுரபுன்னையின் உச்சி வாடும்படி ஞாயிற்றின் கதிர் சினத்தைப் பயின்ற பெருகிய கற்களைப் பொருந்திய சுர நெறியில் பசிய பாகற் கொடியின் சிவந்த பழத்தினை விரும்பிக் காட்டில் உள்ள மயிலின் நிறைந்த கருவினைக் கொண்ட கரிய பெடை அயிரை யாற்றினது அடைகரையின்கண் வைத்து கொம்பின் ஒலிக்கும் காட்டினைத் தாண்டிச் சென்ற நம் தலைவர் குறித்த பருவம் கடந்து வராதிருப்பினும், சிறிய கண்ணினை உடைய பெரிய பெண் யானையின் பெரிய கையினை ஒப்பச் சேரக் கட்டிவிட்ட நெய்பூசப் பெறும் நறுமணமுடைய கூந்தற்கண்ணே, தேன் மணக்கும் நறிய மலரைப் பெய்தலையும், வென்றி வேலை ஆலை முன்னை நிறம் மாறிச் செந்நிறம் அடையச் செலுத்தி, பகைவர்களுடைய மலை போலும் யானைகளை மிக்க போரின்கண் அழித்த வீரக்கழல் தரித்த காலினை உடைய பண்ணனது காவிரியின் வடபாலுள்ள குளிர்ந்த குளத்தினை அடுத்துள்ள நெடிய அடி மரத்தினையுடைய மாமரத்தின் தளிரைப் போன்ற, உடம்பில் அழகு பெற அரும்பிய வருத்தும் இயல்புடைய நின் அழகிய முலையில் பரந்த சுணங்கினிடையே தொய்யில் எழுதுதலை நினைந்து விரைந்து வந்தருள்வர். ஆதலின், பழைய அழகு சிதைந்திட வருந்தி நாள்தோறும் இன்னும் வந்திலர் இனி என்ன செய்வேன் என்று மிக்க வருத்தம் அடைதலை நீக்குவாயாக.

—*செயலூர் இளம்பொன் சாத்தன் கொற்றனார்*

178 - குறிஞ்சி

[தோழி வரைவு மலிந்து சொல்லியது.]

தோழி!

வயிரத்தைப் போன்ற கூரிய மேனோக்கிய கொம்பினையும் மூங்கில் வேரினைப் போன்ற பருத்த மயிரினையும் உடைய பன்றியானது பாறையின் கண்ணினைப் போன்ற நிறைந்த சுனை நீரைக்குடித்து நீல மணியினைப் போன்ற நிறத்தினையும், அகன்ற இலையினையும் உடைய சேம்பின், பிண்டித்து வைத்தாற் போன்ற வளவிய கிழங்கினை நிறையத் தின்று, பெண் யானை கிடந்தாற் போன்ற கல்லின் மீது வருத்தம் இன்றி முறையாக இறங்கி வந்து ஆற்றினை அடுத்திருப்பது போன்ற நீர் ஊறும் இடத்திலுள்ள சிறு தூறுகிய பசிய புதரிலுள்ள செறிந்த கிளைகளில் வெண்ணுரை யிருந்தாற் போன்ற வெள்ளிய கூதளஞ் செடியின் அசையும் கொத்தில் உள்ள வளம் பொருந்திய முகை விரிந்த மலரினைப் பொருந்தி, அதன் பூம்பொடி மேலே உதிர்தலால் பொன் உரைத்து மாற்று அறியும் கட்டளைக் கல்லினை ஒப்ப அழகு பெறத் தோன்றி, கிளைத்தல் மிக்க சிறிய தினையின் விளைந்த கதிரினை மேய்ந்து இனிது கண்ணுறங்கும் இடமாகிய நல்ல மலைநாட்டை உடையானொடு, ஊடிப்பின் அவ்வூடலை நீங்கிப் புணர்ந்திடும் நீயும் நினது தோளின் மூங்கில் போலும் அழகு ஒழியாது நின் தலைவனுடன் என்றும் சோந்து வாழ்ந்து பின் என்றுங் கெடாத மறுமை உலகத்துத் தங்கி வாழ்வீராக;

இரவும் பகலும் என்றில்லாது கல்லெனும் ஒலியுடன் மேகம் பெரிய மழையைச் சொரிந்த விடியற் காலத்தே குளிர்ந்த பனியையுடைய அற்சிரக் காலம் தனித்திருப்போர்க்குத் தாங்கற்கு அரிதாம் என உணர்ந்து கனவின் கண்ணும் பிரிதலை அறியான்; அதன் மேலும்

தனது நறாகுணத்திறைல் முதன் முதல் தான் கண்ட நாளி னும பின் எந்த நாளினும மிகவும் அருள் செய்வாறுவான்.

—பரணா

179 - பாலை

[பிரிவு உணர்த்திய தலைமகற்குத தோழி செலவு அழுங்கச் சொல்லியது.]

தலைவ !

வானை அளாவிய உச்சியினையுடைய பெருமை தஙகிய மலையினது பக்க மலைக்கண்ணே, பேய்ததேர் ஓடும் காய்ந்த கற்காட்டின் பக்கத்தே, விரைந்த நெருப்புப் பரவிய கிட்டுதற்கரிய பெரிய காட்டிலுள்ள சிறிய கண் ணினையுடைய யானை, அப்பேயத் தேரின்பால தன நெடிய கையினை நீட்டியும, பெரிய வாயினைத் திறநதும நீரினைப் பெருது காடடை வெறுத்துக கழிநது போம் இடம் அகனற பாலை நிலத்தின்கண, விடுதல் வாய்நத சிவநத அம்பினையுடைய வளைநத வில்லைக்கொண்ட மறவரது நல்ல வெற்றி நிலையை எழுதிய நடுகற்கள் நிலை கொண்ட வழிகளையுடையவாய குறும்பாகள செயயும பூசலை நீககு நரைக்காறுத சுரநெறியைக் கடந்து செல்ல விருமபினீர் ஆயின், இனிய நகையினையும், மயிலிறகின் அடியெனத திரண்ட முட்போலும் கூரிய பறகளையும், சிவநத வாயினை யும், குவளையின் புதிய மலரைப் போன்ற மையுணட கண்ணினையும் உடைய மதியினைப் போன்ற ஒளி பொருந் திய நெற்றியினை உடையாள் வருந்த இபபதியை நீஙகிப் போய்த் தங்குதல் உமக்குப் பொருந்துவதாமோ? [பொருந்தாது]

—கொடி மங்கலத்து வாதுளி நற் சேந்தனார்

180 - நெய்தல்

[இரந்து பின்னின்ற தலைமகற்குக் குறை நேர்ந்த தோழி தலைமகளைக் குறை நயபபக்

கூறியது. தலைமகன் சிறைப்புறத்தானாகத் தோழிக்குச் சொல்லியதூஉமாம்.]

தோழி!

அழகு மிகுந்த மாலையை யுடைய ஆயத்தாருடன் நான் திரண்ட மணல் மேட்டில் ஏறி, மலர் நெருங்கிய சோலையில் விளையாடல் செய்து கொண்டிருக்கும் போது, ஒரு தலைவன் விரைந்த குதிரையையுடைய வலிய தேரினைச் செலுத்தி வந்து, தண்ணிய குளத்தே நிறைந்த ஒள்ளிய பூக்களையுடைய குவளையின் அரும்பினை விரித்துக் கட்டிய வண்டுகள் மொய்க்கும் மாலையினை எனது பின்னலைக் கொண்ட முதுகின்பால் தாழ்ந்திட யான் வேண்டாதே தலையிற் சூட்டி, நல்ல வளர்ச்சியை உடைய இள முலையைப் பார்த்து, ஏதோ நினைந்து பின் தாழக்காது போயினன்;

அதறகாக, இந்த ஆரவாரமிக்க ஊர், புலால் வீசும் பெரிய கழியினைத் துழாவிப் பலவகைப் பறவைகளும் ஒருங்கே தங்கியிருக்கும் முள்ளையுடைய நீண்ட இதழை யுடைய தாழையைச் சேர்ந்து புலிநகக் கொன்றையொடு பொருந்தித் தோட்டத்தில் நிற்கும் வளைந்த தாளினை யுடைய புன்னையது பொன்னையொத்த நுண்ணிய தாதினைப் பார்த்து என்னையும் பார்க்கும், இது மிகவும் நகையினைத் தருவதொன்றாகும்.

—கருவூர்க் கண்ணம்பாளனார்

181 - பாலை

[இடைச் சுரத்து ஒழியக் கருதிய நெஞ்சிற்குச் சொல்லியது.]

நெஞ்சே!

விற்பாரது நறுமணப் பண்டங்கள் நாறுகின்ற வண்டுகள் மொய்க்கும் ஐம்பகுதியாய கூந்தலினையும், மூங்கிலைப் போன்ற மெல்லிய தோளினையும் உடைய

அழ நாட்டிக்க நம் தலைவியிருந்த, மணம் நாறும் தெருக்களை யுடைய பெரிய குன்றம், ஆய் எயினன் என்பான் முருகனைப் போன்ற வலிமையொடு நின்று பகைவர் யாது காக்கும் அரண்களை வென்று கடந்து மிக்க பெரிய சேனைகளையுடைய போர் செய்தலில் வல்ல மிஞிலி என்பான் செருவின்கண் குருதியால் களம் சிவப்புறப் போர் செய்து பின் தோற்று வீழ்ந்தனனாக;

சூரியனின் ஒள்ளிய கதிர்களின் வெப்பம் அவன் உடலிற் படாது மறைய ஒரு பெற்றியே புதிய பறவைகளின் ஒலி பொருந்திய பெரிய கூட்டம் வானம் மறைய வட்டமிட்டுப் பின்பு ஒருங்கு கூடி, பூக்கள் விரிந்த அகன்ற துறைகளையுடைய காவிரியாகிய பெரிய ஆற்றில் மிக்க விசையுடன் ஓடிவரும் நீரானது நுண் மணலைக் கொண்டு திரட்டிய மேடாக்கிய வெள்ளிய மணற் குவியலையும், புது வருவாயையும் உடைய ஊர்களையுடைய செல்வமிக்க சோழ அரசரால் காக்கப்படும், உலகமெல்லாம் பரவும் தன்மை பொருந்திய நற்புகழையுடைய நான்கு வேதங்களாகிய மறை நூலை அருளிய முக்கண்ணனையுடைய பரமனது, ஆலமுற்றம் என்னுமிடத்து அழகு பெற இயற்றப் பெற்ற குளத்தைச் சூழ்ந்து சோலையின கண்ணே சிறகிலைத்து விளையாடும் சிறுமகளது அழகுறச் செய்யப் பெற்ற பாவைகளையுடைய துறையின் கண்ணே வந்து தங்குவதும், மகரக் கொடியினை உச்சியிற் கொண்ட வானைத் தோயும் மதிலையும், மூடி அறியப்படாதவாறு சேணின்கண் உயர்ந்த நல்ல மாடங்களையுடையதும் ஆகிய காவிரிப்பூம் பட்டினத்தையுடைய நல்ல சோழ நாட்டின் கண்ணதாகும்; செல்லுதற்கு அரிய காட்டிடைக் கடக்கவும் துணிவுறல் செய்பாயாய்ப் பின்னே நின்று பெயர்ந்து மீண்டிடக் கருதினையாயின் எனது இந்நிலையினை ஆண்டுச் சென்று அவட்கு உரைப்பாயாக.

—பரணர்

182 - குறிஞ்சி

[தோழி இரா வருவானைப் பகல் வர என்றது.]

அழகிய இடத்தினையுடைய வேங்கை மரத்தின் பொன் போலும் பூங்கொத்துக்களைச் சூடி, வளைய மூங்கிலால் ஆய வலிய வில்லினைத் தோளில் தாங்கி இனிய பலாப் பழத்தின் சுளையினின்றும் விளைந்த தேனைச் சிமிழ்க்கையொலி யுடன் செல்லும் அம்பினையுடைய ஏவல் இளையருடன் நிறையக் குடித்து, மிருகங்களைத் துரத்திப் பிடிக்கும் வலிய நாய் பின்னேவர வேட்டைக்குச் சென்ற குறவன், காட்டிலுள்ள மலலிகையாய் தணணிய புதர் குருதியோடு அசைந்திட முள்ளம் பன்றியைக் கொன்று வீழ்த்தும் குன்றுகளையுடைய நாட்டின் தலைவனே!

வலிய மேகம் பாம்பினை எறிந்து கொல்லும் இடியுடன் கூடிக் காற்றைக்கொண்டு நீரினைச் சொரிந்த அரை நாளாகிய இரவில் நீ தனியையாகி வந்த வழியே தத்தினை நினைந்து இவள்கண் எப்பொழுதும் நீர் கொண்டு அழா நிற்கும், அதனால், அதிரும் குரலினையுடைய முதிய குரங்கு மிளகின் தளிரை உண்டு வெறுத்து உயர்ந்த உச்சியினையுடைய நீண்ட சிகரங்களிலே தாவுவதால் உதிர்ந்த மணம் வீசும் இதழினையுடைய பூக்கள் பரந்து வேலன் வெறியாடும் பெரிய களத்தினை ஒக்கும் பெரிய மலையை அடுத்துள்ள சாரற்கண்ணே கடிய பகற்கண்ணே நீ வருதல் வேண்டும்.

—*கபிலர்*

183 - பாலை

[தலைமகன் குறித்த பருவம் வரக்கண்டு தலைமகள் தோழிக்குச் சொல்லியது.]

தோழி!

எனது குவளை மலர் போன்ற மையுண்ட கண்கள் அழவும், திருந்திய அணியையும் தேமலையும் உடைய அல்குலின் அழகிய வரி வாட்டமுறவும், அருள் செய்யாராய நம்மைப் பிரிந்து அரு நெறிகளையுடைய பரந்த பாலையைக் கடந்து சென்று வெகு தூரத்தில் உள்ளாராயினும் மிகவும் தாழ்க்காது வருவர் என்கின்றாய்; பெரிய கூட்டமாய மேகங்கள், வளைந்த அலைகளையும் குளிர்ந்த துறையினையுமுடைய பெரிய கடலில் சென்று நீரினைப் பருகியுண்ட மிகுதியையுடையனவாய் மேற்கே எழுந்து சூலுற்ற பெண்யானைக் கூட்டம் போல இடந்தோறும் தோன்றி ஒலிக்க பெய்தற்கு ஒருசேர நெருங்குக கார் காலம் காலையே வந்தது எனினும் மாலைப் பொழுதில் குளிர்ச்சி பொருந்திய பிடவினது கூரிய அரும்பு அலர்தற்குரியதாக வண்டு வாயினை நெகிழ்த்தலால எழும் அமையாத மணத்தினை முன்பனிக் காலங்களுக்கு உரிய வாடைக் காற்றானது தூற்ற பனி அலைத்தலால் கலங்கிய நெஞ்சமுடன் பிரிந்து சென்றவராகிய தலைவரின் பொருட்டு நாம் வருந்தற்குரியோம் அல்லமோ.

—கருவூரக்

184 - முல்லை

[தலைமகன் வினைவயிற் பிரிந்து வந்து எய்தியவிடத்துத் தோழி புல்லு மகிழ்வு உரைத்தது.]

சிறப்பு மிக்க தலைவனே! வெள்ளிய பிடவ மரத்தின் விரிந்த மலர் மணக்கும் முல்லை நிலத்தே குறிய கிளைகளையும் குறிய முட்களையும் உடைய கள்ளியின் புலவிய உச்சியினை மூடிய வளவிய முல்லைக் கொடியின் ஆர்க்குக் கழன்ற புதிய பூக்களை மூச்செறிதலால் ஒதுக்கித் தெளிந்த நீரைக் குடித்த முறுக்குண்ட கொம்பினையுடைய அழகிய கலைமான் புள்ளிகளையுடைய அழகிய பிணையுடன் தங்கும்

அவ்விடத்தே, களைக்கொட்டினையுடைய கையினராய்க் களையினை வெட்டி எறியும் தொழிலையுடையவர்கள். கள்ளினை நிறைய உண்டு அதனாலாய களிப்புமிகுற, செல்லும் கதிர் வெம்மை குறைந்த செந்நிறத்தினதாகிய ஞாயிற்றை யுடைய செவ்வானம் பரவிய காலத்தே, மலையின்பால் வீழும் அருவியைப் போல ஒலிக்கும் நல்ல தேரிலுள்ள மாலையாகிய மணிகள் பலவும் ஒருங்கே ஒலிக்க, வண்டுகள் ஒலிக்கும் மலர்களையுடைய காடு பின்னே போக அரிய வினையை முடித்த தலைமை மேவிய ஊக்கத்துடன் நீ இங்கு வந்து நின்றது தெய்வக் கற்புடைய குடிக்கு விளக்கம் ஆகிய மகனைப் பெற்ற புகழ் மிக்க சிறப்பினையும் நன்மையையும் உடைய தலைவிக்கே அல்லாமலும் எனக்கும் இனிமையைத் தருவதாகின்றது; நின் ஆயுள் சிறந்திடுவதாக

—மதுரை மருதன் இளநாகனார்

185 - பாலை

[பிரிவிடை வேறுபட்ட தலைமகள் தோழிக்குச் சொல்லியது.]

மேல் நோக்கி யெழுந்த தண்டினையும் சுறுகளையும் உடைய நீண்ட மூங்கில் ஆரவாரம் கொண்ட மறவரது வில்லினின்றெழும் அன்பினை விசைபாற் பிளந்திடப் பசுமை அறக் காய்ந்த பருக்கைகள் பொருந்திய இடத்தினையுடைய வேனிலான உழந்த காட்டிடத்தே மேகம் பெய்யாது ஒழிதலின் அருவிகள் இலலையாகிய உயர்ந்த சிகரங்களில் பெரிய கார்த்திகை விழாவிற்கு இடும் விளக்குகளைப் போல இலையே இல்லனவாய்ப் பலவும் ஒருங்கே மலர்ந்த இலவ மரங்களைக் கொண்டு, உயர்ந்த நிலையையும், பக்க மலையினையும் உடைய பெருமலையினைத் தாண்டிச் சென்றோராய நம தலைவர், ஆய்ந்தெடுத்த அணிகளையும் நல்ல அழகினையும் உடைய மூங்கில் போலும் நமது

தோள் ஒளி பொருந்திய வளை நெகிழும்படி மெலிந்து பெரிய அழகு கெடுமாறு செயலற்ற நெஞ்சமோடிருக்கும் நம்மைக் கைவிட்டு இரும்பினால் இயன்ற இனிய உயிரை உடையார் போல வலித்திருக்க வன்மையுடையோ ராயினார்.

—பாலை பாடிய பெருங்கோ

186 - மருதம்

[தலைமகட்குப் பாங்காயினார் கேட்ப இல் லிடைப் பரத்தை சொல்லி நெருங்கியது.]

மழைபெய்தலை வேண்டாத வறுமையுறுதலில்லாத வாழ்க்கையினையுடைய வலிய தூண்டிற் கயிற்றினை யுடைய மீன் பிடிப்போர், மீன் இரை கோத்த முள்ளினைப் பற்றியது உணராது இழுக்கும் மீன் மிக்க நீர் நிலையில் தழைத்த தாமரையின் நீர்மீது உயர்ந்த நெடிய காம்பினை யுடைய அகன்ற இலையைப் பெரிய குளம் அலையக் காற்று அடிக்குந் தோறும் பெரிய ஆண் யானையின் காது போல அசைக்கும் ஊரனால் எனக்கு உண்டாய அலரோ பெரி தாகும். ஆயினும் அவன் நட்டோர் செழித்த கொறுக்கங் கழியாலாய புணையினைத் துணையாகக் கொண்டு புனல் விளையாடும் நட்பின் அளவினதே,

அதற்கு அவன் ஒள்ளிய தொடியினையுடைய மகளிர் பழைய யாழினைப் பாடவும், மிக்க தண்மை வாய்ந்த முழவினைக் குறுந்தடியால் அடிக்கவும் தண்ணிய நறிய சந்தனம் நாறும் தோளைக் கூடி இன்னும் பிற ளிடத்தேயுள்ளான் ஆவன்; அங்ஙனமாகவும், அவன் மனைவி எம்மொடு வெறுக்கின்றாள் என்பார்; வெற்றி பொருந்திய வேலையும் மழைத்துளி போன்ற மிக்க அம் பினையும், மேகம் போலும் கரிய கேடகத்தினையும் உடைய பழையன் என்பானது காவிரி நாட்டிலுள்ள போர் என் னும் ஊரினைப் போன்ற எனது நெருங்கிய வளைகளை

உரிமையால உடைத்தலொன்றுஞ் செய்திலேன்; எனவே, யாம அவளுக்குப் பகையாவேம அல்லேம தன்னைச சோரதோரது அழகிய நெறறி பசந்திட அவர்களை ஒழிதது நீங்கும அவள கணவன தன்னுடன கூடியுறை யும பகைவனுதறகுப பொருநதுவானுவான்.

—பரணர்

187 - பாலை

[பிரிவுணர்த்திய தோழிக்குத தலைமகள் சொலலியது. தலைமகன் பிரிவினகண் தலை மகட்குத் தோழி சொல்லியதூஉமாம.]

தோழி! நமது காதலர், நமது தோள தனிமையாகல நம்முடன துயின்று பலநாள் நீட்டிதத களவுப் புணர்ச் சியை, வினையின்றி இருததறகு நாணுதல உடைமை யானே நீங்கி தூர நாட்டிலே அரிய பொருளை ஈட்டத் துணிநத நெஞசததுடன், மனையில வதியுங் கோழியின் தொங்குகின்ற தாடியைப் போன்ற தளிர்த்த ஒளளிய தளிரினையும் கரிய அடியினையும உடைய யாமரங்களை யுடைய, வேனில் வெப்பம் வாய்ந்த மலையை யடுத்த காடு காய்நதிட காட்டரணிலுள்ளார் குடியெழுநதோடிய பாழ் நாட்டின் அரிய இடததே பனங் குருக்கைத் தினனும பசிய கண்ணினையுடைய யானை ஒளளிய சுடா முதிராத இளைய ஞாயிறறையுடைய காலையிலே துயிலுமிடத்தே செயலொடுங்கி அசைநது கொணடிருக்கும நிலையானது வாள போலும் வாயினையுடைய சுறுமீனகளுளள குளிர்ந்த துறைகளை நீந்திச சென்று நாட்காலத்தே மீன் வேட்டை குறித்து எழுந்த நயமறற பரதவருடைய கடலிடத்தே பொருநதிய தோணி போலத் தோன்று நிற்கும்; மேகம் பொருநதிய பெரிய மலைகுறுககிட்ட பாலையின் கண்ணே, நெடுந்தூரம் உயர்ந்து காயநத உச்சியினையுடைய ஞெமை மரங்களையுடைய ஆள் வழக்கற்ற இடங்களில் மலையைச்

சாாநதிருந்த சிலகுடிகளேயுடைய பாக்கததே இரவில் விருநது செய்யப் பாதுகாவலாகத் தங்கித தொடர்நது சென்று நமது உயாச்சியைக கருதினா;

அதனுல், சினங்கெழுநத பகைவரது பகைப்புலம் தொலேத்த கடிய செலவினேயுடைய குதிரைகளேயுடைய நீணட கழலாற் பொலிவுற்ற தறுகணமையுடைய மழவா செய்யும் பூங்தொடை விழா என்னும விழாவின் முதல் நாளேப் போன்ற பொலிவினேயுடைய மணல் பரநத அழகிய பனோயின் முற்றம் தனிமையுறுமோ.

—மாமூலனுா

188 - குறிஞ்சி

[இரவில் சிறைப்புறமாகத் தோழி சொல்லியது.]

பெரிய கடல் நீரை முகநதுகொண்ட பெரிய கூட்டமாகிய மேகமே நீதான், இருட்சியுற்று உயர்ந்த வானிலவலமாக எழுநது சுற்றித் தோற்போர்வையுறற முரசுபோல முழங்கி, செங்கோன்மை மேற்கொண்டு அறநெறி வழுவாது செய்யும் கூறுபாட்டினே அறிநத மன்னரது அரிய போரில் மாற்ருருடன் எதிர்த்துப் போர் செய்யும பேராண்மைச் செய்கையையுடைய வீரர்கள் உறையினின்றும் உருவி வீசும் வாளேப் போலச் செறிவனவாய் விளங்கும் மின்னின் தொகுதியை உடையை ஆகி நாள் தோறும் பயனின்றி ஆரவாரம் செய்து ஒழிதியோ; அன்றி, பொன் போல மலர்ந்த வேங்கைப் பூக்களாலாய நிறைந்த மாலையைத் தரித்துப் பொலிவுற்ற தோழிகளோடு அழகு பொருந்த நடந்து தழலினேச் சுற்றியும தட்டையினேத் தட்டியும் தீயின் கொழுந்தினேப் போன்ற அசோகினது அழகிய தழையாலாய உடையினேயுடுத்தும் குறமகளாய

எம் தலைவி காக்கும் தினையினிடத்து மறையும் பொழி லையோ! வாழிய.

—வினைவிளியன் இத்தனார்

189 - பாலை

[மகட் போக்கிய செவிலி சொல்லியது.]

இனிமை வாய்ந்த பழத்தினைக் கொண்ட பலா மரங் களையுடைய காடு வெதும்ப மேகம் வானிடத்தினின்று ஒழிதலினால் வேனில் வெப்பம் மிக்க குளங்கள் தம்மிடத்தே நீர் அற்றிருக்கும் கற்கள் உயர்ந்த இடங்களில் பெரு மூச்சுத் தோன்றும் இளைய பிடியைத் தழுவிக் களிறுகள், தங்கள் முழவுகளை எடுத்து உயர்த்திக்கொண்டு வேற்று நாட் டில் நிகழும் விழாவினை நோக்கிச் செல்லும் மன்னர் களைப் போல நெறிப்படுத்திச் சென்ற கற்கள் உயர்ந்த கொடிய பக்க மலையைச் சார்ந்த சுரத்தினைச் செலவுத் துணிந்து, வயலைக் கொடியாலாகிய அழகிய தழையுடை தாழ்ந்த தொடையினையும், தேமல் படர்ந்த அல்குலினை யும் உடைய இளையளாய என் மகள் மெல்லெனத் தன் தலைவனோடு சென்று எங்கட்கு பிறள் ஒருத்தி ஆயபோது எக்காலத்தும் நினைவுமிக்க துன்பமொடு திசையெல்லாம் தேடிவந்து மனையிடத்துத் தங்கியிருந்த என்னைக் காட்டி லும் கள்ளின் களிப்பினையுடைய நல்ல பாணர்களது ஒன்று கூடி யொலிக்கும் வாச்சியங்கள் தேர் ஓடும் பெரிய தெருக்களில் அருது ஒலிக்கும் இவ்வூரானது தனது விருப்பம் மிக்கதொரு பொருளை இழந்ததாயிற்று.

—கயமனார்

190 - நெய்தல்

[தோழி செவிலித் தாய்க்குச் சொல் லியது.]

தாயே நான் கூறுவதனை விரும்பிக் கேட்பாயாக; உயர்ந்த உச்சியை உடைய சோலையில புன்னை மரத்தின் கிளையைச் சேர்ந்திருந்த புதிய நாரை நீங்கிட, முன்பு ஒரு நாள் பொங்கி வரும வாடற் காற்றுடன் அலைகள் அலைத்துக் கொண்டிருக்கவும் ஒரு தலைவன் கடலோரத்தே தேரின் வருந்தாகும உரியன் ஆயினன்; அதன் மேலும், பெரிய சுழியினையுடைய துறைமுகத்தே வலிய சுறுமீன தம உடம்பில் பொருந்தத் தாக்கி எறிந்ததாகத் தோப்பாகன செலவினை நிறுத்தலால், எழுச்சியும பயனும குன்றியன வும, பூட்டு அறிந்த செய்கையை யுடையனவுமாகிய நிரைந்த மணி மாலை பூண்ட குதிரைகள் விரைந்து செல லும செலவு ஒழிந்து தங்கினவாக, இழுமெனும ஒலியை யுடைய கானலிடத்தே சிறந்த மணலில தங்கி வேறு சிறந்த குதிரையுடன் இங்கு வந்து மயங்கிய மாலைப பொழு தில் தங்கியதும இலன.

அவனைச் சூழ்கின்ற குளிர்ந்த கண்களையுடைய நின மகள் நோக்கி அறனும் அல்லல்; அங்ஙனமாகவும, திரை யின் விளையாடி உழந்தமையால தளர்ச்சியுற்ற நிரைத்த வளையினையுடைய மகளிர் கூட்டத்துடன, மைந்தர்கள் உப்பு மேட்டில ஏறி நின்று, இருள்வரக் கரைக்கு மீண்டு வரும படகுகளை எண்ணும துறையையுடைய அத்தலைவ னொடு நின் மகளைச் சார்த்தி இந்த ஊரானது ஒப்பற்ற தன கொடுமையால அலர் கூறும்; ஆதலால் நீ அவனை வருந்தாபே

—உலோச்சனார்

191 - பாலை

[தலைமகன் தன நெஞ்சிற்குச் சொல்லிச் செலவழுங்கியது.]

என் நெஞ்சே வாழிய! பாலையிலுள்ள தூசியினை உச்சியிற்கொண்ட புதிய பாதிரிப் பூவை நெருப்புப்

போன்ற இதழினையுடைய அலரிப் பூவுடன் இடையிடையே கலந்து வெண்மை பொருந்திய தாழம் பூவின் இதழோடு வைத்துக் கட்டிய வண்டு பொருந்தியதும் கண்ணியினைத் தரித்த பொதிந்த செருப்பு ஒலிக்கும் அடியினையும், கோலினையும் உடைய உப்பு வாணிகருடைய ஊர் திரண்டு வந்தாலொத்த வண்டிகளை இழுத்து ஏறுதற்கு அரிய மேடுகளையுடைய காட்டில் ஏறிவந்த, தளர்வில்லாத வலிய தாளினையுடைய செவ்விய எருதுகளின் ஒலிக்கும் வளைந்த மணிகளின் ஒலி அவர்கள் வாயினை மடித்து எழுப்பும் சீழ்க்கை யொலியொடு விரைந்து எதிரே சென்று ஓமை மரங்களையுடைய பெரிய காட்டில் வரும் புதியராய வழிச் செல்வார்க்குப் பாதுகாவலைக் கூறும் வெப்பம் மிக்க கொடிய காட்டிலே அரிது ஈட்டும் பொருளை விரும்பி நம் தலைவியைப் பிரிந்து உறையும் வன்மையுடையாய் சென்று பொருள் ஈட்டும் வினையை எண்ணுவையாகில், உறுதற்கினிய மென்மைத் தன்மையையும், முல்லை மலரை நிறையச் சூடி மென்மைத் தன்மையை யுடையவாகி கருமணல் போல விரிந்த தழைத்த கரிய கூந்தலையுமுடைய நம் தலைவி தெளிந்திருப்பாள் என்று பிரிவுணர்த்தும் வலிய சொற்களைக் கூறவும் வன்மையுடையையோ? வல்லையாயின், அவளிடத்தே சென்று பெரிதும் கூறி அவளைத் தேற்றுவாயாக.

—ஓரோடோகத்துக் கந்தரத்தனார்

192 - குறிஞ்சி

[தோழி தலைமகனைச் செறிப்பு அறிவுறீஇ இரவுக்குறி மறுத்தது.]

வலிய மேகத்துடன் இடி தங்குதல் கொண்ட உயர்ந்த உச்சியையுடைய பெரிய மலைநாட்டையுடைய தலைவனே! வானிலுள்ள எய்யப் பெறாத அழகிய வில்லைப் போன்ற பசிய மாலையினையும், சிவந்த வாயினையும்

உடைய சிறிய கிளி, தினை சிதையும்படி கொய்து சுமக்க லாற்றாது போட்ட புல்லிய புறத்தினையுடைய பெரிய கதிரினை வளைந்த சிறகுகளையுடைய கானங்கோழி தன் இனத்துடனே கவர்ந்துண்ணுமாறு தினையும் விளைந்த கதிர்களை ஈன்றன; பாதி இரவில நீ வந்து அளிப்பாய என்று கூறின் பெரிய மலையின் இருள் பொருந்திய குகையின் இடங்களைத் துழாவி வரைப்பு அருவி கொண்டுவந்த பாம்பு உமிழ்ந்த அழகிய மணி பெரிய மலையிலுள்ள எமது சீறூரின் தெருவினை இருளகற்றி விளங்கச் செய்தலாலே நின் மார்பின் கூட்டத்தினை தழுவியும் இருந்தாள ஆவள்; இளைய மதியினைப் போன்ற முளைத்து குற்றமற்ற ஒளி பொருந்திய நெற்றி பொன்னினைப் போன்ற நிறத்தினைக் கொண்டது, அந்தோ! எங்ஙனம் ஆகுவளோ, இரங்கத் தக்காள்.

—பொதும்பில் கிழான் வெண்கண்ணனார்

193 - பாலை

[பொருள் வலித்த நெஞ்சிற்குச் சொல்லித் தலைமகன் செலவு அழுங்கியது.]

நெஞ்சே! உயர்ந்த காட்டினிடத்தேயுள்ள கவர்த்த வழிகளை அன்றி மழையை வேண்டுதலில்லாத வில்லாகிய ஏரால் உழுதலைச் செய்யும் ஆறலைப்போர் தம் சுற்றத்தாருடன் எழுநாளிற் கிடைத்த நன்னாள் வேட்டத்தில் அவர்கள் போர் செய்த களத்தில் வழியில் செல்வார் உடம்பினின்றும் சிந்திய குருதியை உண்டமையால் சிவந்த வாயினையும் பொரித்து வைத்தாற் போலும் வெண்மை நிறம் வாய்ந்த கழுத்தினையும், செய்து சூட்டியது போலும் சிவந்த செவியினையும் உடைய பருந்து, குறிய மலையிடத்து வளர்ந்த நெடிய அடியினையுடைய யாமரத்தின் அரிய கவட்டினின்றெழுந்த உயர்ந்த கிளையிலுள்ள தன் குஞ்சினை உண்பிக்க விரைதலினாலே அக்

குஞ்சின் வாயினின்றும் தவறி விழுந்த கொழுமையுற்ற கணைஞ்கிய ஊனின் துண்டு பழைய பசியினையுடைய முதிய நரிக்கு உணவாகும் காடுகள் நாம் செல்லுதற்கு மிகவும் எளியனவே, ஆயினும், நமது நல்ல மலையின் கண்ணுள்ள, பல மாணபும் பொருந்திய மென்மைத் தன்மையினையும் இனிய மொழியினையும் மயிலிறகின் அடிப்பாகத்தைப் போன்ற பற்களையும் உடையாளுமாகியோ ளாய நம் தலைவியின் பெரிய தோளின்பால் எய்தும் இனிய துயிலினைக் கை விடுதலை ஆற்றேன்.

—மதுரை மருதனிள நாகனார்.

194 - முல்லை

[பருவங் கண்டு ஆற்றாமை மீதூரத் தலை மகள் சொல்லியது.]

தோழி! போர்மிக்கு மூண்டதாகக் கொடுஞ்சி பொன்னும் உறுப்பினையுடைய நெடிய தேரிற் பூட்டப் பெற்ற விரைந்த செலவினையும், விரிந்த பிடரி மயிரினையும் உடைய நல்ல குதிரையைச் செலுத்தி இன்ன போழ்தில் வருவேம் என்று நம் தலைவர் தெளிவித்த காலம், பெரிய மழை பெய்த இருள் பெரிதும் புலர்ந்த காலைப் பொழுதிலே ஏர் களால் இடமுண்டாக உழப் பெற்ற பெரிய வயல்களையும் கீழ் மேலாகப் புரண்ட புழுதியையும் உடைய செம்மண் நிலத்தின் ஈரம் பட்ட செவ்வியில் ஊனைக் கிழித்தாற் போன்ற செவ்விய மேட்டு நிலத்தைப் பிளந்து சென்ற நெடிய படைச் சாலிலிட்டது விதைத்த இடங்களில் விதைகள் பலவும் முளைத்து வளர, நல்ல கலைமானின் கூட்டம் பரந்தன போலக் கோட்டினையுடைய முலைக் குடையைத் தலையிற் சூடிய கொல்லை உழவர் ஒலிக்கும் பறையின் ஒலியோடு பயிர்கள் விளையும்படி ஒதுக்கிக் களையைப் பறித்துத் தூய்மை செய்த பெரிய கொல்லையில் விளைந்த வரகின் கவைத்த கதிர்களின் கரிய புறத்தினைப்

பற்றியுண்ட குறை பொருந்திய தலையினையுடைய நீண்ட கரிய மாலை அடுத்த போகையினை விரித்து இன்பம் உற, கொல்லையை உழும் வினைஞர்கள் கூழ் உண்டற்கு நிழலாக விட்டு வைத்த பசிய இலையினையுடைய குருந்த மரத்தின் பிளந்த கிளையிலிருந்து கிளிகளை ஓட்டும் மகளிர் போல ஒலி உண்டாக அகவும் கார்காலம் ஆகிய இதுவே யாகும்: அப்பருவமாகவும் அவர் தூதும் வந்திலரே.

—இடைக்காடனார்

195 - பாலை

[மகட் போக்கிய தாய் சொல்லியது]

அரிய காட்டு வழியைக் கடந்து சென்ற பெரிய தோளினையுடைய ஆண்மையையுடைய என் மகள் திருந்திய வேலினையுடைய தலைவனோடு வரும் என்று அவள் தாய் புறக்கடையில் செய்யப்பட்ட பூப் பந்தலின் முற்றத்தே மணலைப் பெய்து மாலைகளைத் தொங்கவிட்டு மகிழ்ச்சியோடு மனையின்கண் கோலம் செய்யுமாறு ஆகும்; யாரும், பெண் மானை யொத்த பார்வையையுடைய பண்பமைய வாய்த்த அவளை என்னின் நீங்கு மாறு அன்பு பாராட்டி அருள் செய்யாது குறிப்பும் இனிய நகையுடன் கூடிய பற்களையுடைய அவளை; பாங்கரின் கடந்து வாரி பராவித்து மருங்கிலே ஏற்றிப் பாதுகாத்த நகையை பொருந்திய உதவியும் பெரிதும் உடையன் ஆவேன்: அவன் அதனை அறியும் தன்மையான்;

ஆடை தூங்கும் பெரிய உச்சியினையும் சிறிய பை தொங்கவிட்ட பெருத்த தலையையுடைய வளைந்த கோலினையும் உடையவர் மேல் செல்வதனை அறிந்து கூறும் அறிவு வாய்ந்த வேலனே!

இரவில் உறங்காது துன்பம் அடையும் நீருடன் கலங்கி அழுத எம்முடைய கண்கள் இனிது உறங்கும்

பொருட்டு எமது இலலினகனை முறபடக் கொணாந்து தருமோ, அன்றி, தன இலலின்கண் முறபடக் கொண்டு செலவாளுே அததலைமகன் உட்கோள யாதோ கழறுகின் திண்ணிய குறியைக கூறுவாயாக.

—சயமஞர்

196 - மருதம்

[பரதவையிற பிரிநது வந்த தலைமகற்குக கிழததி சொலலியது]

நெடிய கொடிகள அசையும் கள மலிந்த பாக்கத்திலே விடியறகாலை வேட்டத்துக துறைககண அகப்பட்ட பெரிய அகட்டினையுடைய வரால மீனின் துண்டததினை விறறுக களளுண்டு ஆடி மீணடும வேட்டம போதலை மறநது உறஙகிக கிடககும் களைவ மார்க்கு அவரவா மனைவியராய பாண் மகளிா ஆமபலது அகனற இலையில விருபபம தரும சோறறைப பிரம்பின் முளியுடன் கூடிய புளிபபினையுடைய திரண்ட பரதநினைப் பெயது விடியற காலத்தே இடும் ஊரனே!

தன தந்தையின் கண்களைக் குருடாககிய குற்றத்திற்காக நெடு மொழியினையுடைய கோசர்களை விரைந்த தேரினையுடைய திதியனது அழுந்தூர் என்னும் நகர் அச்சம உணடாகக கொல்வித்து மாறுபாடு நீர்ந்த அன்னி மஞிலி எனபானைப் போலக் களிப்புற்று நடக்கும் நின் நலததிற்குத தக்காளாய பரததையைத தழுவிய மார்பனைத தீண்டேடம எமமை அணுக வாராறக.

—பரணா

197 - பாலை

[பிரிவிடை வேறுபட்ட தலைமகளைத் தோழி வறபுறீஇயது]

தோழி வாழி! கரிய குவளை மலரின் அழகினை இழந்த கண்களும, அழகு நெகிழ்ந்து திரைந்து அணைபோனற

மெலிந்த தோள்களும் கொண்டு, நன்மையுடைய ஆய மகளிர் விரும்பி ஆராயும் பழைய நலத்தினை இழந்தத னாலாய துயரத்துடன் சிறிதும் வருந்தாதே; தோள்களில் தாழ்ந்து இருண்ட திரண்ட பெரிய கூந்தலையுடைய மனைவியைத் தழுவியுள்ள மேம்பட்ட தலைவன் மாறாயில புலம்பிய தலையையுடைய புதல்வன் ஏறி இறங்குவது போன்று நிறைந்த சூலினையுடைய இளைய பிடியினைத் தழுவிக்கிடந்த வெள்ளிய கோட்டினையுடைய இனத் துடன் கூடிய களிறு கன்று தம்மீது ஏறி இறங்கப் படுத் திருக்கும் சுரநெறியைக் கடந்து ஒளி பொருந்திய பூங் கொத்துகளையுடைய கொன்றை மரங்களையுடைய ஓங்கிய மலையை யடுத்த வழியில் பொருளீட்டும் வினையை வற் புறுத்தும் நெஞ்சத்தால் வளையல்கள் நெகிழும்படி நம மைப் பிரிந்து சென்ற தலைவர், போர் செய்ய முற்பட் டோரை ஓட்டிய வலிமை மிக்க வீரச் செல்வத்தினையும் வீரம் மிக்க படையினையும் உடைய கண்ணன் எழினி என்பானது முதுகுன்றத்தினைக் கடந்துள்ளாராயினும் நீட்டித்திராது விரைவில் வருவார்,

—மாமூலனார்

198 - குறிஞ்சி

[புணர்ந்து நீங்கிய தலைமகளது போக்கு நோக்கிய தலைமகன் தன் நெஞ்சிற்குச் சொல்லியது.]

என் நெஞ்சே! நம் உள்ளத்தில் மறைந் துறையும் காமத்தினை இவளுக்குக் கூறுவமோ அன்றிக் கூறாது விடுவேமோ என்று இங்ஙனம் எண்ணி எண்ணி முடிவில் அடக்கவியலாது நாம் வெளியிட்டிரங்கிய இனிய மொழியை விரும்பிப் பாதியிரவில் பெய்யும் மழை யில் மறைந்து கார்காலத்து மணம் வீசும் கூந்தலுடன், தொழில் திறம் அமைந்த ஆடைதன் உடம்பின் கண்ணே

பொருந்தப் பெற்றவளாய் மலையிடத்துள்ள இளமுகில் சூழ்ந்த மடப்பத்தையுடைய மயில் போலக் குளிர்ந்த மலர் களைச் சூடி வில்லினைப் போலும் வகையமைந்த நன்மை பொருந்திய குடச்சூல் ஆகிய அழகிய சிலம்பினை ஒலியாது அடக்கி அச்சத்துடன் வந்து ஊர் முழுதும் உறங்கும் நடு இரவில் நம்மைத் தழுவிச் செல்வோள், நிறைந்த கற்பினால் உயர்ந்த பெருமையுற்ற அழகியமாமை நிற முடைய பெண்ணோ அல்லள். தெறுகின்ற கள் உள்ள தாகிய ஆய் என்பானது நல்ல நாட்டில் தெய்வத்தை யுடைய மலையில் கவிரம் எனும் பெயரையுடைய அச்சம் பொருந்திய பக்க மலையில் மெல்லிய மலர்களையுடைய நிறைந்த சுனையில் உறையும் சூரரமகளேயாவள் எனபேம

—பரணர்

199 - பாலை

[பொருள் கடைக்கூட்டிய நெஞ்சிற்குத் தலைமகன் சொல்லியது.]

நெஞ்சே! கரையினிடத்தே பாயும் வெள்ளிய அலை யைப் போன்ற வரிசையாக வரும் காற்று மோதுதலின் பலவும் ஒருங்கே சேர்ந்து பாறையில் உதிர்கின்ற மலையின் கண் பொருந்திய வெண் கடம்பின் முற்றிய மலரை மழை யென்று கருதி நீர் வேட்கையால் வருந்துதலையுடைய யானை அதனைத் தணித்தற்குச் சென்று சுழலச் சிலம்பினால் பின்னப் பெற்ற வறிய சினையினையுடைய வற்றல் ஆகிய அசைகின்ற மரங்களின் அறல்பட்ட நிழலில் தங்கி வாடிய மாலைக் கவவிய செயலற்ற கூட்டத்தில் புகுந்து, அரத்தால் அராவப்பட்ட ஊசியின் இரண்டு முனையை யொத்த உறுதி வாய்ந்த பறகளையுடைய செந்நாய் தாக்கு தலின் காற்றின் முள் பூளைப்பூவென விரைந்து அலறி யோடிய காலுதொழிந்த தன் இனமாய மான் கூட்டத்

தைக் கூட்டிற்குக் கலைமான ஞாயிறு மறைந்த மாலைக் காலத்தில் தனது ஆணைக்குரல் தோன்ற அழைக்கும் கடல போன்ற அகன்ற காடு பின்னே போக, ஏதிலாரைப் போல நம் தலைவியைப் பிரிந்து போவேமாயின் எமது போக்கு நன்றாகும் என்றெண்ணும் பொருளாசையுற்ற நின் உள்ளம் தளர்தலின்றிச் செலுத்த நீ செல்லுதற்கு உரியை ஆவாய்;

யானையின் முழங்காலைப்போல வளைந்தனவாகிய திரண்ட பெரிய தோளினையுடைய நம தலைவி இங்கே தனித்திருக்க, வென்று வெற்றியினைத் தந்த வாய்த்த வாளினையுடைய களங்காய்க் கண்ணி நார் முடிச் சேரல் என்னும் சேர மன்னன் மேற்கினைக்கணதாகிய பெருந்துறை என்னுமிடத்தில் நிகழ்ந்த போரில் பொற்பூண் அணிந்த நன்னன் என்பவன் போர் செய்து களத்தில் மடிய, தான் முன்பு இழந்த நாட்டைப் பெற்றாலொத்த பெரிய செல்வத்தைப் பெறுவதாயினும் வருவேனோ அல்லேன்.

—கல்லாடனார்

200 - நெய்தல்

[தலைமகள் குறிப்பறிந்த தோழி தலைமகற்குக் குறை நயப்பக் கூறியது]

சங்குகள் மேயும் கடற்பரப்பினையுடைய தலைவனே! நிலாவைப் போல விளங்கும் மணல் மிக்க தெருவிலுள்ள பனை மட்டையால் வேயப்பெற்ற குடிசைகளையுடைய புலால் நாறும் சேரியாயது எம்மூர், ஓர் ஊர் என்று உரைக்கலாகாத சிறுமையினதாய் நீர் சூழப்பெறாப் பொலிவற்ற உறையுளை யுடையதாயினும் இன்பம் தருமாற்றால் ஒரு நாள் தங்கியிருந்தார்க்கும் பிற்றை நாள் தம்முடைய பதியினையே மறந்திடச் செய்யும் பண்பினையுடைமையால் எமது அப்பதிக்கு வந்து செல்வாயாக;

பொலிவுற்ற ஒலிகரும் அலை விரைந்து சிதர்ந்திடும் மரம் ஓங்கிய ஒருபக்கத்தே பலவாய நின் குணங்களை யாங்கள் பாராட்டப் பகற் பொழுதினை எம்முடனிருந்து கழித்து இரவு வருங்கால் நுமது நல்ல தேரினைப் பூட்டிச் செல்லுதற்கும் உரியீராவீர்; அதுவுமேயன்றி நீர் இல் எம் பதியில் தங்கிச் செல்வீராயின் யாங்களும் எங்களுக்கு இயன்ற அளவில் பேணுதல் செய்வோம், இது நும் கருத்திற்கு இசைவதாமோ எமக்குக் கூறுவீராக.

—உலோச்சனார்

201 - பாலை

[பிரிவிடை வேறுபட்ட தலைமகட்குத் தோழி சொல்லியது]

தோழி வாழி! நான் கூறுவதனைக் கேட்பாயாக; பொன்னினாலாகிய அழகிய நெற்றிப்பட்டத்தினை அணிந்த போர்ச் செயலில் பயின்ற யானைகளையுடைய போரில் வெற்றி கொள்ளும் பாண்டியனது புகழ் மிக்க சிறப்பினை யுடைய கொற்கைப் பதியின் கடல் துறையிலே விளங்கும் ஒளியினையுடைய முத்துக்களுடன் வலம்புரிச் சங்கினையும் சொரிந்து, தழையுடை அணிதலாற் பொலிவுற்றுப் பக்கம் உயர்ந்த அல்குலினையும் உடைய பழையபடித்து பெண்டிர் குளிர்ந்த துறைக்கண் தெய்வத்தினை வணங்க, ஞாயிறு மறைந்த அந்தியாகிய அரிய போழ்திலே அச்சம் பொருந்திய பெரிய கடலானது நிறைமதி நாளில் ஆரவாரித்தெழுந்தாற் போல ஊரார் கூறும் அலரும் மன்றினைக் கண் பரவியது; தாயும் கண் உறங்காளாய்ப் பெருமூச்செறியும் என்று இங்ஙனம் கூறி ஏன் செயலற்றனை?

தோழியே! பழையதாகிய வானில் ஓங்கிய உச்சியினை யுடைய மலையின் சாரற்கண்ணே பெரிய கையினையும் பிளந்த வாயினையும் உடைய ஆண் கரடி இருளைத் துணித்து வைத்தாற் போன்ற திரண்ட மயிரினையுடைய

குட்டியுடனும் திரங்கிய முலையினையுடைய பெண் கரடியுடனும் மயங்கியிருக்கும் வெம்மை மிக்க பாலை நிலத்தைக் கடந்து சென்ற நம் தலைவர், சோழ மன்னரது வெண்ணெல் விளையும் ஊர்களையுடைய நல்ல நாட்டினையே பெறுவதாயினும் அங்கே மனமுவந்து தங்கி விடுவார் அல்லர்.

—மாமூலனார்

202 - குறிஞ்சி

[இரவுக் குறிக்கண் வந்து நீங்கும் தலைமகற்குத் தோழி சொல்லி வரைவு கடாயது.]

விளங்கும் வெள்ளிய அருவியினையுடைய மலையின் சாரற்கண்ணே மெல்லிய தலையினையுடைய இளைய பெண் யானை தன் இனத்துடன் கூடி இன்பமடையப் புலியாகிய பகையை வென்ற புள்ளி மிக்க ஆண் யானை கற்களை இடத்தே கொண்ட பக்க மலையில் கையை உயர்த்திப் பெருமூச் செறிதலால் வேங்கை மரத்தினது நல்ல கொத்துக்களிலுள்ள நறுமணமுடைய பூக்கள் கொல்லன் துருத்தியை மிதித்து ஊதும் உலையிற் பிறந்து எழும் தீப் பொறி போலப் பொங்கி எழுந்து சிறிய பலவாய மின்மினிப் பூச்சிகளைப் போலப் பலவும் ஒருங்கே நீலமணியின் நிறத்தினைப் போன்ற பெரிய புதரில் பரவி வீழும் நாட்டையுடைய தலைவனே!

நடு இரவில் பாம்பினது புள்ளிகளையுடைய படம் பொருந்திய தலை துணிபட வலிய இடியானது முழங்கும் அச்சம் வரும் அகன்ற இடத்தே ஊக்கம் குன்றுதலில்லாத உள்ளத்துடனே வேலே துணையாகச் செறிந்த இருள் பரவிய கற்களையுடைய வழியாகிய ஒடுங்கிய நெறியில் துன்பத்தை ஆராயாது வரும் நின்னிடத்துப் பொறுத்தற்கரிய

துன்பமாகிய அரிய நினைவினை நீந்துவோர் எம்மையன்றிப் பிறரும் உளரோ. (இலலை)

—ஆவூர் கிழார் மகனுர் கண்ணனுர்

203 - பாலை

[மகட் போக்கிய செவிலித்தாய் சொல்லியது.]

உடன்பாடு அடைவாளா ஆயினும் மாறுபடுவாள் ஆயினும் தாய் ஆய்ந்து உணர்க என்று கருதாராய்க் கொடிய வாயால் அலர் கூறும் தொழிலையே விரும்புதலுடைய புறங்கூறும் பெண்டிர்கள் நின்மகள் இன்ன தன்மையள் இன்ன தன்மையள் என்று பலநாளும் என்பால் வந்து கூறவும் இவள் நாணுவாள் என்று எண்ணி அவளுக்கு உரைத்தல் செய்யேனாய் மிகவும் மறைத்தொழுகும் யான் இந்த வறிய மனையிலே ஒழிந்திட, என்மகள், என் அன்னை அறியின் இந்த தலைவனுடன் களவிற் கூடியுறையும் வாழ்க்கை எனக்கு எளிய தொன்றாதல் இல்லை என்று எண்ணினமையால், கழலினை அணிந்த காலையும் மின்னலைப் போல ஒளிவிடும் நீண்ட வேலையும் இளமைப் பருவமும் உடைய தன் தலைவன் முன்னே ஏக, பல மலைகளையுடைய அரிய காட்டினைக் கடந்து சென்ற அவளுக்கு யான் அத்தன்மையினேன் அல்லாமை பிறக்க உண்மையாதல் தோன்ற விலங்குகள் செல்லும் நெறிகள் பின்னிக் கிடக்கும் மலையடியிற் சிறிய நெறிகளில் இடையூறு ஒன்றும் உண்டாகாதவாறு அவர்கட்கு முன்னரே சென்று சேர்ந்து பொலிவுற்றிருக்கும் பெரிய மலையைச் சார்ந்த தனிமை கொண்ட சிறிய ஊரில் வரும் விருந்தாக ஏற்று அவர்களை உண்பித்துத் தங்குமிடத்தில் இருக்கச் செய்ய, புன்னைகள் தளிர்க்கப் பெற்று அசைந்திடும் கொச்சி சூழ்ந்த மனைக்குரிய பெண்டாக யான் ஆவேனாக.

—கபிலர்

204 - முல்லை

[வினை முற்றிய தலைமகன் தேர்ப்பாகற்குச் சொல்லியது.]

பாகனே! உலகம் முழுவதும் நிழல் செய்த கெடாத வெண் கொற்றக் குடையினையும், கடல் போன்ற சேனையினையும், செருக்கிய குதிரையினையும் உடைய பாண்டியன் போரில் முயன்று வென்ற அகன்ற பெரிய பாசறைக்கண்ணே சென்று வினையை வெற்றி பெற முடித்தோம் ஆதலானும், கார்காலத்தின் மழையை ஏற்றுக் கொண்டு காண்பதற்கு இனிய காட்டில் கூட்டம் கூட்டமாக வரும் அழகிய சிறகினையுடைய வண்டினம் [illegible] மணம் வீசும் முல்லை மலரில் மாலைக்காலத்தே ஆரவாரிக்க அதோ கார்காலம் வந்துவிட்டது, ஆதலானும் வெண்ணெல்லை அரிவோர் தோல் மடங்கிய வாயினையுடைய கிணையின் ஒலி பல மலர்களையுடைய குளத்தில் பொருந்திய பறவைகளை ஓட்டும், விளைந்த நெற்களையுடைய வயல்களையுடைய வாணனது சிறுகுடியிலுள்ள சோலை போன்று மணக்கும் கூந்தலினையும், ஒளி பொருந்திய வளையலையும் உடைய நம் தலைவியின் தோள் இணையை முயங்குதற்கு இப்பொழுதே நினைத்து நல்ல தொழில் திறம் அமைந்த நீண்ட தேரை விரைந்து செலுத்துவதாக.

—மதுரைக் காமக் கணி நப்பாலத்தனார்

205 - பாலை

[தலைமகன் பிரிவின்கண் வேறுபட்ட தலைவி வற்புறுக்கும் தோழிக்குச் சொல்லியது.]

தோழி! நம் தலைவர் உயிருடன் கலந்து பொருந்திய பல பிறவிகளிலும் தொடர்ந்து வரும் நட்பினால் குற்ற

மற்ற நெஞ்சத்தால் கலந்தோரா போல, பெண்ணே! நின்னிடத்தினின்று யான் பெரியேன் என்று பொய்ம் மிக்க உள்ளத்தால் யான் விரும்புமாறு கூறி உறுதி யில்லாத கொள்கையினராகி இப்பொழுது துன்ப மிக்க வருத்தத்தால் நமது நெற்றியிற் பசலை பரக்கவும் நாம் அழவும் நம்மைப் பிரிந்து சென்றனராயினும், மழையைப் போன்று பனி பெய்யும் முன்பனிப் பருவத்து மயக்கத்தினைத் தரும் இருள் நீங்க, மூங்கில் மரங்களின் நிழல் பொருந்திய பக்க மலையில் மதகளிற்றினது கவுளின் பக்கத்தினை யொப்ப நீர் ஊறாநது இறங்கும் அழகிய உச்சி மலையில் புலியின் வரி பொருந்திய தோலை யொப்ப மணநாளைக் காட்டும் பூக்களாய வேங்கையின் நறிய பூக்கள் உதிர்ந்திடச், செருக்கு மிக்க அவ்வேங்கையின் மேல் நோக்கிச் செல்லும் பெரிய கிளையில் ஏறிக், கூட்டமாய ஆண் குரங்குகள் தம் இனங்களைக் கூப்பிட்டுத் தாவும் குன்றிடையே செல்லும் சிறிய நெறியாகிய கற்கள் விளங்கும் அரிய இடங்கள் குறுக்கிட்ட மொழி வேறுபட்ட தேயங்களிலுள்ள பாலையைக் கடந்து சென்ற அவர், உண்மை நிலை பெற்ற நெடுந் தூரத்து விளங்கும் நல்ல புகழினையுடைய செல்வம் மிக்க கோசர்களது சிறப்புப் பொருந்திய படையினை அழித்து அவர்கள் நிலத்தைக் கைக்கொள்ள விரும்பிய சோழனது மலர்கள் விரிந்த நீண்ட கழியின் நடுவே தோட்டங்களை யுடைய பெரிய புகழையுடைய காவிரிப்பூம் பட்டினத்தைப் போன்ற செழுமை பொருந்திய நம் இல்லில் நல்ல விருந்தினர்களை ஓம்புதற்குச் சிறந்த பொருளை எளிதினில் அடைவாராக.

—நக்கீரர்

206 - மருதம்

[வாயில் வேண்டிச் சென்ற விறலிக்குத் தலைமகள் வாயில் மறுத்தது.]

தோழி! நல்ல மகிழ்ச்சியுடன் பேடியாகிய பெண் உருவம் பூண்டு ஆடுவானது பின் சென்று மேல் வளைந்த கையைப் போன்ற விளங்குதலுறப் பெருத்த முறுக் குண்ட கொம்பினையுடைய எருமையின் மயிரால் அழகு பெற்ற கரிய தோலினையுடைய பெரிய முதுகில் குறுந் தொழில்களைச் செய்யும் சிறுவர்கள் ஏறி, வெகு தூரத்தில் உள்ளவர்களுக்கு உருண்டைக் கல்லின்மீது மந்தி போலக் காணப்படும் ஊராகிய நம் தலைவன், மாரிக் காலத்து ஈங்கைச் செடியில் தோன்றும் சிறந்த தளிரினைப் போன்ற மாமை நிறத்தினையுடைய மேனியினையும் ஆய்ந்த அணியினையும் உடைய பரத்தையராது முத்து மாலையை ஏந்திய பரந்த முலையினையுடைய மார்பகத்தே, அமையாத காதலுடன் பூமாலை இடைப்பட்டுக் குழையை எப் பொழுதும் விழாவினையுடைய பெரிய மனையில் மணத் தினைப் பொருந்துதலுடையனாதலின், அச்செயலினை வெறுத்துப் போர் செய்வதில் திறமை மிகுந்த வேளிர் களுக்கு உரிய வீரை என்னும் இடத்திலுள்ள துறையின் முன்னிட்டதே நீண்டு கிடக்கும் அளவில் அடங்காத வெள்ளை உப்பின் குவியல் மிக்க மழையால் உருகினாற் போல எனது மென்மையான தோள்கள் மெலிந்து அழகிய வளையல்கள் நெகிழப் பெற்றன; இவ்வாறாகவும் இவ் விறலியின் கூற்று யாதெனப்படும்.

—மதுரை மருதனிள நாகனார்

207 - பாலை

[மகட் போக்கிய செவிலித்தாய் சொல்லி யது.]

கடல் நீர் பரவி உப்பு விளையும் வயலில் நீர் காய்ந்த தன்மையால் வேறாகிய வெள்ளிய உப்பாகிய அமிழ்தினை மேற்குத் திசையிலுள்ள இடங்கட்குச் செலுத்தும் பொருட்டு நிமித்தம் பார்த்துப் படைக் கலங்களை அமைத்

துக் கொண்டெழுந்த பெரிய வீரச் செயல்களைப் புரியும் ஆடவா, அடுக்கிய உப்புப் பொதியாகிய சுமையினையும், வெள்ளிய புறத்தினையும் உடைய கழுதைகளின் தேய்ந்த குளம்பு உதைத்தலால் பரற் கற்கள் பிறழ்ந்து கிடக்கும் வழியாகிய கொடிய பாலையினை ஊடறுத்துச் செல்லும் அச்சம் தோன்றும் கவாத்த நெறிகளில், வண்டுகள் பொருந்தும் மதம் கரந்தொழிந்த கன்னத்தினையுடைய வெயில் நலிதலால் வருந்திய நீண்ட கொம்பினையுடைய களிற்றின் சருச்சரை அழிந்த பெரிய கை நீர் வேண்டித் துழாவிப் பார்த்த கிணற்றினை அறம் இல்லாருகிய தன் தலைவன் தோண்டுதலால் ஊறிய தெளிந்த உவரையுடையதாகிய குறை குடமாக முகக்கப்பட்ட நீரை, தேனைப் பெய்து நன்கு கலந்த இனிய பாலை ஏந்திக்கொண்டு கூந்தலைக் கோதி தாழ்ந்த நய மொழிகளைக் கூறவும் மறுத்துரைப்பாள் ஆகி வெறுப்புற்ற உள்ளத்துடன் அதனை உணர்ந்தவளாகிய என்மகள் வெப்பத்துடன் மூச்செறிந்து பிறைமதி போன்ற நெற்றி வியர்த்திடப் பருகினளோ!

—மதுரை எழுத்தாளன் சேந்தன் பூதனார்

208 - குறிஞ்சி

[புணர்ந்து நீங்கும் தலைமகன் தன் நெஞ்சு சிறக்கச் சொல்லியது.]

நெஞ்சே! விடியற் காலையில் நீண்ட கடை வாயிலில் நின்று தனது மலையினைப் பாடுகின்ற சிறந்த புலமையுடைப் புலவர்கள் விரும்பின, வெள்ளிய கொம்பினையும் தலையையும் உடைய யானையை வழங்கும் வண்மையாலாகிய மகிழ்ச்சியினையும் அருள் பொருந்திய வாழ்க்கையினையும் உடைய வெளியன் வேண்மான் ஆஆய் எயினன் என்பான் பாழி என்னும் ஊரின் கண்ணதாகிய போர்த்

களத்தே ஓடையை அணிந்த யானையினையும் இயன்ற தேரினையும் உடைய மிஞிலி என்பானோடு நண்பகற் பொழுதிலே செய்த போரின்கண் ஒள்ளிய வாட்படை மயங்கிய போரிலே புண்மிக்கு வீழ்ந்தனனாக;

அழகிய இடத்தையுடைய வானில் விளங்கிய ஞாயிற்றினது ஒளி பொருந்திய கதிர் அவன் உடலைக் காய்தல் செய்யாது; பறவைகள் பலவும் ஒருங்கு கூடித் தமது சிறகுகளால் பந்தரிட்டு நிழலை உண்டாக்கிச் சூழ்ந்து கொண்டிருந்ததனை யான் கண்டேனென்று; அவன் இறந்து பட்ட போர்க்களத்தைக் காண்பதற்குச் செல்லாளாய்க் கோபம் மிக்க அச்சம்தரும் போர்ச் செயலினைக் கொண்ட நன்னன் அருளின்றி மறைந்து கொள்ள, மிக்க விரைவு கொண்டு வந்த வேளிர் மகளிர் மலர்களால் ஆகிய அழகிய மாலைகளை அறுத்துவிட்டுச் செய்த அழுகை ஆரவாரத்தினை; பழி நீங்க மாறுபாடுடையினை வெல்லும் பெரிய சேனையினையுடைய அகுதை என்பான் நீக்கினாற் போல, ஓரி என்பானுக்குச் சொந்தமான கொல்லி மலையில் கார் காலத்துப் பூக்கும் மலரினைப் போன்று மணம் வீசும் அழகும் மென்மையும் பொருந்திய கூந்தலையுடைய மாமை நிறத்தினளாய நம் தலைவி, உடன்போக்காகிய அணையில் தடைப்பட்டு நில்லாத மிக்க வெள்ளத்தைப் போல நாணத்தின் எல்லையில் அடங்காத காமம் பொருந்தப் பெற்று வந்து நம் துன்பினை நீக்கி அருள் செய்தனள், வாழ்வாளாக.

—*பரணர்*

209 - பாலை

[பிரிவிடை வேறுபட்ட தலைமகளைத் தோழி வற்புறீஇயது.]

தோழி! எனது தோள்களும் அழகு கெட்டன, நாள் தோறும் அன்னையும் அரிய துயரினை மேவினள், ஊரில்

எழும அலாதான் பாணடியா பெருமாளுகிய நெடுஞ்செழி யன தனனோடு பகைததத எழுவரையும முறற வென்ற தலையாலஙகானதது எழுநத வெறறி யாரவாரத்தினும் பெரிது எனறு கூறித துயரில அழுநதாதே, நம தலைவா பெரிய யானையையும வீரததுடன புரியும் போரினையும் உடைய புலலி எனபானது வேங்கட மலையின் அப்பா லுள்ள குனறுகளைக கடநது சென்றுளராயினும், சிவந்த வேலினையும கழல இடடப்பட்ட தொடியினையும் உடைய முளளூாககுத தலைவனுகிய காரி எனபான் கெடாத நல்ல புகழினை நிலைநாட்டிய வலவில் ஓரியைக் கொன்று சேர மனனனுககு உரிமை யாககிய பலா மரத்தின் பழம் மிக்க கொலலி மலையில, நிலைபெறற தெய்வத தச்சனால் இயற் றபபடட பலரும புகழும கொல்லிப் பாவையைப் போனற நினது அழகை நெஞசை நிறுத்தும் தனமை மிககு நினையாராதல இலலை.

—கலலாடனார்

210 - நெய்தல்

[*தோழி, தலைமகன சிறைப்புறமாகத் தலை மகடகுச சொலலுவாளாயச் சொல்லியது.*]

தோழி! குறிய இறப்பினையுடைய குடிசையில் வாழும் கொலைத தொழிலையுடைய கொடிய பரதவரால் எறியப்பட்ட உளிதாககிய களிப்புப் பொருந்திய மீன் விசுமபினை அழகு செய்யும் விண்மீன் போலத் தாவிச் சென்று, தன புண்ணினின்றும ஒழுகிய உதிரத்தால் புலால் நாறும கடல நீரின நிறம் மாறுபட்டாற்போன்ற நிலைகளை யுடைய அலை நெருங்கிய கடற பரப்பைக் கலக்கி, வரி குனறி வரிசையாகவுள்ள படகின் பக்கமாய் வந்து சேரும் துறையினையுடைய நம் தலைவன், நடு இரவில் நம் தோழியின் மலைபோன்ற தோளினை நினைத்து இங்கு வந்தபோது நம் ஊரின்கண்ணே சோலையையுடைய பெரிய துறையின்

அழகினைப் பாராட்டி அமையாது புகழ்ந்தனன், இப்பொழுதோ தனது மென்மை வாய்ந்த மார்பில் யாம் கண் துயிலலை யகற்றித் தாழையின் தாழ்ந்த கிளைகளால் தனது கடிய தேரோ தடைப்படுதலால் செல்லுதல் அரிது என்று கூறுவன் என்பதனை நாம் பல முறையும் கேட்டேம் அல்லமோ?

—உலோச்சனார்

211 - பாலை

[பிரிவினைக் கண் வேறுபட்ட தலைமகளது வேறுபாடு கண்டு தோழி சொல்லியது]

தோழி! நான் கூறுவதனைக் கேட்பாயாக, பள்ளத்தில் அகப்படுத்திய களிறுகளையும் பிடிகளையும் உடைய பெரிய யானை யினங்களை அகப்படுத்தும் பூசற்கண்ணே, எயினி என்பான் வாராது ஒழிய அதனால் மிக்க கோபங் கொண்ட சோழ மன்னனது ஏவலாற் சென்று மத்தி என்பான், நெடுந்தூரத்திலுள்ள நாட்டின் முற்றுப் படையில் அகப்பட்டுக் கொண்ட கல்லாத எழினியின் பல்லைப் பறித்து வந்து பதித்த வன்மை பொருந்திய கதவினையுடைய வெண்மணி என்னும் ஊரின் வாயிலிடத்தே அம்மத்தி என்பவனால் நாட்டப்பட்ட கல் பொருந்திய குளிர்ந்த துறைமுகத்தே நீர் மோதி ஒலிப்பது போன்ற பெரிய அலர் நம்மால் எஞ்சியிருக்கவும் நாம் அழவும் பிரிந்த நம் தலைவர், வெண் கடப்ப மரத்தை, பறையினைப் போன்ற வட்டமாகிய பரந்த அடியினையுடைய வலிய மராவினையும், இணரவிழ் நிலை வாய்ந்த கோட்டினையும்

குளிர்ச்சி பொருந்திய சோலைகளையுடைய வேங்கட மலையின் அப்பாலுள்ள வேற்று மொழி வழங்கும் நாட்டின் கண்ணராயினும் விரைந்து வந்து அருள் செய்வர்.

—மாமூலனார்

212 - குறிஞ்சி

[அல்ல குறிப்பட்டு நீங்கும் தலைமகன் தன் நெஞ்சினை நோக்கிச் சொல்லியது.]

நெஞ்சே! வலியற்ற மாற்றுயர்ந்த பொன்னாற் செய்யப்பெற்ற பாவை வானில் பரவும் இளவெயிலைத் தன் மேற்கொண்டு ஒளி திகழ நின்றாலொத்த அழகு பொருந்தியவளும், திரண்ட கூந்தலையும் நாணற் கிழங்கைப் போன்ற வெண்மையான பற்களையுடைய சிவந்த வாயினையும் செவ்வழிப் பண்ணின் இசையைக் கேட்டாற் போலும் இனிய சொல்லினையும் உடையவளுமாகிய மெய்யுவத்தினை இயல்பினையுடைய மகளை விருப்பிப், பெரிய களிற்றி யானைக் கூட்டம் படிந்து கலக்கிய நீரைப் போல நீ கலக்கமுற்ற பொழுது இவள் பெறுதற்கு அரியள் என்று எண்ணியாகி நாள்தோறும் துன்பத்தையுடைய அரிய சுரநெறியைக் கடந்து நீ என்னைத் துன்பத்தின்கண் செலுத்தினை,

எளியள் அல்லளாய அவளை அமையாது என்னை நீங்காத துன்பத்தினை என்பால் சேர்த்துள்ள நீ தான் படைக்கலன்களின் ஒளி வீசும் கடலை யொத்த தானையினையும் தேன் ஒழுகும் மாலையினையும் உடைய தறுகண்மையுடன் போர் செய்தல் வல்ல குட்டுவன், பின்னலால் வானைப் பிளந்து வலிமை கொண்டெழும் மேகத

எல்லைக்குள் காணுமையின் பொங்கி எழும் சினம் மிகுப் போர் புரியும் வலியால கடலை வளைந்து உயர்ந்த அலைகளை யுடைய கடலைப் பிறக்கிடும்படி ஓட்டிய மாணபுறற நீர்மையுடைய வேல நின மார்பிலே தைத்து அழுந்திட வினது மிக்க செருக்கு அழியப் பெறுவாயாக.

—பரணர்

213 - பாலை

[பிரிவிடை வேறுபட்ட தலைமகளைத் தோழி வற்புறீஇயது]

தோழி! நம தலைவர் போரத் தொழில பயின்ற யானை களையுடைய வலிய போர் வல்ல தொண்டையரது கூட்ட மாய முகில்கள் தவழும் ஏறுதறகு அரிய நெடிய உசசியி னின்று இழியும் உயர்ந்து தோனறும் வெள்ளிய அருவி களையுடைய வேஙகட மலைக்கு அபபால உள்ளதும், கொய்யப் பெறற தழைகளையுடைய காட்டு மலலிகை யின் வைகறையில அலரும பூவினைச சுருண்ட கரிய மயிரில வணடு மொய்க்கச சூடிப பகைவர் போர் முனை யில் வென்று கொண்ட ஏறுகளையுடைய பெரிய ஆநிரைக காக, முதிர்ந்த கள்ளாகிய நறவினை விடியற காலத்தே பலி யாகச் செலுத்தும் வடுகரது தேயததேயுள்ள நிழலின் அழகை இழந்த நீர் இலலாத நீணட இடத்தினையுடைய தீயின் வெப்பம் விளங்கும் அரிய காடுகள் நீணடன என்று கருதாமல்; நம்மைப் பிரிந்து போதலைத் துணிந்தன ராயினும் ஊக்கத்தும அமைதிகளைப் பெயர்தற்குக கவிழ்ந் துள கழுஇம தொடியினை அணிந்த பெரிய கையின்கண் வலிமையான எயதிய வெற்றி பொருந்திய தப்பாத வாளி னைக் கொணட சோழரது விளங்கும நீரினையுடைய காவிரி யினது வாடாத நீர் வரி வரியாகச் செய்திட்ட கருமணல போல வளைந்த கூந்தலையும் உறுதற்கு இனிய மென்மை யையும் பொருந்து தலை மறந்து பகற்பொழுது நீங்க

ஞாயிறு தனது பல கதிர்களையும் சுருக்கி ஒளி மழுங்கும் நேரத்தே பெரிய மரத்தினை வெட்டித் தள்ளியதால், காற்றுப் புகலாகும் பெரிய கொல்லையில் தினைப் போன்ற கதிர்களையுடைய அழகிய மணி மிளிரும் சேரனது கொல்லி மலையின் மேற்குப் பக்கத்தேயுள்ள மூங்கிலின் நேரிய பகுதியைப் போன்ற வளைந்த முன்கையுடனே கூடிய பருத்த தோளினது அழகு கெட நீங்கிப் போயவர் [illegible] பெறலரும் விண்ணுலகை ஆண்டுள்ள அமிழ்தத்துடன் பெறுவாராயினும் அவர் காலம் தாழ்த்திருக்க மாட்டார்.

தாயங் கண்ணனார்

214 - முல்லை

[பாசறைக்கண் தலைமகன் தன் நெஞ்சிற்குச் சொல்லியது.]

நெஞ்சே! அகன்ற பெரிய வானிடமெல்லாம் மறையப் பரந்து, பல கதிர்களையுடைய ஞாயிற்றை மறைக்குமாறு மறைத்த மேகம் பெரிய களிற்றின் திரளுடன் கூடிய தொகுதி குளிர்ந்திடப் பெரும் பெயலாகிய மிக்க துளியினை வீசிச் சொரிதலை அமையாது, அரசனும் மிக்க படையொடு மாறுபட்டு மிளிர்ந்த இலையினையுடைய நெடிய வேலினனும் பாசறைக்கண்ணே யிருந்து பகைவரை வெல்லுதலால் அடையும் புகழினை விரும்பி உறைதலைச் செய்திலன், போரின் பொறை நம்மைச் சார்ந்தன்றாது;

நம் கேளிர் என்று நம்மைத் தன் அறிவினால் தெருண்ட அழகு பொருந்திய கூந்தலையுடைய நம் தலைவி, உயர்ந்த எருதின் பிடரிற் கட்டிய பெரிய வாயினையுடைய மணியின் ஓசையையும், பசுக்கூட்டங்களை மீட்டு வரும் கோவலர் புல்லாங் குழலுடன் பொருந்தவும், பிரிந்தார்க்குத் துன்பத்தினைத் தரும் நல்ல யாழின்கண்ணே செவ்வழிப் பண்ணைப் பாட அரிய உயிர்களை வருத்தும் அத்

தெளிந்த ஓசையையும், மாரிக்காலத்து மாலையில் தனியளா யிருந்து கேட்டலின் எந்நிலையினை அடைவாளோ

—வடம வண்ணக்கன் பேரிசாத்தனர்

215 - பாலை

[செலவுணர்த்திய தோழி தலைமகள் குறிப்பறிந்து தலைமகனைச் செலவழுங்குவித்தது]

குறித்த இலக்குத் தப்புவதாயின் அம்பினைத் தொடுத்த கைவிரலை யொயாற் கவ்விக் கொள்ளும் கல்லாத அறிவினை யும் வில்லை ஏந்திய மாறாத கொடுமையையும் வடுத்தல் செய்த அம்பினையும் உடைய ஏவலராய மறவர்கள் வழிப் போகும் ஆட்களைக் கொன்று அவர்களை யிட்டு மூடிய கண்டார்க்கு அச்சம் வரும் கற்குவியல்களில், கூரிய அலகினைக் கொண்ட சிவந்த வாயினையுடைய ஆண் பருந்துகள், இறந்துபட்ட பிணங்களின் பசிய தலையினைத் தோண்டுவனவாய்க் கூடி வலிய விரல்களால் தோண்டிக் கண் மணியினைப் பெயர்த்துக் கொண்டு வலிய வாயினை யுடைய தம் பேடைக்குச் சொரியும் அவ்விடத்தே, பிரிந்து சென்றார்க்கு இரங்கியொழியும் நெஞ்சத்துடன் அவர் தம்மைப் பிரிந்து இங்கே தங்குதல் வல்லார்க்குப் பெரிய உச்சியினையுடைய மலைக்கு அப்பாலுள்ள வேறு பட்ட பல மொழிகள் வழங்கும் நாட்டைக் கைக்கொள் ளக் கருதிப் போர்த் தொழிலை விரும்பிச் செலுத்தும் துணைபுரிக்கும் உள்ளத்துடன் அழகிய மாண்புற்ற வேலை வலக்கையில் ஏந்திச் செல்லுதல் மாட்சியுற்ற நும் பீடுடைத்து விரைந்து வெற்றி பெறுக என்று கூறி விடுத் தகுவது அன்றாதலால், யாம் அவ்வண்ணம் பிரிந்துறைதலை ஆற்று வோம் அல்லேம். என் செய்வோம்!

—இருங்குடிக் குமாரநாடன்

216 - மருதம்

[தலைமகட்குப் பாங்காயினார் கேட்பத் தனக்குப் பாங்காயினார்க்குப் பரத்தை சொல்லியது.]

கயிற்றினைக் கொண்ட நுண்ணிய கோலால் மீனைப் பிடிக்கும் பாணரது மகளை புனலை அடுத்த கரையில் அகப்படுத்திய வரால் மீனைப் பனங்குடையால் அரிக்க; பெற்ற களையுண்டு களித்திருந்த தன் தங்கைக்கு வஞ்சி மரத்தின் விறகின்று சுட்டு வாயில் உண்பிக்கும் குளிர்ந்த துறையினையுடைய ஊரனது பெண்டிர்கள் எம்மைத் தமக்குத் மனம் விரும்பியபடி யெல்லாம் இகழ்ந்துரைப்பார் என்பார்கள்; அந்த அலர் மேவப் பெற்றேன் மாயினை யிப்பொழுது யாமேதனும் ஆக, அவர் தம் சேரிக்கண் யாம் செல்லேமாயின் கடலாகும் பெண்டிர் கொய்து வந்த புலிநகக் கொன்றைப் பூவினையும், வயலில் உழுவோர் பறித்து வந்த குவளைப் பூவினையும் முல்லை நிலத்தே பூத்த முல்லைப் பூவினையும் சேர்த்துப் பல இளைய கோசர்கள் மாலையாகக் கட்டி விளையாடும் மிகக வளம் பொருந்திய செல்லூர்க் கோமானாகிய ஆதன் எழினி என்பான் பகைவர் மீது எறிபுபடத்துச் சிதையாத சுரை செறிந்த வெள்ளிய வேலைத் தனது அரிய மார்பில பாய்ச்சப் பெற்ற பெரிய களிற்றின் துன்பம் போல வருந்தகமுறுவர்.

—தூங்கர் பாடவனார்

217 - பாலை

[பிரிவுணர்த்திய தோழிக்குத் தலைமகள் ஆற்றாமை மீதூரச் சொல்லியது.]

தோழி! பெய்து பின் திசைகளை வெளியாக்கிய பொங்கிய வெண்மேகம், கடையப் பெற்ற பஞ்சானது மென்மையுற்றாற் போன்ற சிறிய துளியைத் தூவுதலையும்

ஒழிய, அகன்ற வயலிலுள்ள நீண்ட தண்டினையும் கரும்பின் திரண்ட காம்பினையும் உடைய பெரிய பூக்கள் கோடைக் காலத்துப் பூளைப் பூப் போல வாடைக் காற்றால் அசைந்திடப் பசிய இலை நெருங்கிய புதல் தோறும் பகன்றையானது நீலம் ஊட்டப் பெற்ற தோலினது நிறம் மறையும்படி பதித்த கிடுகிற பதித்த வட்டக் கண்ணடி போல வெள்ளியவாக மலர, அவரையின் வளவிய அரும்புகள் கிளிய முறையாக முற்றிய தோன்றியின் ஒளி பொருந்திய பூக்கள் மலரப் புலங்கள் தோறும் பறவைகளின் கூட்டம் கல்லென்று ஒலிக்கத் தம் தலைவரைப் பிரிந்து தங்கிய மகளிர் அழுகிழுந்து நடுங்கப் பனிக் காலம் வந்து விட்டது; ஆதலால்,

இப்பருவம் பொருள் வயிற் பிரிவார்க்கு ஏற்ற தொன்றென எண்ணி எத்துணைச் சிறந்த பொருளைப் பெறுவதாயினும் பிரியார் என்று எங்கட்குத் துணையாகவுள்ள நும் மகற்குச் செப்புவேன் என்று நீ எம் தலைவர்க்குக் கூறவும், அருள் செய்யாத காதலர் நம்மைப் பிரிந்து செலவாரேல் நாம், அவர் நமக்கு நல்குதலினை நுகர்ந்து கைவிட்ட பாழ்பட்ட மேனியைக் கொண்டு நோய் வருத்த வலிமை அழியும் நெஞ்சத்துடன் அவர் புணர்தலை விரும்பிக்கடிய பனியால் வருந்திப் பாக்கைத் தீயுண்டாக்கக் கடிந்து நடுங்குவேம்.

—*கழாரக் கீரனெயிற்றியார்*

218 - குறிஞ்சி

[தோழி தலைமகளை இடத்துய்த்து வந்து பகற்குறி நேர்ந்த வாய பாட்டாற் றலைமகனை வரைவு கடாயது.]

தலைவ! தன் இனங்கள் பாராட்டும் விரைந்த செலவினையுடைய வலிய களிறு மூங்கில் முளைகளை அவற்றிற்கு உண்பித்து வேண்டும் தழைகளை உண்பிக்க

வாளின் நிறம் போலும் உருவுடன் ஒளிருமாறு மின்னிப் பலவாகிய மழைத்துளிகளைச் சிதறி வானிலே பரவின்று பெரிய மலையின் குளிர்ந்த உச்சி அதிரச் சூழ்ந்து கொண்டு மேகமானது இடியேற்றுடன் பரந்த பக்கத் திருள் கொண்ட நடு இரவில், மேம்பட்ட அணிகளாற் பொலிவுற்ற காண்டற்கினிய மென்மைத் தன்மையினதாய் வளைந்து திரண்ட நின் தோளைச் சேர்ந்தாலல்லது, என் கண்கள் உறங்கா என்று கூறி நீயும் வந்தனை; செறிந்த நடுயாமத்தே வெறி கடுமையுடலான, [illegible] விளங்கும் பெரிய புலி வழிவருவதைப் பார்த்திருந்தும் பெரிய மலையின் பிளப்பினையுடைய இடத்தில் வருதல் கொடிதென்று நினையாமல் வருதற்கு எளிதென்று எண்ணுகின்றனை ;

பல மணங்களைக் கலந்த சிறப்புப் பொருந்திய சந்தனம் தன்னைக் கமழும் நின் மார்பை ஒருநாளினும் பொருந்தக் கருதேமாகும் யாங்கள் [illegible]பட்ட அணி நெகிழ்ந்து வீழ மெலிவோம். அன்றியும், அன்னை யாம அன்னை அறிந்திடினும் அறிந்திடுக ; அலர் கூறும் பெண்டிரது வாயினின்று வரும் பழிச் சொற்களை ஊரினர் யாவர் கேட்பினும் கேட்பதாக ; தீயினைப் போன்ற தோற்றப் பூவுடன் ஒளி பொருந்திய வேங்கைப் பூ நாறும் தண்ணிய பெரிய மலைச்சாரலில் பகலில் வருவீராக.

—கபிலர்

219 - பாலை

[மகட் போக்கிய தாய் சொல்லியது]

சிறப்புப் பொருந்திய பெரிய மனையின்கண் நான் 'சிலம்பு ஒலிக்க நடந்து விளையாடும் தோழிகளுடன் பந்தினைச் சிறிது எறிந்தாலும் நொந்து வருந்துவையாக' என்று அழைத்துப் பாராட்டிப், பகன்றையின் வெள்ளிய பூப் போல, நீர் நிறையப் பெற்றது போலப் பால் நிறையப் பெற்று

கிணைத்தலைப் பற்றிக் கொண்டு, என் பகுதிக்கு இதனை உண்டாயானால் இனி உன் தந்தையின் பகுதிக்கு ஒரு முறை உண்பாயாக என்று கூறி உண்பித்து, அவள் பிறந்த நாள் தொட்டும் சிறப்புக்களைச் செய்து நான் இங்ஙனம் வளர்த்த எனது சிறிய மகள், அறநெறி யில்லாதவனோடு இப்பொழுது கடந்து சென்றாள் என்று சிறிதும் மறத்தல் இல்லாத நெஞ்சத்தால் வருந்துவேன் அல்லேன்,

பொற்கம்பி இழுத்தால் ஒத்த கூரிய வெள்ளிய பற்களையுடைய செந்நாயினை அஞ்சிய புள்ளிகளையுடைய கலைமான், பொருந்திய அறையினையுடைய விளவின் கனியின் புல்லிய ஓட்டிடம் தோன்றிய துளையில், வெப்பமுடைய கோடை வீசிய மேல் காற்று நுழைந்து இசைத் தனி வாய்வரும் குழலோசை என நினைந்து பார்த்து காவலாக அஞ்சாதுச் செல்லும் நீர் இல்லாத நீண்ட நெறியில் தனது அழகு கெட மெலிந்து நடப்பாளோ எனவே யான் வருந்துகின்றேன்.

—கயமனார்

220 - நெய்தல்

[பகற்குறி வந்து நீங்கும் தலைமகனை வரைவு கடாவுத் தோழி சொல்லியது.]

கானலிலுள்ள சேரியின் கண்ணும் ஒருங்கே சேர்ந்து அலர் எழாநிற்கத் தேரொடு திரிந்தும் பணிந்த மொழிகளைப் பலகாற் கூறியும், என்றும் நீங்காத வேளையித நீயிருடைய அழகு விளங்கும் செல்வர்களின் மகும பொழுதுபோக்கின் கூட்டர், போர் முனையில் அரிய மன்னர் வழியை அழித்த பரசுராமன் முன்பு அரிதினில் மூன்று முடித்த வேள்விக்கண் சயிறுநின்ற அளையிற் சுற்றிய காணத்தக்க அழகினையுடைய அரிய காவலைக் கொண்ட நீண்ட வேள்வித் தூணை போல, யாவரும

காணுதல் இயலாத மாணப்புறற அழகினையுடைய எம் தலைவியின் மார்பினை நினையுந்தொறும் நடுங்கும் நெஞ்சினை யுடையையாகி நீதான் புறத்திலே நெடிது நிற்றலையுடைய யாகி வருந்தினையாதலின், முழங்கும் கடலின் திரைகள் காலையில் அலையும், மிகுதியான பழைய நெல்லையுடைய ஊணூரிடத்து ஒன்றையொன்று பிரிந்திருத்தலைப் பொருந்த பெரிய பறவையாய மகன்றிலைப் போல ஒருவர் நெஞ்சிலே ஒருவர் பொருந்திக் காதல் நீங்காத அழகிய புணர்ச்சியினாலே, பெரிய கழியைத் துழவி முகந்த சேரிய கோலங்களையுடைய அழகிய வலை வளைந்த புறத்தினை யுடைய இருமீனுடன் ஏனைமீன் இனங்களையும் குவிக்கும் நீண்ட கதிர்களமைந்த வயல்களையுடைய தலைவரிய சாயக்கானம் என்னும் ஊரிடத்துள்ள அழகிய மூங்கிலை ஒக்கும் என்று, கடற் சோலையில் தோழிமார் புகழ்ந்து பாராட்டிய வளைந்த முன் கையினையுடைய பருத்த அழகிய தோள்களின் நல்ல அழகு கெடாமைக்கு ஏதுவாய பாது காவலை யாம் தெளிய உணருமாறு எப்பொழுது நீ கூறுவாயாக.

—மதுரை மருதனிள நாகனார்

221 - பாலை

[தலைமகற்குப் போக்குடன் பட்ட தோழி, தலைமகட்குப் போக்குடன் படச் சொல்லியது]

அரும்பினின்று உண்டாகிய கள்ளைப் பருகி, பூவைப் பட்ட வினைத்திறம் அமைந்த நல்ல மனையிலே செறிந்த மணலைக் குவித்துப் பரப்பி, அழகு பொருந்திய கூந்தலை யுடைய எம மகளுக்குத் திருமணம் என்று கூறி நம் தாய் தந்தையர் திருமணத்திற்கு ஆவன செய்துள்ளார்; ஆத லால், புதிதாகச் செய்யப்பட்ட வெள்ளிய வேலையும், உடன் போக்கிற்கு இயைந்த அறிவினையும், கரிய தாடி

யினையுடைய காளையைப் போன்றவனும் ஆகிய நம் தலைவன், வளைந்த கிளைகள் மிக்க திரண்ட அரையினை யுடைய வெண் கடப்ப மரத்தின் பூங் கொத்துக்களைத் தளிருடன் கொண்டு வந்து நினது தண்ணிய நல்ல மயிர் முடியிற் சூட, அத்தலைவனுடன், மழை பெய்யாத காரணத்தால் மூங்கில்கள் அழகிழந்த அகன்ற பாலையிடத்தே களிறுகிய இரை தப்பி விட்டமையின் பெரிய வாயினை யுடைய வேங்கை கொதிக்கும் கோபம் மிக்கு முழங்குதலின், அஞ்சிக்கரிய பெண் யானைகள் நிலைகெட்டு ஓடும் காட்டினையுடைய அரிய சுரநெறியிற் செல்லுதலை யான் விரும்பி ஏற்றுக் கொண்டேன்.

—*கயமனார்*

222 - குறிஞ்சி

[தலைமகன் சிறைப்புறத்தானாகத் தோழி தலைமகட்குச் சொல்லியது.]

தோழி! வானில் மிக உயர்ந்த நீல நிறம் பொருந்திய பெரு மலையினை அடுத்துள்ள காடு பொருந்திய நாட்டினை யுடைய தலைவன் அடைவித்த நோயால் நினது மேனியின் அழகு ஒழிதலின் யான் இதனைக் கூறுவேன் கேட்பாயாக; முழவின் ஒலி மாறாத ஆரவாரம் நிகழும் இடமாகிய கழாஅர் என்னுமிடத்திலுள்ள பெரிய துறையினிடத்து விழாவில் ஆடிய அழகு பொருந்திய திரண்ட தோளினையுடைய ஆட்டனத்தி என்பானை அழகினை விரும்பிப் பார்த்து வந்து தாழ்ந்து தொங்கும் கரிய கூந்தலையுடைய காவிரி கவர்ந்து கொண்டமையின், திசை யெல்லாம் தன் கணவனைத் தேடி மதி மயங்கி வாடிய அவன் மனையாள் ஆகிய ஆதி மந்திக்கு அவன் காதலனைக் காட்டிக், கடலிற் புக்கு மறைந்த பாடுதல் அமைந்த சிறப்பினையுடைய மருதியைப் போன்ற சிறந்த புகழைப் பெறும் பொருட்டுப், பல
ரவெல்லாம் மழை பசாரி

தலைவின் ஈரம மிகக சேற்று நெறியில நம தலைவனைத் தேடிச் செலவோமாக.

— [illegible]

223 - பாலை

[பிரிவிடை வேறுபட்ட தலைமகளைத் தோழி வற்புறுத்தியது]

தோழி! நமமைப பிரிவதற்கு மனம் [illegible] அங்ஙனம நமமைப பிரிந்து சென்று [illegible] தங்குதலும செயவரோ என்று [illegible] அழுங்காதே, பனைமரத்தின [illegible] ஆகக்கினையுடைய நெடிய [illegible] முதிர்ந்த முருக்க மரத்தின [illegible] லானது. மிக்க வெப்பமுடைய காடு [illegible] வெமமை மிகக காட்டில [illegible] யானையைப் போன்று [illegible] ஓமை மரத்தினையுடைய [illegible] கடந்து சென்றனராயினும நமது [illegible] தாழ்ந்து அழகிய மூங்கில போன்ற [illegible] படிந்து சுமரி வண்டின் [illegible] நுண்ணிய கருநிறம வாய்ந்த [illegible] காட்டு மலலிகையின் அரும்புடன் [illegible] தண்ணிய நறிய குவளை மலரை [illegible] நாறும மாலையைச் சூட்டிய [illegible] கூந்தலிற பொருந்திய [illegible] பெறுதலை மறந்து [illegible] இயலவது?

— [illegible]

224 - முல்லை

[வினைமுற்றிய தலைமகன் தேர்ப்பாகற்குச் சொல்லியது.]

தோழி! வலலோனுகிய பாகனை அடங்கிச செலவதற்குரிய கடிவாளக கயிற்றினைப பூட்டக கொலலனை வலித்து இழுககும துருததியினைப் போல வெப்பமாகப் பெரு மூசசுவிட்டு வளைநத நுகததிடததே கட்டப பெறற தலையினவாகிய கடிய நடையினையும, காறறின வேகததைப போனற ஓட்டததினையும் உடைய குதிரைகளின், பால் கடையுஙகால எழும வெணணெயின பெரிய மிதப்பினைப் போனற வெள்ளியதான வாயின் தெவிட்டலாய பின்பின வழிநதிடும மெலலிய நுரை சிலமபியின நூல் போல நுணகுவனவாயச் சிதறிச சநதனம பூசிப் புலாநத மார்பில் மறுச செய்யவும அழகு பெறப புதுநலத்தினைப் பெற்ற காட்டில குதிததுச செல்லும் மரையினஙகள ஓடவும், மனைவி பதமாகக காய்நத அரிசியைப் பெயது சுற்றுதல செய்த சுழலும திரிகையின் குரலொலி ஒலிகக வரிப்பட்ட மணலில சுழலும கதிரகளையுடைய வட்ட ஆழி அறுததுககொண்டு செலலவும, நமது இனிய உயிரத் துணைவராய காதலா வருவார் கொல் எனறு திரணடு ஒளி பொருந்திய வளையினை யொடுசுங்கப் பல முறை அரிய காவலையுடைய மனையின புறததே வநது பாரதது இரஙகத் தக்கவளாய திருநதிய அணிகலனயுடைய நம தலைவி வருநதுவாள்; இவ்வப் பொழுது வநதுவிட்டது ஆதலின பாகனே விரைநது நம தேர் செல்வதாக.

—ஆவூர் மூலங்கிழார் மகனுர் பெருந்தலைச் சாத்தனுர்

225 - பாலை

[பொருள் கடைக் கூட்டிய நெஞ்சிறகுத் தலைமகன் சொலலியது.]

நெஞ்சே! அன்பும் மடனும் மென்மையும் ஒழுக்கமும் என்னையும் நெகிழ்விக்குஞ் சொல்லும ஏனையவும் தலைவியுடன் ஒன்றுபட்ட நற் கொள்கையுடையேமாய்

ஒரு பெற்றியே தழுவி இன்று இவ்விடத்தேம் ஆகி நாளைப் போழ்தில் புதர்கள் பரந்த இடத்தேயுள்ள அசையும் மூங்கிற் கண்ணே வண்டு துளைத்த குறுகிய அழகிய துளை வழியே மேல் காற்றுப் புகுந்து வருதலின் எழும் ஒலி, நீர் குடிக்கச் செல்லும் கூட்டமாய ஆனிரைக்குப் பின்னே வரும் நீண்ட கோலினையுடைய ஆயர்தம் குழலின் இசையென அழகாக வந்து ஒலிக்கும் தேக்கு மரங்கள் அடர்ந்த சோலையினையுடைய காடு உயர்ந்த அரிய பாலை வழியிலுள்ள அம்புகளைத் தொகுத்த புட்டில்கள் மூடி திறக்கப் பெற்றன போற காணப் பெறும் பூத்துள்ள இருப்பையின் குவிந்த துளையுடைய பூங்கொத்துகள் நாலினின்று கழன்று விழும் துளை பொருந்திய முத்தைப் போலச் சிவந்த நிலத்தே உதிர, மழை பெய்தலை மறந்த இடமாய அழகிய குடிகளையுடைய சிறிய ஊரின் கண்ணே, பூவால் புனையப் பெற்ற மேகம் போலத் தழைத்த கரிய கூந்தலினையும் நெருங்கிய வளையல்களையுமுடைய முன் கையினையும் உடைய நம் காதலியின் அறிவு கலங்கிய பார்வையினையும் புலம்பினையும் நினைந்து தனித்துத் தங்கியிருப்பேமோ?

—எயினந்தை மகனார் இளங்கீரனார்

226 - மருதம்

[தலைமகற்குத் தோழி வாயில் மறுத்தது.]

புது வருவாயை உடைய ஊரனே! நின் வஞ்சனை பொருந்திய சொற்களைக் கூறுதே, யான் அவற்றை உண்மையாகக் கொள்வேன் அல்லன், நீ உறுதியாக நாணம் உடையவன் அல்லன்; அகன்ற ஊரிடத்தே, அழகிய பகுப்பையுடைய தழையுடையினையும் குறிய வளையலையும் உடைய மகளிர் புனல் விளையாட்டை வெறுப்பின், பொய்கையில் உள்ள கோரைகளைக் கோதிக்

கழனியாகிய கரந்தையையுடைய வயலின் கண்ணுள்ள வெள்ளிய நாரையை ஓட்டும இடமாய, வலிய வில்லேத் தாங்கிய வலிமை பொருந்திய தோளகளையுடைய பரதவாக குத தலைவனாகிய மததி எனபானது கழாா எனனும ஊரின துறையின் முற்றததே நீணட வெள்ளிய மருத மரததுடன வஞசி மரத்தையும் சாயதது நாட காலையில் வநத மிகக வெள்ளததையுடைய காவிரியிடததே வளை யல அணிநத முன் கையினையுடைய உனனுல விரும்பப பெறற பரத்தையொடு நீ நேறறு விளையாடியதால் எழுந்த அலர், இனறு ஆற்றல மிகக வலிமையுடைய பாணன எனபாெனாடு கூடிப போா செய்தலில வலல தானையை யுடைய கட்டி யென்பான் போா செய்தற்கு வநது தாா மலிநத திததன வெளியன் என்பானது உறையூரின கண்ணுள்ள நாளோலககத்தின்கணணே எழுநத கிணையி னது ஒலியைக் கேட்டு அவனது பெருமையை யுணாநது அஞசிப் போா செய்யாது ஓடியபோது உண்டாய ஆர வாரததினும பெரிதாகும.

—பரணா

227 - பாலை

[தலைமகன பிரிவினகண வேறுபட்ட தலை மகடகுத தோழி சொலலியது. பிரிவினகண வேறுபட்ட தோழிககுத் தலைமகள் சொல லியதூஉமாம.]

நுதல பசநதுள்ளது; தோளகள் மெலிநதுவிட்டன; தேமல பரநத அலகுலின் வரிகளும வாடின; இனி இவள் எந்நிலை அடைவாளோ என்று நீா நிறைநத கணணோடு நொடிது எணணி வருந்தாதே; கோபம் மிககமையால் நனைநத கன்னத்தினின்றும் வாயிற் புகும் மத நீரொடு தன் முன்னே நிற்றலைக் காணப் பொறுமல் பகைத்துப் போன விறமான பூங்கொத்துக்களையுடைய புலி நிறததினைக

கொண்ட வேங்கை மரத்தினது பூங்கொம்புகள் மலர்களை உதிர்த்தலால் தனிமையுற அவ் வேங்கையின் அடிமரத்தில் பாய்ந்திட்ட மிகுந்த வலிமையுடைய களிறு செம்மண் நிலத்தில் பொருந்திய புழுதியை அளைந்து போர் புரிந்து களத்தில் வெற்றி கொண்ட வீரர் போல முழங்குகின்ற சுரநெறிகள் பலவற்றைக் கடந்து அகன்று போயினராயினும், தப்பாத வாளினையும் தமிழ்நாடு முழுதினையும் அகப்படுத்திய ஒலிக்கும் புகழமைந்த முரசினையும் பாடி வருநர்க்கு வரையாத பெரிய நாளோலக்க இருக்கையினையும் உடைய, தூங்கல் என்னும் புலவரால் பாடப்பெற்ற நல்ல புகழ் வாய்ந்த யானை மிதித்தமையால் ஆகிய வழுதுணங்காய் போலும் தழும்பினையுடைமையால் வழுதுணைத் தழும்பன் என்னும் சிறந்த பெயரினையுடையானது காவல் பொருந்திய மதில் எல்லையை உடைய ஊணூர்க்கு அப்பாலுள்ள மிக்க பொருள் நிலை பெற்றிருக்கும் அழகிய நகராகிய மருங்கூர்ப் பட்டினத்து ஒளிவீசும் கடைத்தெருவைப் போன்ற கல்லென்னும் அலரை இவ்வூரில் எழச்செய்து பிரிந்து அகன்றோராகிய நமது காதலர் நோய் இல்லாதவராகி நிலைபெற்று வாழ்வாராக.

—நக்கீரர்

228 - குறிஞ்சி

[தலைமகன் சிறைப்புறத்தானாகத் தலைமகட்குச் சொல்லுவாளாய்த் தோழி சொல்லியது.]

தோழி! தேனை உண்ணும் பலவாய வண்டின் இனங்களும் ஆரவாரிக்கக் கல்லென்னும் ஒலியுடன் வரையினின்றும் இறங்கும் அருவியானது சந்தன மரத்தில் வீழ்ந்து, அதனைக் குளிர்ச்சியாக நனைத்திடும் செறிந்த பக்க மலையில் உள்ள கண்போல் மலர்ந்த கரிய இதழமைந்த குவளை மலர்களையுடைய மலை முழைஞ்சிலுள்ள நெடிய

சுனையில, தலைவர் நமமுடன் விளையாடிப் பகற பொழுதை இனிதாக நமமுடனிருநது கழிதது வானிடததே விரிநத பகலைப போனற நிலவொளியில பிரபபங் காட்டினை யுடைய சாரல பொருநதிய நெறியிலே, மலையின் மேலுளளவாகிய வேஙகை மரததின ஒளி பொருநதிய மலாகள புலியின உடமபிலுள்ள புளளிகளைப் போலத் தோனறுதலின ; பெரிய வாயினையுடைய கரிய பெண் யானைகள அஞசியோடும் சோலையினையுடைய பெரிய மலை யில் உள்ள அழகிய தமது சிறுகுடியாய ஊாககு இரவினில செலவாராயினும மிக நன்றுகும.

—அணடா மகன குறுவழுதியார்

229 - பாலை

[தலைமகன பிரிவினகண் வேறுபடட தலைமகளை வறபுறுததுந தோழிககுத தலை மகள வனபுறையெதிாழிநது சொல்லியது.]

மகட்கு நலகூர்நதாரது செலவமகளாய இளைய தலைவியே! பகலைத தோறறுவிககும பல கதிாகளையுடைய ஞாயிறுகிய அழகிய செலவனது அகன்ற இடமாய வானின கண்ணுள்ள ஆணையாய ஆழி உலகத்தைக் கிழித துச் சென்றதாக. நீரிலலாத வறநதிட்ட செல்லத் தொலை யாத நீண்ட நெறியிடத்தே; மெலலிய தலையினையுடைய கன்றினையும் கனிந்த நகத்தினையும உடைய இளைய யானை தன் கன்றுண்ண வேணடித்; தான் தழை உண்ணவை உண்ணாது மறுத்தமையின் வாடிய உடம்பின் உறுப்புக் கள் பலவற்றுடன் பாழ்பட்ட ஊரிலுள்ள குடிசைகள் போலத் தோன்றும், அவவிடஙகளையுடைய கொடி செய்மையிலுள்ள குன்றங்களைத் தாண்டிச் சென்ற பொய் மிக்கவராய நம் தலைவர் முயன்று ஈட்டும் பெரிய பொருள் நாம் இல்லையாயினும் விரைந்து கைகூடுக என்று வெறுப்பு மேவற்க ;

வருத்த மிகக காரணததால வரும் சிறிதளவாய கண ணீா பலவாய இதழகளையுடைய தாமரை மலர் போனறு குளிர்நத கணணில உளள கருமணியை மறைததிடப, பொனனைப் போனற பசலை பரநதிடப புளளிகளாய தேமலை யுடைய நலல சிறநத எனது மேனியின அழகு தொலை தலைப் பாாதது வருநதாதே என்கின்றாய், அழகிய அருமபு களை ஈனற கிளைகளையும அருமபுகளையும உடைய முருக்க மரததின அழகிய போதுகள் விரிந்த மலாகளைக கிணடி, அவறறிலுளள பொடிகளை உணடு அசையும் தழைகளை யுடைய மாமரததின கிளைகளின உச்சியிலிருககும கரிய குயில இனிமை தோன்றக கூவும் இளவேனிற காலத்தில் வருவேன எனத தெளிவிததுச சென்றவர் வாநதிலரே; என் செயவேன்?

—மதுரைக் கூலவாணிகன சீத்தலைச் சாத்தனார்

230 - நெய்தல்

[தலைமகளைக் கணாநதுறறு நீஙகும தலை மகன தன் நெஞசிறகுச சொலலியது.]

உப்பங்கழியின் பக்கலிலே கடல நீராம் மலர்ந்த கணணைப போன்ற சிறிய கரிய நெய்தலது பெரிய மல ருடன் கூடிய சிறநத தழையுடையை அணிநத அலகுலினை யும, மெனமையவாகிய அருமபிய தேமலையும கூரிய பல் லினையும கரிய நீணட கூநதலினையும் ஒளி பொருந்திய நெற்றியினையும் உடைய இளைய மகளே! நீ கூடி விளை யாடும் நின தோழிமாருடன் புனனை மரம வெள்ளிய மண லில் உதிர்த்த நுண்ணிய பொடியினை பொன்றுகக் கொண்டு முகந்து இல்லறம் நடத்துவாயாயின், இந்த இல்லறக கிழமை சிறிதேனும் எம்முடன் பொருந்துவ தாயின் வரக்கடவதொரு தீங்கும் உண்டோ என்று கூறி, கடிய செலவினையுடைய நல்ல குதிரை பூண்ட கொடிஞ்சி

யினையுடைய உயர்ந்த தேரினைச் செலுத்துதலில் திறமை மிக்க பாகன் மெல்லெனச் செலுத்த, நாம் அவனை அணுகினமாக, யாம் இங்கே பெரிய வருத்தத்தை அடைய அவள் அழகு மிக்க செவ்வரி பரந்த மையுண்ட கண்களில் உவகைக் கண்ணீர் வருதலை மறைத்துத் தன் தலையினைச் சிறிய அளவில் மறைத்தனள்.

—மதுரை அறுவை வணிகன் இளவேட்டனார்

231 - பாலை

[தலைமகன் பிரிவின்கண் வேறுபட்ட தலைமகட்குத் தோழி சொல்லியது]

தம் பகைவர் செருக்கினை அழித்தலும் தம்மைச் சேர்ந்தோர்க்கு ஓர் துன்பம் வந்தவிடத்து உதவி செய்தலாய ஆண்மையும், இல்லின்கண்ணே வாளாவிருந்து மடியாமல் அமைந்திருப்போர்க்கு இலை என்று எண்ணி நல்ல புகழைக் கருதிய நாண் உடைய மனத்தராய நம் தலைவர், கொடிய வில்லையுடைய வேடர் தமது அம்பினை விடுதலால் பட்டோர் விழுந்து கிடக்கும் களத்தில் உயர்ந்திய மயிரினைப் பொருந்திய தலைகளையுடைய கறகுவியல்கள், கள்ளியினையுடைய பாழிடமாகிய களர் நிலந்தோறும் இரண்டு நிலைப்போரை நடுங்கச் செய்தலின் யாரும் செல்லத் துணியாத காட்டிடையே உள்ள கொடிய சுரத்தைக் கடந்தனராயினும், பகைவரது எதிர்ந்த போரினை ஒழித்த கெடாத நல்ல புகழினையும், வானிடத்தே ஓங்கிய வெண்குடையினையும் உடைய பசும்பூட் பாண்டியன் என்பானது பெருமை அமைந்த சிறப்பினையுடைய மதுரையைப் போன்ற நினது பூவிதழ் பொருந்திய கூந்தற்கண்ணே பொருந்தித் துயின்றோர் ஆய அவர் அதனை நினைந்து தம் நெஞ்சம் உருகுதலால் விரைந்து வருவர்; ஆதலின் வருந்தாதே கொள்.

—மதுரை ஈழத்துப் பூதன் தேவனார்

232 - குறிஞ்சி

[தோழி, தலைமகன் சிறைப்புறத்தானாகத் தலைமகட்குச் சொல்லுவாளாய்ச் சொல்லியது.]

தோழி! இப்பொழுது யான் கூறுவதனை உணர்வாயாக; நடு இரவில் மேகம் முழங்கும் இடியொலியினைக் கேட்ட மூங்கிலைத் தின்னும் பெரிய யானையானது அவ்வொலியினைப் புலியின் ஒலியெனக் கருதி அஞ்சிப் பெரிய மலையின் முழைஞ்சிடம் எதிரொலி செய்யக் கதறிப், பெயர்ந்தோடும் பெரிய மலைபொருந்திய நாட்டினையுடைய தலைவனது நட்பு, இக்காலத்துக் குன்றங்களாய வேலியினையுடைய சீறூரிடத்தே மன்றத்திலுள்ள வேங்கை மரங்கள் மணநாளாகிய காலத்தே பூத்த மணியைப் போன்ற அரும்பு மலர்ந்த பொன் போன்ற பூக்கள் பரந்து அகன்ற பாறைகளை அழகாக்கும் முற்றத்திலே குறவர்கள் மனைக்கண்ணுள்ள ஆடுதல் வல்ல மகளிரொடு குரவை ஆடும் ஆரவாரம் மிக்க விழாக் களத்தைப் போன்ற, அன்னை, நாள்தோறும் விரவிய பலவகைப் பூக்களாய பலியொடு காவல் பொருந்திய அகன்ற மனையின்கண் காத்தலைக் கருதி, நமது வேறுபாடு முருகனால் உண்டாயது என்று வேலனை அழைக்கும் காலமாக நமக்கு விளைந்தது.

—கொடிமங்கலத்து வாதுளி நற்சேந்தனார்

233 - பாலை

[பிரிவின்கண் வேறுபட்ட தலைமகட்குத் தோழி சொல்லியது.]

தோழி! கலங்குகின்ற குளிர்ந்த கண்ணினின்றும் நிறைந்த நீர் ஒழுகலின் நின் பரந்த மூலை நனையா அழாதே: நெருப்புச் சூழ்ந்து எரித்திட்ட கரிந்த இடங்களையுடைய

பெரிய நிலத்தில, வளம பொருந்திய வேறு இடங்களில் பெய்யும் மழை பெயயாது ஒழிநததாகத் தசை யொழிந்த யானே வருந்தும் வேனிற்கண், வீரம் பொருநதிய குதிரைப் படைகளுடன புறக்கிடாத வலிமையுடைய துறக்கத திணை அடைந்த; கெடாத நலல புகழமைந்த முன் ஞேர்கருக் தென்புலக்கடன் ஆறறிய உதியன் சேரலாதன எனும் மன்னன அவர்கட்குப் பலியாகப பெருஞ்சோறு படைததிட்ட காலத்தே கரிய பலவாய பேயசசுறறங்கள் அதனை உண்பதறகுக கூடியிருநதாற் போலக குறியனவும நெடியனவும்ஆய குன்றுகள் இடங்தொறுமுள்ள சுரத திஞக கடந்து மிகப் பெரிதும் அடங்காத உள்ளமுடைய ராய் அறிவு மயங்குதலுறற பொருளை ஈட்டுதலைக கருதிச சென்றனராயினும, நினது ஐம் பகுப்பாகிய கரிய கூநதலிற பெறும் இனிய துயிலை மறந்து காலம தாழ்ததிருககு மாட்டார, விரைநது வருவா

—மாமூலனர்

234 - முல்லை

[தலைமகன தேர்பபாகறகுச சொலலியது.]

தோ செலுததுதலில நல்ல தேர்ச்சியுடைய பாகனே! மேகம் நீரைப பொழிநததாலாய வெள்ளம் விளங்கும காலத்தே மணல் பரவிய குளிர்ந்த நீர் நிலையிடத்தே வரிசையாகப் பறத்தலையுடைய அன்னப் பறவையைப் போன்ற பிடரி மயிரினேயும் விரைந்த செலவினேயும் உடைய செருக்கு வாய்ந்த குதிரைகளை மென்மையுறப் பூட்டிய கடிவாள வாரினை ஒரு பெறறியமையப் பறறி நிலத்தே பதிந்த பல ஆரங்களேயுடைய உருளை மென்மை யான நில வழியை அறுத்தேக வேகத்தால் காற்றென வியக்க ஏறியமாந்து, நூல நெறிப்படி அமைந்ததும் வேகததால் கண்ணின் பார்வையினைத் தவிர்ப்பதும ஆகிய நெடிய தேரினை, தழையினை அதிகமாகத் தின்று வெறுத்த

இளைய பெண்மான் ஆண்மானுடன் கூடிய மகிழ்ச்சியை யுடைய வாய இடையூறின்றித் துள்ளித்திரிய, அழகிய சிறகினையுடைய வண்டின் மெல்லிய பறத்தலை உடைய கூட்டம் முல்லை மலரிலுள்ள பூம்பொடியினை விரும்பி ஊத, பகற் பொழுது கழிந்த மாலைக் காலத்தே முல்லை நிலத்தைச் சார்ந்திருந்த உறைதற்கு இனிதாகிய நல்ல ஊரின்கண்ணே மிக்க துன்பத்தால் வருந்திய நீர் வாரும் மையுண்ட கண்களையும் நல்ல மேனியின்கண் பரவிய பசலையையும் உடைய நம் தலைவியினுடைய மின்னலை ஒத்த கூந்தலின் பின்னலாய பிணிப்பு நீங்க மிக விரைந்து செலுத்துவாயாக.

—பேயனார்

235 - பாலை

[தலைமகன் பிரிவின்கண் வேறுபட்ட தலை மகள் ஆற்றாமை மீதூரத் தோழிக்குச் சொல்லியது]

தோழி! கேட்பாயாக, பயன் தரும் நிலங்களில் பெய்து, பின்பு பெய்தலை வெறுத்து மலையைச் சேர்ந்த தாகிய கரிய மேகம் மீண்டும் இரவில் தங்குதலுற்றுப் பொங்கித் துளிக்க வாடைக் காற்றுல் உயர்ந்த அழகிய இதழினையுடைய செங்காந்தள் சுடரினைக் கொண்ட அகல் போலச் சுருங்கிய அரும்பு விரியச் சுரிந்த அரும்பினையுடைய முசுண்டையின் கட்டவிழ்ந்த பெரிய பூ வானை அழகு படுத்தும் விண் மீன்களைப் போலப் பசிய புதர்களை அழகு படுத்த, நண்டு தனது மண் வளையுட் செறிந்திட அகன்ற வயலில் கிளைத்து விரிந்த கருமையினது திரண்ட காம்பினை யுடைய பெரிய பூ மழையில் நனைந்த நாரையைப் போல ஈரம் கொண்டனவாய், வளர்ந்திருக்க மிக்க கடிய சினத் தினுல் அச்சத்தை உண்டாக்கிப் பனி தங்கிய நற் பண் பில்லாத வாடைக் காற்றுனது மயங்குதலையுடைய மாலைப் பொழுதுடன் கூடி இரக்கமின்றி நலிந்திட, செற்றிய

னிடத்து அயலோரால் அறியப்படும் பசலையுடன் பழைய மேனி நலம் கெட மெலிந்து என்ன நிலையினளாயினளோ இரங்கத் தக்காள் என்று உசாவி யறியாராதலின், நம் காதலர் பொருள் தேடுதலையே விரும்பி நம்மை நினைத்திலரோ நினைந்தும் செய்யும் வினையின் மிகுதியால் உசாவுதலை மறந்து விட்டனரோ.

—கீழார்க் கீரனெயிற்றியார்

236 - மருதம்

[ஆற்றாமை வாயிலாகப் புக்க தலைமகன் நீக்கத்துக்கண் புக்க தோழிக்குத் தலைமகள் சொல்லியது]

தோழி! வெள்ளிய நெல்லை அறுப்போர் நீலமணியினைப் போன்ற மலர்களையுடைய நீர் முள்ளி நிறைந்த தெளிந்த நீரமைந்த மடுவிற் கவர்ந்த பெரிய மீனின் வரிகள் பொருந்திய நிறத்தினையுடைய வளவிய துண்டினைக் கொள்வியுண்டு எழுந்த பின்னாக, கொண்டு போய்ப் போட்ட களத்தே வெற்றிடம் அறச் செறிந்துள்ள நீண்ட கதிரினையுடைய பல நெற் கட்டுக்களையுடைய பனி தங்கிய கோரையையுடைய களனெலாம் சூழ, வயற் புறத்தேயுள்ள கரிய கவையினையுடைய மாமரத்தின் அசையும் கொம்புகளில் உள்ள, புதிய பூக்கள் கலந்து சொரியும் மழைத்துளி போல உதிர்ந்து பரந்துகிடக்கும் ஊரனாகிய நம் தலைவனது காமம் பெருமை இவற்றினை அறியாதேன், இரவில் அழகு விளங்கும் சாந்துடன் அழகிய பட்டாடை ஒளி செய்ய வளைந்த குழையணிந்த மகளிரைப் போல நம் தலைவன் நாணியிருந்த இருக்கையினைக் கண்டு மடமையால் உருகப்பெற்ற நெஞ்சினேன் ஆயினமையின், தன் கணவனை இழந்த காரணத்தால் அழுத கண்ணினளாகிய ஆதிமந்தியைப் போல, காளையின் தன்மையுடைய நடையினையும் அழகு பொருந்திய

தோளினையும கரிய சுருளைப் பொருந்திய தலைமயிரினையும் உடைய ஆடடன அத்தியாய என் தலைவனைக கண்டீரலவிரோ என்று, நாடுதோறும் ஊர்தோறும் சென்று என் தலைவனைக கடல் கொண்டது போலும புனல் கொண்டொளித்தது போலுமெனக கூறித துன்பத்தைச் சொல்லிப் பெரிதும மயங்குதலினின்றும பெரிதும் தப்பினேன்.

—பரணர்

237 - பாலை

[தலைமகனை பிரிவின்கண் வேறுபட்ட தலைமகளைத் தோழி வற்புறீஇயது]

அழகிய அணிகளையுடைய தலைவியே! திரண்ட பாதிரியின மலா புனலின மலரோடு நுண்ணிய மணலிடத்தே கோலம செயய, பாமபின பல பேரன்ற அருப்புகள் முதிர்ந்த குராவினது வண்டுகள் ஒலிக்கும நறிய கிளையில் தென்றல ஊடறுத்துச் செலலக் குயில கூவுதலைப் பயின்ற வேனிற காலத்தும இராப பொழுதானது துயிலின்றி வருந்துமபடி இனறுதாயக கழியும என்று கூறி, நினது மாமை நிறத்தையுடைய மேனியின் சிறந்த அழகு ஒழிய வருந்துதல ஒழிவாயாக;

செந்தீயில் சுட்ட நிணத்தின் கொழுவிய துண்டுகளை மெல்லிய தினைச் சோற்றிலே சொரிந்த கலத்துடன் பெரிய நெற்கதிர்கள் சுழல்கின்ற வயலிடத்து முற்றிய கரும்பின தண்டினைப் பிழிந்த சாறு அட்ட பாகுடன் பாலினையும் பெய்து அளைந்த செங்நெல்லாலாகிய பசிய அவலை, பாணர் முதலாயினார்க்குப் பகுத்துக் கொடுக்கும் உறையூரையே அடைவதாயினும், நினது வெள்ளிய எயிற்றின்கண் ஊறிய நீரினை நம தலைவர் பொருளீட்டும் வினைகாரணமாக உண்ணாது தவிர்ந்திருப்பாரல்லர்.

—நரியங்கண்ணனார்

238 - குறிஞ்சி

[இரவுக்குறி வந்த தலைமகற்குத் தோழி சொல்லியது.]

மரங்கள் ஒன்றோடொன்று பின்னியிருத்தலால் அறியப்படாதவாறு நெருங்கியுள்ள காட்டின்கண், ஈன்று காவற்பட்ட வேட்கையினையுடைய பெண் புலி பசியுற்றதாக, அதற்கு இளைய மானாகிய உணவைக் கொணர்ந்து தர நடு இரவில் இருண்ட குகைகளையுடைய பக்க மலையில இரை கொள்ளுதலை விரும்பிப் புறப்பட்ட பெரிய ஆண் புலி, காட்டுப் பசு தூரத்தில் நின்று அலற, அக்காட்டுப் பசுவின் ஏற்றினை வலப்பக்கம் வீழக் கொன்று மலையின பாறைகள் குருதியால் சிவந்திட இழுத்தேகும் பெரிய மலை பொருந்திய நாட்டையுடைய தலைவனே!

நீ இவளைப் பிரிந்து செல்வாயாயின பாணர் முதலிய இரவலர்க்கு அணிகள் அணிந்த நெடிய தேரைகளிற்றுடன் எக்காலத்தும் வானம் சொரிதலைப் போன்று தரும் கையினையும் மிக்க மகிழ்ச்சியினையும் தொடி அணிந்த கையினையும் செருக்குற்ற குதிரைகளையும் உடைய, நள்ளி என்பானது பக்க மலைகளில் பனியின பெரிய அடிப்பக்கத்தினைப் பெற்றுள்ள காந்தளது அரும்புகள் இதழ் விரிந்து மலர்ந்த மலர் போல நாறும் நறிய நெற்றியுடையாளை ஆற்றுவாரு காத்தற்கு மருந்தினையும் உடையையோ? உடையையல்லையாகலின் பிரியற்க.

—கபிலர்

239 - பாலை

[பொருள்வயிற் பிரிந்து போகாநின்ற தலைமகன் தன் நெஞ்சிற்குச் சொல்லியது.]

பெருந்தன்மை யுடையீரே! புலிபோல முழங்குதம் சிவந்த கண்ணையுடைய மறவர் தீக்கொள்ளியுடன் பிடித்

துள்ள நீண்ட திரண்ட அமபினராகிச சென்று இரவில் பகைவாகளது ஊரில போரால தொலைத்துப் பல ஆனினங் களைக கவாநதமையால் உண்டாகிய மிகக ஆரவாரம் கொடிய சுரத்தே மாறி ஒலிக்கும் மொழி வேறுபட்ட பல நாடுகளின நெறிகள பலவறறைக கடந்து சென்று புள்ளி வடிவினவாக எழுதப்பட்ட கோலத்தினையும பொறிகள பொருந்திய தேமலையும் உடைய ஒளிபொருந் திய அணிகளை அணிநத மஙகையா, உயர்நத பிறையினைத தொழும பொலிவறற மாலைககாலததே நாம் இங்கே தனித் திருககப பொருளீட்டும வினைககண் செலவின் காலம் தாழ்ப்பீா அல்லிரோ எனறு குறியனவும நெடியனவு மாகிய ஊடலுரைகளைக கூறி நேற்றும் நம்முடன் இனிய பலவறறை உரைதத இளமை பொருந்திய நல்லளாய நம் தலைவியது பெரிய நலல ஊரினது மன்றும தோன்றாது மரங்களும மறையப் பெறும் ; இனி எத்தன்மையது ஆகுமோ ? இரங்கததககது.

—பாயினர்த்தைத மகனார் பாடியது

240 - பாலை

[தோழி, இரவுக் குறிவந்த தலைமகறகுப் பகறகுறி நேர்ந்தது]

புலிநகக கொன்றையின் கரிய கொம்பின் பெரிய கிளையில தனியே யிருக்கும தன் குஞ்சினை நினைத்துத் தணி யப் பறததலையுடைய நாரை, நீலமணி போலும மெய்நற் பூக்களையுடைய கரிய கழியினின்றும் மேலே எழுந்து பறநதிடக் கடறகரைச் சோலையும் இப்பொழுது தனிமை யுற்றது ; செறிந்த கடலாகிய திரையையுடைய சுரததில் திரிநது வருந்திய திண்ணிய படகின் வளைகொளியில் தான் அகப்படுத்திய பலவாய மீன் கூட்டங்களை என் அண்ணன்மார்க்குக் காட்டுதற்கு என் தந்தையும் இரவில்

மனைக்கண் போதரும், என் தாயும் ஆயத்தாருடன் தெய்வ முடைய குளிர்ந்த துறையாய ஆங்கே அத்தெய்வத்தைத் கையால் வணங்கித் துதித்து அதற்குச் சிறப்புச் செய்யும்.

நீயும், தேன் ஒழுகும் மலர்களை அணிந்த கூந்தலை யுடைய தலைவியது அழகிய நெற்றியைத் தடவிக் கோங்கு அரும்பைப் போன்ற குவிந்த முலையினையுடைய மார் பகத்து இனிய துயிலை விரும்பினையாயின் அங்ஙனம் அவளைக் கூடிச் செல்லுதற்குச் செருந்தி மரம் பொருந்திய வெள்ளிய மணல் பரந்த முடுக்கில புன்னை மரங்களை யுடைய அழகிய தண்ணிய சோலைக்கண் வருவாயாக.

—மூலங்கிழார் நாகன் குமரனார்

241 - பாலை

[பிரிவிடை வேறுபட்ட தலைமகள் வற புறுக்கும் தோழிக்குச் சொல்லியது.]

தோழி! என்னை வெறுத்து அருளுவார் ஒருவர் வெறுப் பின்றி ஒன்றிய என்றும் பிளவுபடாத நட்பினையுடைய இனிய குணங்களையுடையவர் நம் தலைவர் என அவரது நற்குணங்களைப் பாராட்டிக் கூறினும், என்றும் நம்மை விட்டுப் பிரியாக் காதலுடன் நம் பக்கத்தில் உள்ளார் ஆகிய நம் காதலர் இப்பொழுது மலையின் உச்சிக்கண்ணே உள்ள மூங்கிலின் இளைய முளை வதங்கவும், மூங்கில் தண்டுகள் ஒலிக்கும் பெரிய பாறையின் இடங்கள் வெம்பவும் மழை பெய்யாது மறந்து போதலின் அருவி இல்லையாகிய அச்சம் வரும் அகன்ற இடத்தே தோன்றிய வெள்ளிய பேய்த் தேரை மழையென்று கருதி ஓடித் தாகம் பட்ட தனித்த பெரிய கலைமான், அவ்விடத்தினின் றும் மீண்டும் உறைதல் மாட்டாது அப்பேய்த் தேர் அசையும் இடமாய அக்காட்டின்கண்ணே வருத்தத் துடன் தங்கிக் கிடக்கும், பாலை நிலவழியில் உள்ள

நெலலியின் இனிய சுவை பொருந்திய திரண்ட காய்கள் ஆகிய வட்டமான கழங்குகளாக கொண்டு பஞசு போனற மயிரினையுடைய தலையினையும் சிவந்த முகத்தை யும உடைய மநதி தாவி விளையாடும மலையினைக் கடநது சென்றார் ஆதலின ஆற்றகிலலேன்

—காவன் முல்லைப் பூதனார்

242 - குறிஞ்சி

[தலைமகன சிறைப்புறத்தானாகத் தோழி தலைமகட்குச் சொல்லுவாளாய்ச் சொல லியது.]

தோழி! அரும்புகள் முதிர்ந்த வேங்கை மரத்தின் கிளைகளில, வணடுகள பூவின் வாயைத் திறந்தலால் பொன்னைப் போன்ற நுணணிய பொடிகள் நீலமணியைப் போன்ற தோகையில் உதிர்ந்திட, அழகு மிகுந்து விளங் கும பொறிகளையுடைய மயில் ஆடும சோலையின் பக்கததே சிவந்த தினையின் வளைநத கதிர்களையுடைய பெரிய கொல்லையில் வரும கிளிகளை நம்முடனிருந்து ஓட்டிய நம தலைவனது நல்லியல்புகள தருதலால் வந்த வருததத்தை அறியாதவளாகி; நமது அன்னை சிறந்த அழகினையுடைய எனது மகளுக்குத் துன்பம வநத காரணததை அறிதல வேண்டும் என்று பல பிரப்பினைப் பலியாக வைத்து; உண்மையை அறியாத வேலனை அழைத்து வெறியாடும் பெரிய களம் பொலிவு பெறுமாறு துதித்து, ஆட்டுக குட்டியின உயிரைப் பலியிடா முன்னரே, விளங்கும ஒளியினையுடைய வளை கழன்ற முன்கையும நேரிய சந்தினையுடைய பெரிய தோளும் நல்ல அழகு ஒழிவினின்றும நீங்கிப் பழைய அழகினைப் பெறு மாறு யாம சென்று, தேன் கூடுகள நிரம்பிய பககமலை களைக கொணட பெரிய மலையின் பிளப்புக்களிடத்தே சந்தன மரத்தின் மெல்லிய கிளைகள் நீண்ட மேவிடத்த

தாகிய தேனிறால் தொங்கும் மூங்கிலைத் தன்னகத்தேக் கொண்ட மலைநாடனது முனபு கூடிய மார்பினை அரும்பி வருதலுடைய இளைய முலை மூழ்கிடப் பலமுறை தழுவு தல் தக்கது.

—பேரிசாத்தனார்

243 - பாலை

[தலைமகன் பிரிவின்கண் வற்புறுத்தும் தோழிக்குத் தலைமகள் ஆற்றேன் என்பது படச் சொல்லியது]

தோழி! அவரையின் அழகிய மலர் உதிரவும் பவளம் போல் இண்டையானது பூக்கவும் பகன்றை வாடை யுடன் நுண்ணிய மழைத் துளியால் மலரவும் மழையாகிய நீர் புதுவதாக வருதல் ஒழியவும் விளங்கும் கதிர்களை யுடைய வயலின் நெல் ஒலி செய்யும் பசிய பள்ளங்களைத் துழாவிக் கல்லென்ற ஒலியுடன் விரைந்து வந்து தங்கிய இரக்கமற்ற வாடையானது காலம் தாழ்க்காது தலைவ ரிடத்தே விரைந்து சென்று, நீ வந்து நெடுங்காலம் தாழ்த் தனை என்று, பலவற்றையும் வெறுத்து உறையும் துணைவ ருடன் கூடியிராத வாழ்க்கையினையுடைய நமது வலித் தன்மையைக்கூறி அவர் தம் நிலையினைத் தேருமாயின் பெரிதும் நன்றாகும்; இப்பொழுது அவ்வாடையானது நாம் நீர் ஒழுகும் கண்களை உடையேம் ஆக நமக்கே துன்பம் தருவதாக ஆகின்றது. நமது பழைய தீவினையின் பயன் அத்தன்மைத்துப் போலும்.

—கொடியூர் கிழார் மகனார் நெய்தற்றத்தனார்

244 - முல்லை

[வினைமுற்றிய தலைமகன் தேர்ப் பாகற்குச் சொல்லியது.]

பாகனே! கரிய சிறகினையுடைய வாவல் பகலில் தங்கியிருந்த மிக உயர்ந்த கிளைகளையுடைய முதிர்ந்த மரம் தனித்துப் போகக், கொடியின் மீது அரும்புகள் வாய் திறந்து மலர்ந்த ஒளி பொருந்திய முல்லை மணமகள் கூந்தலைப் போல மணந்து, வண்டின் கூட்டங்களைச் செல்ல வொட்டாது தடுக்கும் குளிர்ந்த செவ்வியை யுடைய கார்காலத்தே, தோழியே! நம் தலைவர் ஈண்டு வரினும் வாராது இருப்பினும் அவர் சென்ற இடம் அவர்க்கு இனியது போலும் என்று கூறித் தனது தாமரை மலர் போன்ற குளிர்ந்த கண்ணின் உள்ளிடமெல்லாம் சிவக்கப் பொறுத்தற்கரிய துயரினை யுடையளாயினள் நினது தலைவி என்று பாணன் விரும்பித் தூதாக வந்தனன்; நாம் எண்ணி முயன்ற வினையும் முடிவுற்றது; நீயும் புல்லினைத் தின்ற குதிரையைப் பூட்டி நீண்ட தேரினை விரைந்து செலுத்துவாயாக

—மதுரை மள்ளனார்

245 - பாலை

[பொருள் கடைக் கூட்டிய நெஞ்சினைக் கழறித் தலைமகன் சொலவிச் செலவழுங்கியது.]

நெஞ்சே! நன்மையினை விரும்பிய அறிவினையுடையராய நம் தலைவர், உயிரைக்காட்டிலும் சிறந்த பொருளைத் தருதல் வேண்டிச் சென்றனர் என்று துணிந்து; மலையின் கண் தங்கியிருக்கும் வலியுடையள் ஆதலை நீ நன்றாக அறிந்துளாயாயின இவளின் நீங்கி, மழை பெய்யாத காரணத்தால் மூங்கில்கள் வற்றிய வழியில் செல்லும் வணிகர்களை அலைத்திடும் பண்பு இல்லாத வாழ்க்கையினை யுடைய மறவர் தலைவர் இருள வரக், கள் விற்போர் பொருந்திய மனையகத்தே கள்ளிற்கு உரிய விலைப்பொருள்

எய்தப் பெறுராகி யானையின் வெள்ளிய கொம்பினை எடுத்து வருதல் குறித்துப் புதலவனுடைய புல்லிய தலையைத் தடவி ஏவும் அரிய போர்முனைகளையுடைய பாக்கத்திடத்தே தங்கி, இருள் கழியும் விடியல் தோன்ற இலவ மரத்தினது அசையும் கிளையில் உள்ள பூக்களில் வண்டுகள் ஒலிக்கும் இடமாகிய பாறையிடத்தே காய்ந்து கிடக்கும் சுள்ளிபோலும் வெள்ளிய எலும்புகள் ஒட்டத்தின் மிக்க பரியினைப் போக்கும் காட்டினைக் கடந்து அழகிய மாமை நிறத்தையுடைய நம் தலைவி தனித்திருக்க நீ செல்வாயாக, யான் அவளைப் பிரிந்து நின்னுடன் வாரேன.

—மதுரை மருதனிள நாகனார்

246 - மருதம்

[தோழி தலைமகற்கு வாயில் மறுத்தது.]

சருச்சரை பொருந்திய வயிற்றினையும் பிளந்த வாயினையும் உடைய ஆணசங்கு கூரிய மூக்கினையுடைய ஆரல் மீன் கரிகூறுவோனாக, ஆழ்ந்த நீரையுடைய குளத்தில் பெண்சங்கினொடு மணம் புணரும் நீர் நிறைந்த அகன்ற வயல்களையுடைய புது வருவாய் மிக்க ஊரனே! மலர்கள் நிறைந்த கூந்தலையுடைய நினனுல விரும்பப் பெற்ற பரத்தையொடு பூந்துகள் நிறைந்த குளிர்ந்த காஞ்சி மரச் சோலை சூழ்ந்த அகன்ற ஆற்றின் கணணே நீர் விளையாட்டயர்ந்தனை யெனப் பலரும் கூறு நிற்பார்; அதனால் எழுந்த அலர், மிக்க சினமும் வலிமையும் உடைய பெரிய புகழினைக் கொண்ட கரிகாலன வெண்ணி வாயில் என்னுமிடத்தே சிறப்பு வாய்ந்த பகையரசர் மாறுபட்டெழுந்த போரின்கண் வீரமுரசம் போர்க்களத்தே ஒழிந்துகிடக்க வேளிர் பதினொருவருடன் இருபெரு வேந்தரும் நிலை

கெட அவர்தம மிக்க வலியைக் கெடுத்த நாளில் அழுந் தூாக்கண் எழுந்த ஆரவாரததினும் பெரியதாயது.

—பரணர்

247 - பாலை

[தலைமகன பிரிவின்கண வேறுபட்ட தலை மகளது வேறுபாடு கண்டு வேறுபட்ட தோழிக்குத தலைமகள சொல்லியது]

தோழி! பொருளை விருமபி, வெப்பம பொருந்திய வாயினையுடைய ஆணகரடி இருப்பை மரததின் வெள்ளிய பூவினை வெறுத்ததால் பெரிய செம்மண புற்றினது பெரிய உசசியினைப் பெயர்ததிடும செல்லுதறகு அரிய காடு என்று நினையாராய, மாறுபாடு கொண்டு போர் செய்த லால் பாழாகிய சீறூரிடத்தே ஆட்களின வருகையை எதிர்நோககிக கொலலுதல் வலல யானை சுரநெறியைக் காவல கொண்டிருததலின் துன்பம் மிக்க கவர்ததன வாகிய பல நெறிகளையும் கடந்து, மிக்க புலால் நாற்றத் தினை விருமபிச செல்லும் பறத்தலையும நீண்ட கழுத்தினை யும உடைய பருநது மரக்கிளையிற் றங்கியிருக்கும் மலை யைக கடந்து சென்றோர் ஆகிய நம் தலைவர், கழுவாத முததமாய கண்ணீர் ஒழுகவிடப் பெற்ற அழகிய முலை யினையுடைய மாாபு தனித்து வருந்தத துறந்து சென்றோர் ஆகலின அருள் அற்றவரே யாவர்; என்செய்வோம்.

—மதுரை மருதங்கிழார் மகனார் பெருங்கண்ணனார்

248 - குறிஞ்சி

[இரவுக்குறிச் சிறைப்புறமாகத் தலைமகட் குச சொலலுவாளாய்த தலைமன் கேட்பத் தோழி சொலலியது.]

தோழி! நேற்று இரவு நிகழ்ந்த நகைக்கிடனுய செய்தி யொன்றைக் கேட்பாயாக: வலிய வேட்டமாடும்

நாயைக கடிந்து விலககி, வேட்டுவா நெருங்குதலேத் தடுதது வலிமை பொருந்திய் குட்டிகளை அணைததுக் கொணடு தொங்கும முலையினையுடைய பெண பனறி கிளையுடன் பெயரக காட்டினின்றும வெளிவந்து அரிய வாயிலாய முடுககிலே, வேட்டம செயயும் ஆட்களை எதிர் நோக்கி நின்ற அஞ்சாமையுடைய பன்றியினைக், கானவன பககத்தில சென்று நோககித் தன் விலலிற் கோதத கூரிய முனையையுடைய அம்பினை மடுததல அமைநத வலியை யுடைய தன் படை இரியவும தான் பெயராது நினறு பகைவர் வரும் அரிய வழியில அவரைத தடுதது நிறகும எமது பெரிய வல்லாளனைப் போலும இதுவென வியநது அபபனறியின் மேல் எயயாது மீளும இடமாய மலே பொருந்திய நாட்டினையுடைய நம் தலைவன ஆகிய, நெருங் கிய தூறுகள் பற்றியிழுததலால் அறுபடடுப் புரிகள அவிழ்ந்து வீழ்தலின உயாநத திரணட தோளிடததே பூககள் உதிரப்பெறும் மாலையானது எருதின திமிலினகண கிடககும கயிற்றைப் போன்று அழகு பெற அடைநதிட நம இலலின்கண வந்து நினறவனை, நம அனனை கணடன ளாகி விரைய என் முகத்தினைப் பாரதது நீ மிக வு ம நலலவன் எனறு கூறி நகா நின்று புறம போயினள, என் செய்வாம்.

-கபிலர்

249 - பாலை

[தலைமகன் பிரிவினகண் வேறுபட்ட தலைமகளது வேறுபாடு கணடு ஆறறுளாய தோழிக்குத் தலைமகள் சொல்லியது.]

தோழி! நான் கூறுவதனைக் கேட்பாயாக: மயிலின் சிறகால் தொடுத்தலையுடைய மாலையை அணிந்த மழவர், பல பூக்களையுடைய காட்டில் சுருங்கிய நிழலில் தங்கி இளைய பசுவினைக் கொன்று அதன் ஊனினைத் தின்ற

இடமாய புலால வீசும இடத்தினைத் துாரவிய புறத்தியைத் தனனிடத்தே கொணட மேல காற்றின் ஒலியினை, ஆண மானுடன கூடிய கூட்டமாய மானினம் நீண்ட மூங்கிலை யுடைய பக்க மலையில் இரையினைக் கொள்ளுதற்கு விரும்பி எழுந்த ஒளி பொருந்திய வரிகளையுடைய வலிய புலி மானைப பற்றியதால எழும் ஒலியாகக் கருதி வேறு வேறாகிய கவாதத நெறிகளில வருந்தி அலறி ஓடும மலை யைக கடந்து சென்ற நம தலைவா, வளம் பொருந்திய வாரிலுல இறுகப பிணிதது கட்டிய கிணைப் பறையின இனிய குரலை எழுப்பிப் பாடும பாணா இருந்து வேண்டின நாளதோறும் பொற் பூவினைக கொம்பில் செருகச் சோத்துப பொன்னரி மாலையினைக கழுத்தில் அணிவித்துச் சந்தனம பூசி உயர்ந்து அசையும் அழகிய திமிலினை உடைய ஏற்றினை முன்னர நிறுத்தி மிக்க உணவினைக குவித்து நீண்ட தேரினை யானையுடன் சேர அளிக்கும், வளைந்த பூணையும் பலவேறு படையையும் உடைய முசுணடை என்பானது போம்பி மன்றுாற வைப்போன்ற எனது நலல அழகிய இளமையைச் செலவிடுதல வாழ் யும வந்து அருள் செய்கின்றிலர்; அங்ஙனமாக வொட்டு பல நாளாக இவ்வூரார் செய்யும அம்பல என்னையோ?

—நக்கீரனார்

250 - நெய்தல்

[தலைமகற்குக் குறை நேர்ந்த தோழி தலை மகட்குக குறை நயப்பக் கூறியது]

தோழி! நெருங்கிய துளிகள் மிக்க அலைகளால் வருந் திய அசையும் கிளையினையுடைய புன்னை மரத்தின் வண்டு கள் ஒலிக்கின்ற பூங் கொத்துக்களின் நுண்ணிய பூம் பொடிகள் உதிர்ந்து அழகு செய்ய மணம் நாறும் மெத் தென்ற மணல் மேட்டில் யாம் அழகு பொருந்தக் கூட்டம் கொண்ட ஆயத்தாரொடு கலந்து விளையாடா

பிறகு, அப்பொழுது, மொட்டினையுடைய நீண்ட தேரினைத் தன் ஏவலாளரோடு நீக்கி நிறுத்தி தாரினையும் கண்ணியையும் உடையன ஆகி, அணுக வந்து ஒருதலைவன் யாம் இயற்றிய வண்டல் மனையைப் பாராட்டிய சொல்லையுடையனாகி யாதொன்றும் மறுமொழி பெறாது மீண்டு சென்றனன்;

அதுமுதல் அரிய நினைவால் ஆய துன்பத்தால் பெரிய தோள் மெலியப் பரதவரது கடற் கரையில் உள்ள அழகிய சிற்றூரிலுள்ள கொடிய வாயினையுடைய பெண்டிர் தூற்றும் அலரால் உள்ளம் கலங்க முன்கையிட்டது வளை நெகிழப் பெற்ற நம்முடன் இராப் பொழுதிலே கடல் துறையும் துஞ்சுகின்றிலது; இதற்குக் காரணம் என்னையோ?

—செல்லூர் கிழார் மகனார் பெரும் பூதங் கொற்றனார்

251 - பாலை

[தலைமகன் பிரிவின்கண் வேறுபட்ட தலைமகளது வேறுபாடு கண்டு தோழி சொல்லியது]

தோழி! நாம் தலைவர்பால் செலுத்திய தூதர்களும் சென்றுள்ளார்கள், நாம் படும் துயரினை அத்தூதுவர் கூறக் கேட்பின், வெல்லும் கொடியினையும், விரைந்து செல்லும் தேரினையும் உடைய கோசர் என்பார், மிக்க பழமை வாய்ந்த ஆலமரத்தின் அரிய கிளைகளையுடைய மன்றத்தே, இனிய ஓசையையுடைய முரசம் குறுந்தடியால் அடிக்கப் பெற்று ஒலிக்கப் பகைவரது போர்முனையை அழித்த காலத்தே மோகூர் என்பான் பணிந்து வாராமையின் அவன்பாற் பகைமை கொண்டவராகிய குதிரைகள் பொருந்திய சேனையினையுடைய புதிய மோரியர் என்பார் புனையப் பெற்ற தேர் உருளை தடையின்றிச் செல்லுதற்

பொருட்டு உடைத்து வழியாகிய விளங்கும வெள்ளிய அருவிகளையுடைய மலை நெறிக்கு அப்பாற்பட்ட, பெருமை வாய்ந்த யானையானது தன் வாயினின்றும் தப்பிய வலிய புலியைப் பெரிய நிலம் குழியக் குத்திக் கொன்று செருக்குடன் பாதுகாவல் இன்றித் தங்கியிருக்கும் தேக்கு மரங்கள் நிறைந்த காடாகிய தொலையாத நீண்ட இடத்திலே சென்று, அரத்தால் அறுத்து இயற்றப் பட்ட அழகிய வளையினை நிலையினின்றும் நெகிழச் செய்தோராகிய நம தலைவர் நந்தன் என்பான் தொகுத்து வைத்த செல்வத்தையே எய்துவதாயினும் இனி அங்குத் தங்கியிரார், விரைந்து வந்துறுவார்; இனி நம் தோளும் வளை செயப் பெறுவோம நெற்றியின்கண் உள்ள பசலையும மறநதொழியும.

—மாமூலனார்

252 - குறிஞ்சி

[தலைமகன சிறைப்புறத்தானாகத் தோழிக்குச சொல்லுவாளாய்த் தலைமகள சொல்லியது]

தோழி! தான் கொல்லும் விலங்குகள் இடது பக்கத்தே வீழ்தலை அறியாத வெற்றி பொருந்திய வேட்டத்தினையுடைய புலி நடுங்கிட விருப்பங் கொண்டு பாய்ந்து ஆளியானது உயர்ந்த நெற்றியினையுடைய யானையின் புள்ளி பொருந்திய முகத்தைத் தாக்கி அதன் வெள்ளிய தந்தத்தினைப் பறிக்கும இடமாய தண்ணெனக் கமழும சோலையினையுடைய பெரிய மலையின் சாரலின்கண் வேல் ஒன்றினையே கொண்டு தனியனாகி வருதலைத் தலைவனும் அஞ்சுகின்றிலன்;

நீர் ஒழுகும் கண்ணை உடையேம் ஆகிப் பிரிதல் துன்பம வருத்த, தனித்து இருத்தலை யானும் ஆற்றுகிலேன்; கடிய காவல் கொண்ட நமது அன்னையும்

இண்டையின் ஆர்கக்கு விரிநத குளிர்நத மலர் உதிருமாறு பெயதல தொழிலையுடைய மேகம நீரினை வீசிச் சொரிந்த நடுநாள இரவில வீசும் அலைகளின் துளிகள் பரக்கும் சிறிய கரையினையுடைய பெரிய குளததைக் காத்தல செயபவன் போலக் காவல் செய்து தூங்குதலை மறந்து விட்டனள ; யாம என்செய்வாம்?

—நக்கண்ணையார

253 - பாலை

[தலைமகன பிரிவினகண வேறுபடட தலை* மகடகுத் தோழி சொலலியது]

தோழி! தினந்தோறும பசலையானது படர்தலின் என் உடம்பு விரைய இறப்பினை எய்தி வருகின்றது, தாயும் வெறுத்த முகததினள் ஆகின்ருள், ஊரினிடதது எழும் அலர்தான, பொற பூவினை அணிநத கொஙகரை அகற்றி அவர்தம நாடுகளைக கைககொண்ட பசும்பூட பாண்டி யன் என்பான மதுரைமா நகரததின்கண் அவ வெற்றிக் களிப்பினுல் ஆடிய இனிய ஒலியையுடைய ஆரவாரத் தினும அதிகமாகினறது, இவ்விடததே சில நாளும் உயிா தரிததிரேன் போலும என்று பலவும எண்ணித துன்பத் தில அழுந்தாதே;

வடக்கின் கண்ணதாகிய, இயங்குதற்கரிய நள்ளிரவில் அழகிய பசுக்கூட்டங்களைக கவர்நது வருவதற்குப் பகைப் புலத்தைக கெடுத்துப் பல இனங்களையும் ஓட்டும் தங்கள் நெடிய கூப்பிட்டொலியை அறிநது பசுவினத்தைத் தன் னிடததே அணைத்துக்கொண்டு வரும் நல் ஏறுகளின் கழுத்தில் தொங்கப் பூட்டியுள்ள மூங்கிற் குழாயில் நிறைவு எய்துமாறு பெய்த செறிவுமிக்க உணவினராகிய கூட்டம் மிக்க கோவலரது தொழுவாகிய அறையினைக கவர்நதும கன்றுகளையுடைய ஆனிரையை மன்றுகள் நிறையுமாறு கொணரும் வடுகர் தலைவனுகிய எருமை

எனபானது நல்ல நாட்டினகண் உள்ளதாகிய அயிரி என்னும ஆறறினைக கடநது நம் தலைவா சென்றனர் ஆயினும், மூங்கில போனற தோளினையும குருமனைப போனற மெல்லிய முலையினையும அரும்பிய சுணங்கினையும தாழ்ந்த கரிய கூந்தலினையும் உடைய, மாகமாகிய வானில் உள்ள இடையே திலகம பதித்த திஙகள போனற அழகிய முகத்தில உளள ஒளி பொருந்திய மதததக மணியமைந்த காதணியாகிய குழையொடு பொருந்த பாவையையோ அவர் மறவியறறு என்று நினையா ரிற்பா.

— நக்கீரர்

254 - முல்லை

[வினைமுற்றி வந்தெய்திய தலைமகன் தேரபபாகற்குச் சொல்லியது.]

பாகனே! நரைமயிர் கலந்த மெல்லிய கூந்தலையுடைய முதிய செவிலித்தாயார் தனக்குப் பலமுறை பாராட்டிக கூற, பொன்னாலை செய்யப் பெற்ற சதங்கையை அணிந்த அழகிய சிவந்த அடியால மணல் பரந்த முற்றத்தே நிலம வடுககொளளுமாறு செய்து மனையில் தங்கியுறையும சிவந்த காலினையுடைய புறவின் சேவல் தன் பெடையொடு குறுகக குறுகப் பறந்தலைச் செய்து பின்பு மேலே எழுந்திட விளையாடும் தன் தோழியராய ஆயமரைக் காணுந்தொறும் நம்பால் நினைவுங்காள்ளும் நம் தலைவி தனிமையொடு தங்கியிருக்கும் மிகக துன்பம் நீங்குமாறு வேந்தற்கு உற்றுழி உதவும் வினையினால் இவ்வேற்று நாட்டின்கண் வநது தங்கி மேற்கொண்ட வினையினை முடித்துள்ளோம் ஆகலின், நீயும் போர்த் தொழிலிற் பயின்ற குதிரை பூட்டிய நீண்ட தேர் உருளை, மின்னிய மின்னுககொடி போன்று செலுத்தப் பெறுகவின், வழியிலுள்ள பசிய பயிர்கள் அறுபட்டு விலகச் செம்முல்லை வெண் முல்லையுடன் கூடி நறுமணம் கமழும் மலர்

செறிந்த காட்டினது நீண்ட வழி பின்னுறச் செலுத்து வாய என்று யான கூறிய அளவையானே தாழ்க்காது யாம மகிழ்வு பெறும பரிசு மணிமாலை யணிந்த குதிரையின் உள்ளம அறிந்து விரைய ஊர்க்கு அணித்தாகத் தேரினைக் கொண்டு வந்தனை வாழியா.

—மதுரை அறுவை வணிகன் இளவேட்டனூர்

255 - பாலை

[பிரிவிடை வேறுபட்ட தலைமகள் ஆற்றாமை மீதூரத் தோழிக்குச் சொல்லியது.]

தோழி! உலகு புடை பெயர்ந்தாற் போன்ற அச்சம் தோன்றும நாவாய், பெரிய கடலின் நீரை இடையே பிளந்து செல்ல இரவும் பகலும் ஓரிடத்தும தங்குதல் இன்றி விரைந்து செல்லும் இயற்கையினதாய காற்று அசைத்துச் செலுத்த நாவாய ஓட்டுவான கரை உயர்ந்த செறிந்த மணலையுடைய அகன்ற துறைக்கண் மாடத்தின் மீதுள்ள ஒள்ளிய விளக்கினால இடம அறிந்து செலுத்தப் பொருளிட்டும் முயற்சிபற்றி நம்மைப் பிரிந்து சென்ற நம் தலைவர், மருத நிலமாய நீர் மோதும காட்டிலுள்ள நமது ஊரிடத்தே கருவிளையின பூவினொடு மாறுபட்ட குளிர்ந்த பகன்றைச் செடியின மலர்களின் அகவிதழை அசைத்துப் பலாக்காய போலும புறத்தினையுடைய அழகிய பழத்தினையுடைய பாகற்கொடிகள் கூதாளியின் முதிய பூலைகளையுடைய கொடிகளின் கூட்டத்திற் கிடந்து அசையுமபடி செய்து, நம்மை அறமில்லாது வருத்தும் நீங்காத வாடை; காவல் பொருந்திய மாடமாய மனையில இரவெல்லாம் வீசலின் திருந்திய அணிகள சோரப் பெரிய அழகு கெட்டத் தோளானது வரிசையாகவுள்ள வளைகள் நெகிழ்ந்து வீழப்பெறும் என்னும் உரைகொண்டு தூது செல்லும் அன்பினரைப் பெறின நமது மிச்க

துன்பம் நீங்கப் பலநாள் தாழ்க்காது விரைந்து வருவர்.
அங்ஙனம் சென்றுரைப்பார் இலரே; என் செய்வாம்.

—*மதுரை மருதனிள நாகனார்*

256 - மருதம்

[*தோழி தலைமகற்கு வாயில் மறுத்தது.*]

வளைகளைக் கொடியின் நீண்ட இலைச் செறிவில் மடிந்து கிடக்கும் துயிலை வெறுத்த வலிய நகத்தை யுடைய யாமை ஒலித்தல் செய்கின்ற பரல்களின் வழியே சென்று அகன்ற நீர்த் துறைக்கணே பிளந்த வாய் நிறைந்திடப் பனங்கள் அருந்துங்கால் சிந்திய ஒழுக்கினை யுண்ட களிப்புடன் செல்லும் நடையொடு இனிய பெரிய வயல்களைக் கலக்கி அதன் அயலதாகிய ஆம்பலது மெல்லிய இலைகட்குள்ளே ஒடுங்கிக் கிடக்கும் ஊரனே! நீ பொய் கூறாதே, நின் மாயம் அறிவேன் நின் பரத்தமை வெளிப்பட்டமையை நீ அறிந்திலை, நேற்று மையுண்ட அழகிய கண்களையுடைய பரத்தையுடன் வையையின் அழகு பொருந்திய புதிய புனலில் உரிமையுடன் இன்பம் நுகர்ந்திட அதனைப் பரத்தையர் கூட்டம் ஊரார் அறியாமல் மறைக்கவும், மறைக்க முடியாமல் மிகவும் அலர் எழுகின்றது;

அவ்வலர்தான், பல வகையான பூக்கள் நிறைந்த வயல்களையும் கரும்பு மிக்க தோட்டங்களையும் உடைய மிக்க சிறப்பு வாய்ந்த கள்ளூர் என்னும் ஊரின்கண், அழகிய நெற்றியையுடைய இளையாள் ஒருத்தியின் அழகிய நலத்தினைக் கவர்ந்துண்ட அறநெறி இல்லா ஒருவன் பின்பு தான் அவளை அறியேன் என்று கூறிய நீதியில்லாத கொடிய சூளினை அவர்தம் கூட்டம் உணர்ந்த சான்றோரை வினவி உணர்ந்து அவனை அவையத்தார், தளிர்கள் பொருந்திய பெரிய மரத்தின் கிளையில் இறுகப் பிணித்து

நீற்றினை அவன் தலையிற் பெய்த காலத்தே சிறப்பு மிக்க அவையின்கண் எழுந்த ஆரவாரத்தினும் பெரிதாயிற்று'.

—மதுரைத் தமிழ்க்கூத்தனார் கடுவன் மள்ளனார்

257 - பாலை

[உடன் போகா நின்ற தலைமகட்குத் தலைமகன் சொல்லியது]

குறுமகள், ஆறலைக் கள்வர்களுடைய பகை மிக்க, கவர்த்த நெறிகளில் புதியவர் தாம் செல்வதற்குரிய வழி இது எனக் காணும் பொருட்டு மேலிடத்தே ஏணி சார்த்தப் பெற்ற யாமரத்தின் நாரினையுடைய அடிமரத்தில் நீர் வரும்படி உரித்துக், களிற்று யானை சுவைத்துப் போட்ட சக்கையாகிய சுள்ளிகள் கல்லாத உப்பு வாணிகர்க்குத் தீ மூட்டும் துரும்பு ஆகும், துன்பம் உறத்தக்கவன ஆகிய அவ்விடங்களில் தூறுகள் படர்ந்த புற்றின்கண் இராப் பொழுதில் உண்ணும் இரையினை விரும்பி வெள்ளிய பாம்புகள் பிறழும்படி கையால் வவ்வும் குட்டிக் கரடிகளையுடைய மலையினிடத்தே, பாதிரியின் மணம் வீசுகின்ற வேனிற் காலத்தின் பகற் பொழுதில் சுரத்தின்கண்ணே சிலம்பினை அணிந்த நின் சிறிய அடிகள் சிவக்க எம்முடன் ஒரு நெறியில் பொருந்தி வரற்கு, அழகு பொருந்திய கூந்தலை வாரி வெண்கடம்பின் மலர்களைத் தொடுத்துச் சூடிய நினது தேன் பொருந்திய கூந்தலில் குறியனவாய்ப் பலவாக மொய்க்கும் வண்டுகளைக் கடிந்து பாதுகாவலை அறியாயாய் அழகு பொருந்த, ஒளி பொருந்திய வளை ஒலிக்கும் முன் கையையுடைய தோள்களை விளக்கமுற வீசிப் பெரிதும் நடத்தல் வன்மையுடையை ஆகின்றுய.

—உறையூர் மருத்துவன் தாமோதரனார்

258 - குறிஞ்சி

[அல்ல குறிப்பட்டுப் பதிப் பெயர்ந்த தலை மகன் தன்னெஞ்சிற்குச் சொல்லியது.]

நெஞ்சே! நன்னன் உதியன் என்பானது அரிய காவலையுடைய பாழிச் சிலம்பில் பழைமை மிக்க வேளிர்கள் பாதுகாவல் செய்து வைத்த பொன்னைக் காட்டினும் எய்துதற்கு அரியளாதலை நன்கும் அறிந்தும் அவளை யாம் நெருங்குவேம் அல்லேம் என யான் கூறினும் அங்ஙனம் என கூற்றிற்குப் பொருந்தாயாய், நாள்தோறும் மென்மைத் தன்மை வாய்ந்த இளைய தலைவியை நின் நல்ல அகத்தில் விரும்பிப் பாம்புகள் இரை தேடித் திரியும் அச்சம் தோன்றும் ஒடுங்கிய வழியில் இராப்பொழுது சென்று பெறுவாகிய கண்டார்க்கு அருமை உண்டாகப் புல் என்ற கண்ணை யுடையையாய்த் தனிமை மேவி உலகத்தில் உள்ள யாவர்க்கும் பெரிய இகழ்ச்சி தோன்றக் காமம் அளவு கடந்து மிகலான் அமையாத அரிய துன்பத்தை நம்பால் எய்துவித்தனை, குளிர்ந்த மேகங்கள் தவழும் வீழும் அருவி நீரினையுடைய அகன்ற இடத்தினையுடைய கடிய காற்றுச் சூழும் நீண்ட பெரிய குன்றின் கண்ணே மயக்கத்தினைத் தரும் இருளை உடைய குகையில் ஒளியின்றி மறையும் மணிகள் போல நீ ஒளியிழந்து ஒழிவாயாக.

— பரணர்

259 - பாலை

[உடன் போக்கு நேர்ந்த தோழி தலைமகட்குச் சொல்லியது.]

என் உள்ளம் விரும்பும் தகுதியை யுடையாய்! வேல்களும் நெய் பூசப்பெற்று விளக்க முற்றன, வில்லாளரும் புறப்பட்டனர், மாலைகளும் கட்டப்பட்டன, தழையுடை

களும் தொடுக்கப்பட்டன; நிலமானது நீர் ஒழிந்ததாலாய வெப்பம் நீங்க மழை நீர் பொருந்துதலின் மரங்கள் கிளைகளிலுள்ள முதிர் இலைகளை உதிர்த்துக் குறிய தளிர்களை ஈன்றன, சோலையின்கண் நறிய மலர்கள் புனையப்பட்டன போலத் தோன்றிப் பலவும் ஒருங்கே தேன் பொருந்தச் செறிந்தன; காடுகளும் மிகவும் நல்லன ஆயின; இவ்வாறெல்லாம் சிறக்கப் பனிக்காலம் கழிந்த பின்னுளாகிய இளவேனிற்கண் பால் போன்று பரவிய நிலாவினைக் கொண்ட மாலைப் பொழுதானது தூதாக வந்தது,

மேடையில் உள்ள பூஞ்செடிகள் காய்ந்தாலும் வயலைக் கொடி வாடினாலும், நொச்சியின் மெல்லிய கிளைகளிலுள்ள வளைந்த கதிர்கள் வாடிக் கவிழ்ந்தாலும் அவை கருதியும், நின்னைக்காட்டிலும் மடப்பம் உடையாளாகி நின்னை மிகவும் விரும்பும் தாய் எய்தும் துன்பத்தை உள்ளத்திற்கொண்டும் நின் தமையன்மாரது புலியைப் போன்ற அச்சம் தரும் தலைமையை நோக்கியும் நீதான் கலங்கா மனத்தினையுடையையாகி என் சொல்லை விரும்பி ஏற்றுக்கொள்வாயாக, உடன் போகக்கினைத் துணிவாயாக, இன்றும் நின்முலை என் மார்பிலே பொருந்த முயங்குவாயாக.

—கயமனார்

260 - நெய்தல்

[இரவுக் குறிக்கண் தலைமகன் சிறைப்புறமாகத் தோழியால் சொல்லடுக்கப்பட்டுத் தலைமகள் சொல்லியது.]

மலைகள் செவ்வானத்தால் ஒளி பெறவும் வண்டின் கூட்டங்கள் மலர்களிற் பாய்ந்து ஊதவும் தாழைகளையுடைய சோலையின் மேலே யிருந்து நாரை யினங்கள் ஒலிக்கவும் கடற்கரையில் விளையாடிய ஞெண்டு வளையகத்தே செல்லவும் அலைகள் ஒலித்தல் இல்லையாகவும

மீன் படகுகள் வேட்டமாடலை நீங்கவும் செவ்வானம் தோன்றவும் தன் துணையைப் பிரியாது சேர்ந்திருக்கும் அன்றிற் பறவை மணல் மேட்டிலுள்ள பனைமரத்தின் உள் மடலில் சேர்ந்து தங்கவும் கழியிடத்து மலர்கள் மணக்கும் இதழ்கள் குவியப் பெறவும், பொழில் சூழ்ந்த மனைக்கண் உள்ள புன்னையின் நறியமலர் பொன்னின் நிறத்தைப் போன்று விரியவும் பகற் பொழுதை மெல்ல மெல்லப் போக்கி ஞாயிற்று மண்டிலம் வெம்மை குறைய இரவு வந்தக்கால் இவள் எந்த நிலைமை அடைவளோ என்று தோழி உரைப்ப, எப்பொழுதும் முழங்கும் வாயினை யுடைய பேராந்தை விரைந்து குழறி ஒலிப்பதும் பேய் இயங்குவதுமாகிய பாதி இரவில் மனம் உருகும் துன் பினைச் செய்த அன்பு இல்லாதவனுடைய அறிவுடை மொழியை மெனமையென விரும்பினேன் என்று தலைவி கூறினாள் என்க.

—மோசிக் கரையனார்

261 - பாலை

[புணர்ந்துடன் போயினகாலை இடைச் சுரத்துப் பட்டதனை மீண்டு வந்த காலத் துத் தோழிக்குத் தலைமகன் சொல்லியது.]

' தோழி! பெரிய புலியானது களிற்றினைக் கொன்று முழங்கும் ஓசையினையும், வில்லினையுடைய வேடுவரது சீறூரில அவர்தாம் கள்ளுண்டு களிப்புறலால் ஒலிக்கும் துடியின் ஒலியினையும் யாம் கேட்டமையின் தலைவி அஞ்சுவாளென உட்கொண்டு, பாதிரியின் மலர்களைப் புனலி மலரொடு கலந்து அழகு பொருந்த ஐவகைப்படும் கூந்தலிற் செருகி மரா மரத்தின் மலர்களைச் சூடி ஒளி பொருந்திய வளையல்கள் ஒலிக்கக் கையை வீசிச் சிலம்பு பொலி விளங்க மெல்ல மெல்லச் சென்று இனது அழகு மாண்புற்ற முதுகினை யாம் காண்போமாகச் சிறிது தூரம்

முன் நடக்கவென யாம் கூற, அங்ஙனம் முன்னே செல்லுதலை அவள் நாணி விரைவாக மானை ஒத்த நோக்கத்தோடு மடப்பம் பொருந்த விலகி நின்று தலை வணங்கினள்; அது கண்டு யாம் முன்னே செல்லுதலும் இல்லேமாய் அரிய சுரமாய் அவ்விடத்தே யாங்கள் தங்குவோம் ஆயினேம்.

—*பாலை பாடிய பெருங்கடுங்கோ*

262 - குறிஞ்சி

[*இரவுக் குறிக்கண் தலைமகளைப் புணராது நீங்கும் தலைமகன் தன் நெஞ்சிற்குச் சொல்லியது.*]

அருவி ஒலித்து விழும் சுனைகள் விளங்கும் பக்க மலையில் எழும் நுண்ணிய பலவாய துளிகள் அம்மலை மீதுள்ள புதல்களை எல்லாம் நனைக்கும் வண்டு பொருந்தும் மதுவினையும் கொடையால் எய்தும் மகிழ்ச்சியையும் உடைய பேகன் என்பானது மேகம் தவழும் பெரிய மலைபோலும் நாற்றம் உடையாளாய அழகிய இனிய சொல்லையுடைய நம் தலைவி வந்து புணர்ந்தமையால், பசிய காட்டில் பின்னிய கொடிகளை உழக்கி எருதுகள் பூண்ட பல ஏரால் உழுதலைச் செய்த புனசெய் நிலத்தில் இடப்பெறுவன முறையே இடப்பெற்றுப் பொருந்திய வினையுடைமையால் தழைத்த பசிய இலைகள் நிறைந்த பயிற்றில் பசு புகுந்து மேய்ந்தது. அதன் பொருட்டு பழமை வாய்ந்த ஊரிலுள்ள கோசர் என்பார் வாய்மை மிக்க தன் தந்தையை அருளாமல் கண்ணைப் பிடுங்கித் துன்புறுத்திய கொடுமை பற்றிக் கலத்திலிட்டு உண்ணாமலும் தூய்மையான ஆடையினை அணியாமலும் சினத்தினால் மேற்கொண்ட நோன்பிற்குரிய வடிவம் மாறாமலும் இருந்து, வீரம்வாய்ந்த படையினையுடைய திதியன் என்பானுக்குக் கூறி அக்கோசர்களது இனிய உயிர்களைப் போக்கக் கண்டு சினம்

ஒழியப்பெற்று மகிழ்ந்த அஞ்னி மிஞிலி என்பானைப் போல உடல பூரிக்கப்பெற்று அமையாத மகிழ்ச்சியுடை யேம ஆயினேம.

—பரணர்

263 - பாலை

[மகட் போக்கிய தாய சொல்லியது]

அசையும அலைகளையுடைய பெரிய கடலில் உயர்ந் தோர் தனனை வணங்கத் தோன்றி விளங்குகிற கதிர்களா விரியப் பெற்ற உட்குப் பொருந்திய ஞாயிற்று மண்டிலம், குளங்கள் தம்மிடத்துள்ள நீர் வற்றிட்ப பசந்த நல்ல நிலங்களின வளம கெடுமாறு முற்றிய பகைமையுற்ற வேனிற காலத்தே, வேறுபட்ட பலவாய கவர்த்த நெறி களையுடைய அச்சம தரும பெரிய காட்டிடத்தே வழிச செல்லும புதியர் வரும் வழியல்பினைக் காணும் பொருட்டு வில் வன்மையுடைய ஆறலைப் போராய ஆடவா மேலிடத்தே மறைந்து நீண்ட மலைவாய்ந்த யாமரத்தின து கோட்டினை இடமாகக் கொள்ளும் அரிய சுரத்தே, என் மகளை உடன் கொண்டு போன இளையவனுடைய காளை யிடத்தே அவள கொண்டுள்ள அன்பின் உறுதியை யான அறிந்தேன் ஆயின், ஐயோ! சேரன் பாதுகாத்து ஆளும் வஞ்சி போன்ற எனது மனை சிறப்புற்று விளங்க வெறுப் பின்றி அழகிய நெற்றியையுடைய எனது புதல்வி மகளது வளரும் முலைப்பரப்பில் அவன் தலைவன் இன்புற்றுத் துயி லும துயிலினை வதுவை செய்யால் இனிமையுறக் கூட்டி வைத்திருப்பேன் அந்தோ! அது கழிந்ததே!

264 - முல்லை

[பருவங் கண்டு வன்புறை யெதிரழிந்து தலைமகள் தோழிக்குச் சொல்லியது. தோழி தலைமகட்குச் சொல்லியதுமாம்.]

மேகம் இல்லாத வானம் விண் மீன்களை அணிந்து விளங்கினாற் போலத் தழை நிறைந்த முசுண்டையின் பூக்கள் வெள்ளியவாக மலரவும் வரிகளையுடைய வெண் காந்தளின் வளைந்த கிளையில் உள்ள பூக்களைச் சூடிக் கொண்ட கவர்த்த கோலினைக் கொண்ட ஆயர்கள் பகற் பொழுதில் மழையால் வருந்திய பல பசுத்திரளோடு நீர் விளையாடும் மாலையராய் ஊரிடத்தே மீண்டு வரவும் மிகவும் சேணிடைப் பரந்த மேகங்கள் பெரிய இடி முழக்கத் தோடு மேம்பட்டு ஒன்றோடொன்று கலந்து துளிகள் மிகுதிப் பெய்தலால் எழுச்சி பொருந்திய விரைந்த நீர் ஒழுக்குகள் போரும் செல்லவும் கூதிர்ப்பொழுது நிலை பெற்றது;

உயர்ந்த நடையினையும் மிகுந்த கோபத்தினையும் உடைய யானைகளை [illegible] குறைந்து நிறைகப் பணை வார் [illegible] அரசர் உடனாக்கள் தம்பிய சேனையையுடைய அரசர்க்கு [illegible] நம் தலைவர் நமது துன்பத்தினை [illegible] ஆயினும் [illegible] உள்ள நிலையினை யறியார் [illegible]ரோ?

—உம்பற்காட்டு இளங்கண்ணனார்

- பாலை

[பிரிவிடை வேறுபட்ட தலைமகள் ஆற்றுமை மிகுந்த தோழிக்குச் சொல்லியது.]

தோழி! விளங்கும் ஒளியமைந்த நிறக்கண்ணுள்ள அறல் போலக் குழன்ற கூந்தலினையும் குழலோசை போன்ற இனிய குரலினையும் உடைய பாவை போன்ற நீ இரங்க நமது ஒளி பொருந்திய வளை நெகிழ்ந்து வீழ மெலிந்து துன்பத்துடன் கண்ணீர் சொரிந்து யாம் இங்கு தங்கியிருக்க நம்மைக் கைவிட்டு வளைந்த வலிய வில்லை யும் கொடிய பார்வையினையும் உடைய , மறவர்கள்

குன்றினை அடைந்து இனிய முழக்கம் செய்யும் எழுச்சி
யுள்ள எருதினைக் கொன்று உயர்ச்சியுடைய கொழுப்புப்
பொதிந்த சிறந்த தசையினை நெருப்பிலே வைத்துச் சுட்டு
எடுத்து, கண்டாரை வருத்தும் அரிய திறலுடைய பேய்
களைப் போல வெறுத்த அவலுணவைத் தின்றதாலாய நீர்
வேட்கை நீங்கத் தோப்பிக் கள்ளைக் குடித்துப் புலால்
நீங்காத கையினராய்க் கழுவாத வாயினராய் முடையுறுது
விட்டு விட்டு ஒலிக்கும் கோட்டாளர் குழியொடு கூடி
வெண் கடப்ப மரங்களையுடைய பெரிய காட்டகத்தே
கூத்தாடும் செந்த நெறியினையுடைய பாணர்களையுடைய
வேங்கட மலையைப் பொருந்தியுள்ள அரிய சுரத்தினைத்
தாண்டிச் சென்ற நம் தலைவர் உறுதியுடைத்தாக
ஆராய்ந்து துணிந்த பொருள், நீக்கப்பட்டுத் தோன்
றும் இமயமாய செவ்விய மலையினை ஒக்குமோ? அன்றிப்
பல்வகைப் புகழும் மிக்க நந்தர் என்பாருடைய சிறப்பு மிக்க
பாடலிபுரத்திலே திரண்டிருந்து பின்பு கங்கையின் நீர்
அடியில் மறைவுற்ற செல்வமோ? அவ்விரண்டும் அன்று
யினை அவர் நம்மைவிட்டுப் பிரிந்தது என்னை கொல்லோ?

—மாமூலனார்

266 - மருதம்

[பரத்தையிற் பிரிந்து வந்து கூடிய தலை மகற்குத் தலைமகள் சொல்லியது.]

தலைவனே! கரையின் உச்சியைப் பொருந்துமாறு
உயர்ந்த நீரோட பெரிய பரப்பினையுடைய புதுநீர்ப் பெருக
கில் வலிமை மிக்க களிற்றினைப் போலப் புனையின் தலைப்
புறத்திலே தழுவி, மணம் நாறும் கரிய பெரிய கூந்தலை
யுடைய நினக்குத் துணையாய இளைய மகளிரொடு நீர்
விளையாட்டிற்குரிய அணிகளைக் கொண்டு நீரினைக் கண்
பெயர்ந்து விளையாடிய அவர்களுடைய அழகுமிக்க கண்
கள் நின்னைப் பார்க்குந்தோறும் பார்க்குந்தோறும் நீ

விருப்பம் தவிராயாகிக் காமம் அளவு கடந்து மிகுதலினாலே நாணத்தை இழந்து நீ அவர்களுடன் நீர் விளையாட்டு நிகழ்த்தினை என்று பலரும் கூறுவர்,

அச்செயல்தான், நீடூரின் தலைவனான எவ்வி என்பான் தன் ஏவுதலை ஏற்றுக்கொள்ளாராகிய பசிய பொன்னை யுடையராகிய பகைவரது மிக்க வலிமையைக் கெடுத்த அரிமண வாயில் உறத்தூராய அவ்விடத்தே அவனுடைய படையாளர்க்களித்த கள்ளுடன் கூடிய பெருஞ் சோற்றினாலே பகலில் எழுந்த ஆரவாரம் போன்று பெரிதும் அலராகின்றது; இப்பொழுது அது எனக்குத் துன்பம் தருவதன்று; மற்று வயலில் உழவோர் எழுப்பிய ஆரவாரத்தினை அஞ்சிப் பறந்துபோய மயில் தெய்வத்தை யுடைய குன்றிடத்தே அழகுபெற வந்து தங்கும் அழகிய மணிவிளக்கு ஒளிரும் திருச்சீரலைவாயமர்ந்த போர் வன்மைமிக்க முருகனொடு பொருந்திச் செய்த சூளுறவே துன்பம் தருவதாகும்.

—பரணர்

267 - பாலை

[பிரிவிடை வேறுபட்ட தலைமகளது ஆற்றாமை கண்டு ஆற்றாளாகிய தோழிக்குத் தலைமகள் சொல்லியது]

தோழி! நம் நெஞ்சம் நெகிழ்தற்கனவற்றைக் கூறி அன்பினாலே உள்ளம் கலந்து தாம் என்றும் பிரியாமைக் குரிய சூளுறவு செய்தோராய நம் தலைவர் பொருளீட்டும் தொழிலை விரும்பி வேறு தன்மையர் ஆயது என்னை யென்று ஆராய்ந்து வருந்துதல் ஒழிவாயாக; அச்சம் தோன்றும் காட்டிடைக் கோடைக் காற்றுக் கிளையினை மோதி உதிரச் செய்த பூளையின் அடியைப் போன்ற குவிந்த அரும்பினையுடைய இருப்பையினது வெள்ளிய பூக்களைக் கரடியின் பெரிய கூட்டம் கவர்ந்துண்ண, மை

பூசினாற் போன்ற கரிய முகத்தையுடைய ஆண் குரங்கு பசுமையற்ற நீண்ட மூங்கிலிற் பாய்தலினால் விரைய மூங்கிலில் விளைந்த வெள்ளிய நெற்கள் வெப்பமிக்க பாறையில் உதிர்ந்து பரந்து நகத்தை நெரித்தது போன்ற ஓசையுடனே பொங்கிப் பொரிந்திடும் மலைகளையடுத்த காடுகள் பலவற்றையும் கடந்து செல்றமையாய அயர் வழியுடையோர் ஆகார் ;

எக்காலத்தும் தம்மை விரும்பி [illegible] விடாது பற்றிக்கொள்ளுதலை அறியாராயினும், [illegible] வினையிலே செய்ய [illegible] நம [illegible].

— [illegible]

268 - குறிஞ்சி

[குறை [illegible]
[illegible]
[illegible].]

தோழி! [illegible] டாராய், [illegible] பொருந்திய [illegible] தலால் குருதியால் குறையுற்ற [illegible] றம் நீங்க [illegible] மலைகளின் [illegible] நாற்றத்தோடு கூடி மாற்றம [illegible] யுடைய [illegible] குறும் [illegible] அவை [illegible] டம் [illegible] அதனை நீ ஆராயாமற் [illegible] ;

[illegible] உயிரைப் போன்ற [illegible] பெருஞ் சுற்றத்தாற் சிறப்புற்ற [illegible] நம் தந்தையின் அரிய காவலைத் தாண்டிச் செய்து [illegible] துதற் கேதுவாகா நல்ல வினையைச் செய்தமையால், ஆயுங்கால் உண்மை ஆகாத பெரிய பழிகளை நான் அடைந்துள்

ளேன், ஆகலான, இவ்வுலகத்தின் கண்ணே நானும நட்பும் இலலாதவரைத தேடின் என்னை யொழிய யாரும இலராவர்

—வடமவணணக்கன் பேரிசாததனார்

269 - பாலை

[பிரிவிடை வேறுபட்ட தலைமகளைத தோழி வற்புறுததியது.]

தோழி! ஏறுகளுடன் கூடிய பசுவினமாய நிரைகள் மீளவும, மீளாது நின்று வெட்சி வீரரைத தடுத்துப் பொருதுபட்ட அஞ்சாமையுடைய கரநதை வீரரது நலல புகழை நிலை நிறுத்துமாறு பெண் யானைகள கிடநதாற போன்ற குன்றுகளின் பககததே நட்டு வைத்தவை போன்ற இயற்கையால எழுநத நீண்ட கறகளின அகன்ற இடங்களைச செதுக்கி எழுதிய பல வடிவுகளை யும நோட்டி நறுமணமுள்ள மஞ்சள் [illegible] ஈரிய புறத்தில் விளங்குமாறு பூசி அம்பினால அறுத்தெடுத்த ஆங்கிலிர பட்டையாலய நாரினால கரநதைப பூவைத் தொடுத்து [illegible] கண்ணியை வண்டுகள் ஒலிக்கச் சூட்டிக் கழலினைத் தரித்த காலினையுடைய வீரர்கள் தம பதிக்கண்ணே மீளும அரிய காட்டைக கடநது சென்றோராய நம தலைவா [illegible] இரங்கினர் இருந்த நாட்களில, ஊது கொம்பினின்று எழுநத இசை ஒலிக்க வெண்டல் [illegible] யாட் செருரிய பாலையை நீர் உண்ணும் துறையில் கொணர்ந்து வைத்துப் பெண்கள் குரவைக கூத்தாடும கடற்கரைச் சோலை சூழ்ந்த ஊராகிய வாணன் என்பானது சிறுகுடியிலுள்ள விளைந்த கதிர்களைக கொண்ட நெல்வலியுடைய அழகிய நீர்வளம் சான்ற வயலில் அரும்பு வாய் திறந்த ஒள்ளிய செங்கழுநீர் மலர் போன்ற நின் கண்ணினின்று வரும நீரைத் துடைத்து ஆற்றுவிக்க விரைந்து வந்துள்ளார்; ஆதலால் தோழி! நின் வளைகள்

தோளில் ஏறுவதாக, நின் துன்பமும் தீருவதாக, கரிய கூந்தலில் மாலையையும் நீ புனைக

—மதுரை மருதனிள நாகனார்

270 - நெய்தல்

[பகற் குறிக்கண் வந்து நின்ற தலைமகனைத் தோழி வரைவு கடாயது.]

புலால் நாற்றம் வீசும் தெருவினையுடைய பாக்கத்தில் கூட்டமாய மீன் வேட்டம் புரிபவர் பெரிய உப்பங் கழியில் மலர்ந்த வளம் வாய்ந்த முண்டகங்களையுடைய நீலப் பூக்களைப் புலிங்கத் தொண்டையாப் பூக்களொடு சூடும் மென்னிலமாய நெய்தல் தலைவனே!

இவள் தோளாகிய பொலிவிழந்தன. ... குதிரைகளையுடைய கைவல்லமையுடைய தலைவனாகிய நன்னனுடைய தேரினையுடைய குடவரையாகிய ... போன்ற அழகிய மாமை நிறம் வாய்ந்த மேனி பழைய அழகு கெடக் கண்ணீர் உகுத்து வருந்துகின்றவள்; நீயோ, தெய்வத்தினையுடைய மரத்தின் கிளையாகிய முள்ளால் பிணையப்பட்ட கூட்டில் தன் சேவலுடன் கூடப்பெறும் அன்றில் பேடை துணைபற்றி வருந்தும் இரவிலும் நமது ஊர்க்கு ஏகிவிட எண்ணுகின்றீர், யான் வருந்துகின்றேன்.

—பரணர்

271 - பாலை

[செலவுணர்த்திய தோழி தலைமகனது குறிப்பறிந்து தலைமகட்குச் செலவுடம்பட்டுச் சொல்லியது.]

தலைவ! புள்ளிகளையும் வரிகளையும் சிவந்த கால்களையும் உடைய ஆண்புறு தனது சிறிய புல்லிய பேடையுடன் செம்மையாய இடத்திற்குச் சென்று வாழ்ந்தும்

மணல நெறியில் பரற் கற்களை ஆயாதுண்டு மரற்செடி வாடியுள்ள மேகம் பெய்யாதொழிந்த அகன்ற இடத்தை யுடைய குன்றுகளின் பக்கத்தி லுள்ள துன்பம் பொருந் திய சுரத்தினைக் கடந்து நெடுந்தூரம் வந்த நீர் வேட்கை மிக்க புதியர்களின் போகும் உயிரைப் போகாது நிறுத்திய சுவையுடைய காய்களைக் கொண்ட நெல்லி மரத்தின் இலையிலிருந்து ஒலிக்கும் காட்டு வழியில் நீர்போய் அவ் விடத்தினின்று நீங்கி, ஈட்டி வருகிற ஓரிடத்தும் நிற்றலிலாத பொருளை நினைந்து செல்வீராயின் நும் பொருளீட்டும் வினை யாண்மை நன்றாகுக;

ஆயின், அத்தலைவிக்கு. வெளிப்புறக்கதவினில் என்றும் உரிமையும் நமது பெருமையும் உடைய ஐயன் என்பா னது பழங்கள் பொருந்திய பலா மரமிடத்தே வளைந்த [illegible] கலுழ்ந்து [illegible] பகுதியை ஒக்கும் நீண்ட தோளின் [illegible] திரண்ட அழகிய [illegible] [illegible] நம நாட்டுக அப்போ மறுபடி [illegible] உடன்றானோ? என [illegible] [illegible]

—காவிரிப்பூம் பட்டினத்துச் செங்கண்ணனார்

272 - குறிஞ்சி

[இரவுக்குறி வந்த தலைமகனைச் சிறைப் புறத்தானாகத் தலைமகட்குச் சொல்லுவா ளாய்த் தோழி சொல்லியது.]

மட தலையான் பெரிய புலியைக் கொன்ற பெரிய கையினை யுடைய யானையின் புலால் நாறும் புள்ளி பொருந்திய நெற்றியினைக் கழுவ ஊற்றும் அருவியையுடைய தெய்வத் தினையுடைய நெடிய மலையினது குகைகளிலுள்ள அரிய இருளைப் போக்கும் படிபோல் விளங்கும் வேல்தான் செல்லும் வழியினைக் காட்ட நம் தலைவன் தனியனாய் வந்து பனி அலைத்தலை வெருவுறும் அருவி நீர் ஒழுகும்

பககததினையுடைய அரிய இடததே செருங்கிய காட்டு மல்லிகை மலருடன் கூதாள மலரையும் சேரத் தொடுத்த கண்ணியின் நீங்காத மணத்தினை அசையும் காற்று வெளிப்படுத்தப் பொற்றைக்கல் பொருந்திய பினாக்கு கொடி படாநத தோட்டத்தையுடைய குடிசையாய நம மனையிடத்தே உடல் பூரிக்கும் மகிழ்ச்சியுடையராய்ப் புகும் அந்நிலையை நோக்கி நம அன்னை முருகனே என எண்ணிப் புகழுரை கூறி நல்ல நிறம் வாய்ந்த செந்தினையை நீரொடு தூவி முருகனைப் பரவி நின்றாள்; பொன்னிறங் கொண்டு மலர்ந்த வேங்கையின் அசையும் கிளை அழகுற்ற நீல நிறத்தைப் போன்ற நிறத்தையுடைய மயில் ஆடும் அழகிய மலை நாட்டையுடையராய நின்னொடு பொருந்திய நம் நட்பானது என்னை விளைக்குமோ? [illegible]

—மதுரை அறுவை வாணிகன் இளவேட்டனார்

273 - பாலை

[பிரிவினைக் கலங்கிய தலைமகளை ஆற்றிய [illegible] சொல்லியது.]

முடிவெண்டலை [illegible] ாம பொடு வருதலையுடைய வாடைக் [illegible] யினைக் கண்ணே தோன்றிய [illegible] வாரும் இளைய முலை தளர்ச்சியையுடைய [illegible] மாகிய இரண்டு அடியாய் நின்று [illegible] அம்ப லாய அழகிய கிளைகளைக் கொண்ட [illegible] தளிர் களைப் பரப்பிப் புலவரால் புகழப்பெற்ற [illegible] ாத பெரிய மரம் ஆகி, நிலத்தின் எல்லை [illegible] அலர் ஆகிய மலர்களைச் சொரியவும் வாரா ராயினார்;

ஆகலின், அங்ஙனம் வாராத நம் தலைவர் யாணர்வே வேகங் கொண்டெறிந்த கூதாளியின் மாலை [illegible] பசிய காலினையுடைய வெள்ளாங் குருகு [illegible] சிறகினை

வளைத்து வளம் பொருந்திய கடற பக்கத்தே நாட் காலை யில் பரவி அமர, பனிககாலத்தே நமது அழகினைக் கவர்ந்த பசலை நம்மை வருத்தவும அதனுல நாம் எய்தும துயரினை அறிந்திலரோ; அன்றி அறிந்திருப்பினும் நம் மனத்தின் மென்மைம போன்ற மென்மை தம் மனத்தே யின்மையின் அவர் நமது பெண்டிர் உலகத்து இயல்பினை யிலாந்திலரோ, யான் என்னென்ன உணர்வேன்?

—ஔவையார்

274 - முல்லை

[தலைமகன் தேர்ப்பாகற்குச் சொல்லியது.]

பாக! நறுமணமுடைய [illegible] மென்மை [illegible] [illegible] உடையுடைமோறும் [illegible] [illegible] கொளிராக் [illegible] [illegible] [illegible] குளிர்ந்த [illegible] கண்ணது.

—இடைக்காடனார்

275 - பாலை

[மகட் போக்கிய தாய் சொல்லியது.]

வளம் பொருந்திய மனைக்கு உரியளாகிய செல்வியே! உயர்ந்த சாடியில் நிறைய அடைவித்து பனங்குடையால் முகந்த நீரினைச் சொரிந்து வளர்த்த வயலைக் கொடி படர்ந்த பந்தரில் பந்தினை எறிந்து விளையாடி இளமைத் தன்மையை உடையையாய்த் திரியும் இயல்பினையுடையை ஆயினும்; நினது பெண்மை அறிவதாக [illegible] அவனைக் கடிந்து கூறுங்காலத்து, அவன் [illegible] கூறுதலினறிந்தனது [illegible] பொருந்துமாறு கூறி, நாளும் [illegible] எம இல்லில் எம்மோடுடன் [illegible] லானது காதலை [illegible], இருப்பை மரத்தின் [illegible] பூக்களைக் [illegible] களின் கூட்டம் கவர்ந்து [illegible] வழியையுடைய [illegible] ஏறுபோய [illegible] என மகள் அழகு பொருந்திய [illegible] தலையாகிய [illegible] கீழதாய, [illegible] பெற்றதாய வண்டலையும் [illegible] காண்பீரோ?

—[illegible]

276 - மருதம்

[தலைமகட்குப் பாங்காயினர் கேட்பப் பரத்தை சொல்லியது.]

நீண்ட பெரிய குளத்தில் [illegible] பட்ட வெள்ளிய வாளைப் போத்தினை உண்ணுதற்பொருட்டு நாரையானது தன் அடியின் ஒலியை அப்பொழுது உணர்ந்து கொள்ளலை அஞ்சி மெல்ல மெல்லக் காவல் பொருந்திய வீட்டில் புகும் கள்வனைப் போலத் தளர்ந்து நடக்கும

இடமாகிய துறை பொருந்திய ஊரனால் நமக்கு ஆம்பழி ஆவதாக இனி நமக்கு நாண் என்பதும் உளதாமோ?

அவ்வூரான எம் சேரிக்கண் பொருந்த வருவானாக; செவ்வரி பொருந்திய மையுண்ட கண்களையுடைய அவன் பெண்டிர்கள் காண அவன் மாலையையும் ஆடையையும் பிடித்துக்கொண்டு ஆரியர் பழக்கி வைத்துள்ள பெண் யானை தான் பழக்கிக் கொணர்ந்து தரும் பெரிய ஆண் யானை போலத் தோள் கட்டும் கயிறாக அதன்கண் கூந்தலால் கட்டி அவன் மார்பினைச் சிறை செய்யேனாயின் என் தாய் பாதுகாத்து வளர்த்த என் அழகு நலன், பொருளை விரும்பி இரந்தவர்களுக்கு ஈயாமல் சேர்த்து வைத்த பொருளைப் போல வெளிப்பட்டுப் பரவாதாகி வருந்தி ஒழிவதாக.

—பரணர்

277 - பாலை

[தலைமகன் பிரிவின்கண் தலைமகள் தோழிக்குப் பருவங் கண்டழிந்து சொல்லியது]

ஆய்மலர் வரிகளுடைய தோழியே! குளிர்ந்த கதிர்களையுடைய திங்கள் மண்டிலம் விளங்கிய அற ஒளி குன்றிப் பசலை மறையும் செயல் போல நமது நெற்றியின் ஒளி மாழ்கவும் நயவாராயினர் பொருள் ஈட்டுதற்காக நீங்குதல் இல்லாத ஊக்கத்துடன் தமது வேலை உற்ற துணையாகக் கொண்டு, கயிர் கடைவது போன்ற குரலையுடைய வேங்கையானது தன் பெண் புலியின் மிக்க பசியினைப் பொறுத்துச் சென்று, தடித்த மயிரினையும் சிறிய கண்ணினையும் உடைய பன்றி வருகிற வழியைப் பார்த்திருக்கும் காட்டின் பரப்பாகிய அகன்ற இடத்திலே பொந்தினையுடைய மரங்களின் புள்ளிபட்ட நிழலில் வழிச் செல்லும் புதியர் தளர்ந்தவராகித் தங்கியிருக்கும் ஈரம் அற்ற வெப்

பம பொருந்திய பாலையைக் கடந்து சென்ற நம் தலைவர் நம்பால மீண்டும வாராக் காலத்தே, தோழி! கூரிய வாயினை யும் தீ கொழுந்து விட்டெரிந்தாற் போலும் மயிரச் சிறகினை யும் உடைய மனையில உறையும் கோழியின் நறுங்கண்மை யுடைய சேவலின கழுத்தினைப் போல நெருங்கிப் பூக்க தீபபோலும் நிறம வாய்ந்த செம்முருக்கினது ஒள்ளிய கொத்திலுள்ள மதுவை ஆர உண்டு வண்டுகள் அழகிய தேன் சிதறுமாறு உகுதத இளவேனிற் காலம் வந்தது நமது காதலர் இன்னும் வந்திலர் என் செய்வோம்?

—[illegible]

278 - குறிஞ்சி

[இரவுக் குறிக்கண் [illegible]
மாந்த [illegible]]

தோழி! [illegible] டைய மேகங்கள் முரசு பொருந்திய [illegible] படைகலங்களையுடைய சே[illegible] பட்ட யானைகளை [illegible] னை [illegible] கொடு [illegible] தலை செய்து [illegible] பொருந்தி நடு இரவில் [illegible] துணை [illegible], [illegible] ஒளி [illegible] பெரிய [illegible] அறைய குறிய [illegible] துறையில் வாரா நிற்கும்; அதனால், வேனிலின் அழகிய நலம கெடும்படி நீங்குதலை [illegible] யுடைய மலையிலே தோய்ந்து வருகின்ற [illegible] யைப் போன்ற சிவந்த கண்கள் சிவக்க [illegible] வெறுக்கும துன்பம் நீங்க மூழ்குவேமோ?

—கபிலர்

279 - பாலை

[பொருள்வயிற் பிரிந்து போகாநின்ற தலைமகன் தன் னெஞ்சிற்குச் சொல்லியது.]

நெஞ்சே! பொன்னென விளங்கும் சுணங்கினைக் கொண்டு நெருங்கப் பணைத்த மெல்லிய முலைப்பரப்பினை விட்டு நீங்காத நெஞ்சினர், நண்பர்கள் இல்லாதொழிதலும் சுற்றத்தார் துன்பம் அடைதலும், மனம் பொருந்தாது உறைபவர் பெருமிதத்துடனிருத்தலும் கண்டு வைத்தும் ஒரே இடத்திலே மடிந்திருத்தலைப் பொறுத்திருப்பார்களென்று இரவிலும் பகலிலும் உள்ளத்திலே தோன்றித் தோன்றி மூண்ட கவலையாகிய மிக்க நோயினை முயற்சியாகிய மழையால் தணித்து, ஒவ்வொருநாளும் இக்காட்டின் கொடுநெறி நம்மை நீங்கப் பிரிந்திருப்போம் ஆக, விளரி என்னும் பண்ணமைந்து இனிமை பொருந்திய சிறிய யாழின் இசை போலக் கரும்புகையுடைய கொம்புகளிலிருந்து மலர்ந்த வண்டின் குயிலின் ஒலியுடன் கூடிப் பொருந்திய துயிலை ஒழிப்பதற்கு நினைந்து தெளிந்து வரும் காலையும், நம்மையே தனக்குப் பற்றுக்கோடாக உடையவளும் மாண்புற்ற அன்னப் பெடை போலும் அழகிய நடையால் மெல்லென நடந்து செல்லும் ஒருத்தியாகிய நம்மை அணையும் கரிய நெடிய கூந்தலையுடைய மாமை நிறத்தினளாய நம் தலைவி துன்பத்தால் வருந்தி எத்தன்மையள் ஆவளோ?

—இருங்கோன் ஒல்லையான் செங்கண்ணனார்

280 - நெய்தல்

[தலைமகளைக் களவொழுக்கின் நீங்கும் தலைமகன் தன் னெஞ்சிற்குச் சொல்லியது. அல்லகுறிப்பட்டுப் போகாநின்றவன் சொல்லியதுமாம்.]

நெஞ்சே! பொற்பூக்களை நெருங்கவிருந்தாற் போன்ற ஒளி பொருந்திய கொத்துக்களையுடைய செருந்தியின் பல மலர்களைச் சூடிய அழகு பொருந்திய கூந்தலையுடையாளாகிக் கடற்கரையில் ஞெண்டினை ஓட்டி விளையாடி இளைப்பாறியிருந்த தலைவி நிறைந்த பொருளையும் அணிகலன்களையும் நிறையக் கொடுப்பினும் பெறுதற்கு அரியள்; ஆதலால், விரிந்த கடலில் பூந்துகளைக் கொண்டு வண்டுகள் ஒலிக்கும் அகன்ற கரையிடத்து அலைகளைப் பகுத்துக் கொள்ளும் சோலையினையுடைய [illegible] பெரிய துறையினையுடைய நெய்தல் தலைவன் [illegible] தந்தை, நமக்கு, நாம் தங்கும் [illegible] நீங்கி அவனுடன் கூடி உப்புச் செறுவிடம் [illegible] பொழிலுடன் திரிந்து வருந்தியும் பெரிய கடலின் [illegible] சென்றும் அவன் பெயரையும் [illegible] இருபடின் அறமாதலை உணர்ந்து [illegible]?

— [illegible] அம்மூவனார்

281 - பாலை

[தலைமகன் பிரிவின்கண் வேறுபட்ட தலைமகளது வேறுபாடு கண்டு ஆற்றாளாகிய தோழிக்குத் தலைமகள் சொல்லியது.]

தோழி! நாள் தோறும் வரின் கண்ணே இருந்து நமக்கு அச்சம் இன்றாகக் கூறிய சொல் பழுதுபடுமெனவும் அஞ்சாமல் நடக்கும் தன்மை வாய்ந்த பெருமை பொருந்திய மயில் கழித்த தோகையை நீண்ட வாரினால் வலிய வில்லில் வைத்துக் கட்டி அந்த வலிய வில்லின் கொடிய நாணின் விளிம்பிற் பொருந்திய கூர்மையுந் தன்மையுடைய மிக்க ஒலி ஒலிக்கும் [illegible] செவ்வு பொருந்திய கடிய அம்புகளையுடைய [illegible] வடுகர் தமக்கு முன்னே தலைமையாக [illegible] தென்திசை நாடுகளைக் கைப்பற்ற எண்ணிப் போந்த

வருகைக்குப் பெரிய மலையினைத் தமது ஆழி தடையின்றிச் செல்லப் போழ்ந்து வழியாக்கிய பாறைகளைக் கடந்து, பறை அறைந்தாற் போன்ற அலரினை நம்பால விடுத்து நம் தலைவர் போய்விட்டார்; நாம் இனிச் செயற்பாலதனை ஆராய்ந்து காண்பாயாக.

—மாமூலனார்

282 - குறிஞ்சி

[இரவுக் குறிக்கண் தலைமகன் சிறைப்புறமாகத் தோழி தலைமகட்குச் சொல்லுவாளாய்ச் சொல்லியது. தலைமகன் பிரிவின்கண் தோழிக்குத் தலைமகள் சொல்லியதுமாம்.]

தோழி! பெரிய மலையின் பக்கத்தே வேட்டைக்குச் சென்ற வலிய வில்லினையும் அம்பினையும் உடைய வேட்டுவன் தன்னுடன் போர் செய்து இறந்த யானையின் வெள்ளிய கொம்பினைக் கொண்டு நீர் விளங்கும் மலையில் சிறந்த பொன்னை அகழ்ந்து எடுப்போன் கவணினைப் பொருந்து விளங்குகின்ற திணணிய மணிகள் பொன்னுடன் மீட்போந்து விளங்க அவற்றை, வெள்ளிய யானைக் கொம்பு ஒடிதலால் உதிர்ந்த தெளிந்த நீர்மையுடைய ஆலங்கட்டியை ஒக்கும் முத்துக்களுடன் கூட்டி வெவ்வேறாகிய அம்மூன்று பண்டங்களையும் சந்தன மரம் காவு மரமாக அவற்றை ஒரு சேரக் காவிக் கொண்டு நறைக் கொடியாய்ந்த நாறு நல்ல வேங்கை மலரைத் தொடுத்த மாலையை உடையானாகிய அம் மலையினின்றும் இறங்கி வரும் நாட்டையுடைய நம் தலைவனுக்கு, நம் தந்தையும் நின்னைக் கொடுத்தலை ஏற்றுக்கொண்டான். அலர் கூறுவாரும் அவனொடு நின்னைச் சேர்த்தே கூறுவர், நம் தாயும் வளைந்த சாந்தினையுடைய இரண்டு நின் தோள்களைப் பாராட்டி நினக்கு உரியவன் அவனே என்று கூறுவள்,

நாமும் நம் மணத்திற்கு வரைந்த நாள் விரைந்து வருவதாக என்று நல்ல இறையினையுடைய மெல்லிய விரல்களைக் குவித்து மனையுறை தெய்வத்திற்கு பலி செலுத்துவோமாக.

—தொல் கபிலர்

283 - பாலை

[உடன் போக்கு வலித்த தோழி தலைமகற்குச் சொல்லியது.]

தலைவ! தலைவியின் நல்ல [illegible] தோளினைத் தடவி [illegible] அருமையுள்ள [illegible] மேற்கொண்ட [illegible] துணையுடைத் தரும [illegible] பல [illegible] களைத் துரந்து சிறிய [illegible] வந்த சிறிய [illegible] சேயமைவிடத்தே [illegible] வருந்தும் [illegible] ஒலிக்கும [illegible] சுரநெறியை செலவற்கு [illegible] கரிந்த மரங்கள் [illegible] தளிர்கள் அடிமுதல் [illegible] ஒழியவும் வானில் [illegible] யமைந்த மேகம் பரந்த துளியினைச் சொரிந்ததாக; புறாக்கள் குருத்தினைவிட்டு நீண்ட காட்டில் செங்கால் ஓட்டிய பஞ்சின் பிதிர் பரவியது போன்ற அம்பணப் பூக்கள் குளிர்ந்த நிலத்தே அழகுறுத்த செப்பமாக உதிர்ந்து [illegible]மை யுடையன ஆகுக.

—மதுரை மருதனிள நாகனார்

284 - முல்லை

[வினைமுற்றிய தலைமகன் தேர்ப்பாகற்குச் சொல்லியது. தன் னெஞ்சிற்குச் சொல்லி யதுமாம்.]

காமத்தால் நம்மைமக்காட்டினும் மிக்க மயக்கமுற்ற அழகிய மாமை நிறமுடைய நம தலைவி தங்கியிருக்கும் இனிய ஊரானது, நெல்லிக் காயைப் போன்ற குறிய விழி பொருந்திய கண்களையும கூரிய மயிரினையும உடைய குறிய முயல்கள் வளைந்து கிடக்கும வரகினது பருத்த குருத்தினைத் தின்று வளர்ந்த அழகிய செவியினவாகி காய் களைக் கொண்ட கொடிகளும புகுந்து கிடந்து இனிய துயிலினின்றும் எழுந்த தம துணையொடு போகி வீட்டு முற்றத்தேயுள்ள சிறிய சால்களிலுள்ள நீரைக் கண்டு பருகும முல்லை நிலத்து ஊர்கள் சூழ்ந்த குன்றின அடிகளிலுள்ள சிறிய ஊர்களிடத்தே தினையிலாகிய கள்ளினையுண்ட நாணினைத் தெறித்து விடுக்கும அம்பினை யுடைய மறவர்கள் வேகமாக இழுத்து நாண பூட்டிய வில்லினராய வேட்டையாடி முல்லை நிலத் தோட்டத்தே மானை அறுத்து உண்ணும அழகிய காட்டின் கண்ணது.

—இடைக் காடனூர்

285 - பாலை

தோழி! நம் காதலர் நாம் பிரிந்திருக்கப் பொருளீட் டச் செல்வார் என்று நாம் மிக்க துன்பத்தால் எப்பொழு தும் வருந்தும் ஆற்றாமையுடைய மனத்தின் துன்பம நீங்கிச் செய்மைக்கண் ஒழியுமாறு, ஊனை விரும்பும் பெண் நாயின் மிக்க பசியினைப் போக்குதற்குத் தன் கலையினைக் காட்டில் தேடும் இளைய பெண்மான் கதற ஆண்மானின் தொடையினைச் சிதைத்த செந்நாயின் ஆண் வெய்யிலை வெறுத்து மெலியும் வெப்பம் பொருந்தியனவும வரிகள்

பொருந்திய வேங்கைப் புலியின் தோலினைப் போன்ற ஆறலைப்போர் கலலை எடுதது எறிதலின் பல கிழிவுகளைக் கொண்ட உடையினையும் உலறிய குடையினையும் உடைய புதியராய வழிச் செலவார் உயர்ந்த மரத்தில் ஏறி உணவை ஏற்றுதலை விருமபி எழுந்த பருந்து வானில் அசையும செவவியை நோக்கியிருப்பனவுமாகிய காட்டு நெறிகளில, பெருத்த தோளினையும குவளை மலரைப் போனற மையுண்ட கண்களையும உடைய இவளும நம்முடன வருவாள் என்று கூறினர் ; ஆகையால் நாம பன்முறை முயஙகுதறகு நீ வருவாயாக.

—காவிரிப்பூம் பட்டினத்துக் காரிக் கண்ணனார்

286 - மருதம்

[வரைந்து எய்யாது அவலித்து ஒழுகுந் தலைமகனை தலைமகளை ஆற்றுவித்துக் கொண்டிருத்தல் வேண்டும் என்று தோழியைக் கைப்பற்றியது. தன்னைத் தொட்டுச் சூளுறு வானுக்கு கருதித் தோழி சொல்லியது.]

மெல்லிய கரும்பாலாகிய உலக்கையால் கொடி போனற நுண்ணிய இடை அங்கும் இங்கும் அசைய மீனின் முட்டை போன்ற வெள்ளிய மணலைக் குவித்துக் காஞ்சி மரத்தின நிழலில் தம குடியின் பெருமைகளைப் பாடி ஊரிலுள்ள இளைய பெண்கள் குற்றுங்கால் இரால் மீனைத் தின்ற சிறிய சிரற் பறவை மருத மரத்தின் தாழ்ந்த கிளையிற் சென்று துயிலும் குளிர்ந்த துறையையுடைய ஊரனே!

அறனல்லவற்றை என்றும் விரும்பாத உள்ளம் ஒரோவழி மயங்கி விரும்புமாயினும், கேட்ட கேள்விகள் அங்குசமாக உள்ளமாகிய யானையை மீட்டு இல்லறமும் பொருளும் வழுவாகையை ஆய்ந்து தனது தகுதியுடைமையாய

உணர்ந்து அதன் பின்னரே தான் கருதியதை முடித்தல் உளதாகும் பெரியோர் ஒழுக்கங்கள் அத்தன்மையவாம்; அதனால் அரியன செய்யும் பெரியோர் செயல்களை ஆராயுமிடத்து நும்மைப் போன்ற பெரியோரிடத்தும் இத்தகையன பொய்யொடு கூடிய கூற்றுக்கள் தோன்றின் இவ்வுலகின்கண் மெய் எங்கு உளதாகும்?

—ஓரம் போகியார்

287 - பாலை

[பிரிந்து போகா நின்ற தலைமகன் இடைச்சுரத்து நின்று தன் னெஞ்சிற்குச் சொல்லியது.]

ஆண்மரை உராய்ந்தமையால் அசையும் நிலையினைப் பொருந்திய கரிய அடி பொருந்திய காதினையுடைய சிறாரினுள்ளார் விடியற் காலத்தேயிடும் பலியை மறந்தமையால் வெளியாகிய இடத்தினையுடைய பலி பீடத்தையடுத்து மதில் போற் சூழ்ந்த பொரிகள் பொருந்திய அடியினையுடைய ஆலமரத்தின் ஒன்றாய்த் தனித்து நீண்ட விழுதினை மோதிய கோடைக்காற்றுத் துணையுடன் கூடியிருந்த புறாக்களை ஓட்டும் இடமாகிய மழை அற்ற அகன்ற இடத்தே திரண்ட காலினையுடைய அழகிய பிணையினை அதன் கலை முதுகிடத்தே நக்க அசையும் நிலையினையுடைய யாமரத்தின் உயர்ந்த கிளைகளாலாகிய சுருங்கிய வரிவரியாய நிழலில் தங்கினேமாய் நோக்க குறும்பாக வந்து வருத்தும் மாலையில் இந்தத் தொலையாத நீண்ட நெறியில் யாம் தனித்து வருந்துகின்றேம்; நம் தலைவி வளையலை அணிந்த முன்கையில் தொக்க விரலைக் குவித்து நம்மைக் காணலாம் விரதம் கொண்ட நெஞ்சத்துடன் பகல் நேரமே நமக்குத் துணையாக வருந்தியிருப்பாளோ இரங்கத்தக்காள்.

—குடவாயிற் கீரத்தனார்

288 - குறிஞ்சி

[பகற்குறிக்கண் தோழி செறிப்பு அறி வுறீஇ வரைவு கடாயது.]

தலைவ! நினது மலையின் சந்தனம் பூசப்பெற்ற அழகிய மார்பினையுடையையாய்ப் பக்க மலையிலுள்ள வேங்கை மரத்தின் மிக்க கிளைகளிலுள்ள புதிய பூக்களாலாய பிறவற்றின் மணத்துடன் மாறுபடும் அழகிய கண்ணியையுடையையாயத் தீயானது எரித்த கொல்லையின் கண் விளைந்த கதிர் வளைந்த தினைப்புனத்தே நினது துன்பத்தைக் கூறுதற்கு நாள்தோறும் வருவோய்! ஆறலைப்போர் பொருந்தி நெருங்கியிருக்கும் நீண்ட பெரிய குன்றின் குறுகிய நெறியில ஒலிக்கும் இடையிட்டு விளங்கும் அருவியானது அரிய மலையினின்று வந்து விழும இடமாகிய அச்சம தோன்றும சிறுதூறுகளிலிருக்கும மெலலிய தலையினையுடைய மந்தியின் வருத்தும பசியினை நீக்குமாறு அதன் குட்டியினது தந்தையாய கடுவன் பலாப்பழத்தின் சுளையினைத் தோண்டியும மிக்க துன்பம் வந்து பொருந்தும் நடுக்கம் மிக்க தெய்வமுடைய பக்க மலையில உள்ள கனவியர் உறையும் மாங்காடு என்னும் ஊரின் காவலை ஒத்தது, குற்றமறப் பூங்கொத்துக்களை உதிர்த்து அணிந்த கூந்தலையும் அழகிய இனிய சொற்களையும உடைய இவள் தந்தையின் காவலிடம்; அங்ஙனமாகவும் கனிகள் முதிர்ந்துள்ள இந்தப் பக்க மலையில் நாங்கள் தனிமையுற்றிருத்தலைக் காணுதலின் நீ எங்கள் அருமையுணராது எளிமை செய்தனை ஆகின்றாய்; நின் எண்ணம சிறப்புறுவதாக; சென்று வருவாயாக.

—விற்றூற்று மூதெயினனார்

289 - பாலை

[பிரிந்து போகா நின்ற தலைமகன் தன நெஞ்சிற்குச் சொல்லியது.]

விலலிற் கோத்த கணையால் வீழ்ந்திறந்த புதியர்களின் உடலை மூடிய உயாநத கறகுவியல்களில ஏறிப் படர்ந்த நெருங்கிய கொடியாகிய காட்டு மலலிகையின பூககள் உயாந்த நிலையினையுடைய நடுகல்லின் காலைப் பலிககுக் கூட்டப்பெறும பாலை நிலத்தே குறுககே செல லும் மரங் கள் உயாநத நெறியில் வநது பொருளீட்டும தொழிலில உறுதி கொண்டுள்ள நம்மிடத்தே எப்பொழுதும நினைந்து சுழலும உள்ளத்தால் வருநதுதல் அமையாது, மெத தென்ற பிணிப்புமிக்க கை நெகிழ்நது சிறிது விலகினும வருநதும் அழகிய மடப்பமுடைய நம் தலைவி நம் சேய மைககண் உறையும தனிமையால் நாள்தோறும முறை முறையாகக் கோடிட்டு வநத திண்ணிய சுவரினைப பார்த்து உடனுறையப் பெருமையை நினைநது கண்ணீர் நூலறறு உதிரும முத்துக்களைப போல முகிழ்த்த முலை மீது தெறித்து விழுக குறறமற அகன்ற படுத்தல அமைநத படுககையில அன்னததின் சிறகாலாய அணையினைச சோர்ந்து தஙகி மயககம கொண்டமையின வலியறற இருக்கையளாகிப் பலலி ஒலிககுமதொறுமதெய்வத்தை தொழுது நலல மொழியினைக கூறுவாயாக என அதனை வேண்டி மனம நடுஙகி அழகற்ற மாலைக் காலததொடு மாறுபடுவாளோ?

—*எயினந்தை மகன இளங்கீரனூர்*

290 - நெய்தல்

[இரவுக்குறிக்கண் தலைமகன் சிறைப்புறத் தானாகத் தோழிக்குச் சொல்லுவாளாயத் தலைமகள் சொலலியது.]

தோழி! சேற்றினையுடைய வயலின்கண் காலை நேரத் தில் வேட்டைக்குச் சென்ற கொழுமீனுகிய உணவினை யும் புற்கென்ற தலையினையும் உடைய சிறுவர் இட்ட நுண்ணிய கயிற்றாலாகிய வலையில் சேவல் அகப்பட்டதாக

அக்கொக்கின் பசிய காலினையுடைய பேடை தனித்துத் தங்கியிருக்கும் காலத்தே இரையினைத் தின்றது துன்பம் அடையும் தன் குஞ்சினைத் தழுவிப் பனைமரத்தின்கண் விரைவாக அன்பு தோன்ற ஒலித்திருக்கும் பழைய குடிகளைக் கொண்ட கடற்கரையையுடைய நம தலைவன், உப்பங் கழியைச் சார்ந்த புன்னையின் பூக்களையுடைய சோலையில் அன்பு நீங்காத நெஞ்சமுடன் தனியனாகி வந்து நம்மைக் கலத்தற்கு முன்னம் என் கண்கள், வெள்ளிய தந்தத்தினையுடைய யானையையும் போர் வெற்றியினையும் உடைய குட்டுவனது தொண்டியின் துறை முற்றத்தே உள்ள நெய்தற் பூவினைப் போன்ற நிறம் நீங்கிப் பொன் போலும் நிறத்தைக் கொண்டன இஃதென்னையோ?

—நக்கீரர்

291 - பாலை

[பொருள்வயிற் பிரிய நின்ற தலைமகனை இடைச் சுரத்துத் தன் னெஞ்சிற்குச் சொல்லியது.]

நெஞ்சே! மலர் போன்று மணம் கமழும் கரிய பலவாய கூந்தலையும், அழகிய குளிர்ந்த கண்மணியினையும் உடைய நம காதலியின் மெலலிய இறையினையுடைய பருத்த தோளின்கண் விளங்கும் சிறப்புப் பொருந்திய அழகினை, மேகம பெயலாய வளத்தினைத் தராமையால் காடுகள் காய்ந்து இலைகளில்லாதனவாக ஏறுகளையுடைய ஆயமாகிய ஆனிரைகள் பலவற்றையும் ஒருங்கே பருகுத்தக் குளங்கள் நீரற வற்றிய கோடையால் வளம் ஒழியப் பெரிய மலை உயர்ந்த பக்கத்தில் விளங்கு வரிகளையுடைய புலியுடன் சினம் மிக்குப் போர் செய்து செருக்குடன் வலிய யானை நடந்த இடங்களில் பெரிய பரற்கற்கள் சிறிய பலவாய மின்மினிப் பூச்சிகளைப் போல எவ்விடத்தும் நிறைந்து ஒளிவிடும் செலலத் தொலையாத நீண்ட

இடத்தே பருந்து பயந்தோடப் பூங்கொத்துக்களில பூந்துகளை உணணும் வண்டுகள் ஒலிக்கும இசையைப் போல விரைந்து செல்வதாய் ஒலிக்கும அம்பினையுடையவரும் கண்டார்க்கு அச்சம் தோனறுத தழைகக்கண்ணி சூடிய தலையினையுடையவரும் ஆகிய ஆறலைப்போா கவர்த்த நெறிகளில் அரிய பொருள்களைப் பறித்துக் கோடலின வாணிகச சாத்தர் சிறிதும் நெறியிடையே இயங்குதல அற்றதும் உயர்நத மலையுச்சிகளையடுத்த நெறிகளிடத்த வாய நெல்லியின் திரண்ட காயகள் உதிாநது பரநது கிடக்கும் காட்டில், தவிாதல் இனறிய புளளிகளையுடைய அழகிய பிணைமான் உண்ண நினைந்து அறறு விழும கொம்பினை ஒழித்த தலையில தோன்றுவனவும் தோலாற பொதியப் பெறுவனவும் ஆகிய பின்னாத தோன்றும் கொம்புகளாகிய இளைய கொமபுகள் அதிாநதிட ஆணமானகள கூவி அழைககும இடமாய அரிய சுரநெறியைக கடநது வாநது நினைததனை.

—பாலை பாடிய பெருஙகடுஙகோ

292 - குறிஞ்சி

[*வெறியச்சுறீஇத தலைமகள் தோழிக்குச் சொல்லியது.*]

தோழி! ஒளி விளங் நம வளை நெகிழ்ற்கு ஏதுவாய்த் துன்பத்தினைக கண்டு நமது அனனையும அது பிறிதொனறு ஆயமெனன உணர்ந்து பொருளைச் சொரிந்து மனம் சுழலாநிற்கும்; மெல்லிய தளிராய தழையுணவைத தினனும் தாய் மூலையினைப் பெருதொழியும ஆட்டுக குட்டியினைப் பலிக்காகக் கொல்லுதலை விருமபி வெறியாடலைச் செயயும யாதும் ஆயையில்லாத வேலன் மாலை தன மார்பிலே அசைந்திட வெறி ஆடுவானாயின் அதனையும நாணுநிற்பேன்; இரவில மேய்வதற்காக வேற்றுப் புலம செல்லும் யானையின் கால் ஊன்றி நடக்கும் வலிய நடையைக் கூர்த்து அறிந்து நள்ளிரவில் மலையிடத்தே பரண்மீதுளள

வலிய கையையுடைய வேட்டுவன் மிக்க வேகத்தினை யுடைய கவணால் எறிந்த சிறுகல் இறகினைப் பொருந்திய அம்பென விரைந்து சென்று பக்க மலையிலுள்ள வேங்கை மரத்தின் விரிந்த பூங் கொத்துக்களைச் சிதறித் தேனை அழித்து பலாப் பழத்தினுள் தங்கிவிடும் மலை நாட்டை யுடைய நம் தலைவன் நம்மை மணந்து கொள்ளா வழி; நாம் செய்வதனைக் கூறுவாயாக.

—கபிலர்

293 - பாலை

[பொருள் வயிற் பிரியக் கருதிய தலைமகன் குறிப்பறிந்து தலைமகள் தோழிக்குச் சொல்லியது. தலைமகனாற் பிரிவுணர்த்தப்பட்ட தோழி தலைமகட்குச் சொல்லியதூஉமாம்.]

தோழி! நமது காதலர் இலைகளை உதிர்த்து வற்றிய வேலமரத்தில் வலை கட்டியதைப் போலச் சிலம்பி நூல் பலவும் ஒருங்கே சூழ்ந்த நிலம் பாழ்பட்ட இடங்களை யுடைய ஆடை ஆய்ந்து நெய்யுங்கால் பாவானது விரிந்தது போல வெய்யில் விளங்கி அசையும் மிக்க வெப்பத்தையுடைய காட்டிடத்தே குயிலின் கண்ணைப் போன்ற காய் முற்றி அழகிய பொற்காசு போன்ற பெருமை பொருந்திய நிறத்தினையுடைய பெரிய கனி உகாவின் மெல்லிய கிளைகளினின்றும் உதிர்ந்து ஒழியும் வேனிலால் வெப்பம் மிக்க சுரத்தில் தனித்து நம் காதலர் செல்லுவார் என்று ஊரார் கூறுகின்றனர்; மற்றும் அவரே, இரக்கம் இல்லாத கோவலர் தாயைப் பிரித்துக் கட்டிய நெஞ்சத்து அதனை விரும்பிய கன்று போல நாம் மிக நொந்து இன்னுதவற்றை மொழிந்திருக்கின்றோம் என்று நம்மைப் புறங் கூறுகின்றனர்; அவர் இங்ஙனம் மயங்கியது என்ன காரணமோ?

—காவன் முல்லைப் பூதனார்

294 - முல்லை

[பருவ வரவின்கண் வற்புறுக்குந் தோழிக்குத் தலைமகள் சொல்லியது]

தோழி! இருண்ட மேகமானது வானில் அதிர்ந்து முழங்கிக் குளிர்ந்தலாய பெயதலைச் செய்து கழிந்த பின்பு புகையைப் போலப் புள்ளியாய நுண்ணிய பனித்துளிகள் பூக்களின் உள்ளே நிறையவும் தம் காதலரைப் பிரிந்துள்ள செயலற்ற மகளிரது நீர் ஒழுகும் கண்களைப் போன்று காக்கணம் பூ மலரவும், பஞ்சு போன்ற தலையினையுடைய பூவினையுடையதும் புதர்களிற் படர்வதுமான ஈங்கையது நெய்யிற்றோய்த் தெடுத்தாற் போன்ற நீரால் நனைந்த அழகிய தளிர்கள் இருபிளவாகிய ஈரல் போல ஈரமுடையனவாய் அசைந்திட, அவரையின் அழகிய பூக்கள் எங்கும் செறிய அகன்ற வயலிடத்தே கதிர்கள் நீண்டு காய்த்த நெல் கண்ணிற்கு இனிமையுறத் தலை வளைந்திட வண்டுகள் கிளைகளில் அசையா திருக்கும் முன்பனிக் காலத்து நள்ளிரவில் சினமிக்க அரசனது பாசறைக் கண்ணே நெடிது மேவி நமது துன்பினை அறியாத அறன் இல்லாத தலைவர் நமது இத்துயர் நிலையினை நீக்கி வருவாரோ என்று எண்ணி அமையாது வீசும் வாடைக் காற்றால் எனது தனிமையை யான் பொறேனாகினேன்.

—கழார்க் கீரன் எயிற்றியார்

295 - பாலை

[பிரிவிடை வேறுபட்ட தலைமகட்குத் தோழி சொல்லியது.]

பீலி மலரின் குளிர்ந்த இதழைப் போன்ற குளிர்ந்த கண்ணினையும் மணம் நாறும் கூந்தலையும் உடைய மடந்தையே! கடல் நீரால் விளைந்த உப்புவாணிகரது கூட்டம், நிலங்கள் நீர் இல்லையாகி ஆழ்ந்த சுனைகள் வறறவும் மலை

யிலே மரககிளைகள எரியவும ஞாயிற்றின கடிய கதிர் தெறுதலால வெமமை மிக்க மூஙகில்கள் நெரிக்கும அகனற இடமாகிய, வேஙகைப் புலியினை வென்ற அசசம் பருதத கையினையுடைய மலை போன்ற யானை வருநதி மதம வாடி நிலாபபோலும் வெண்மை நிறத்தையுடைய கொமபிலே பெரிய கையை அணைத்துககொண்டு பல மரஙகளையுடைய ஒரு பககத்தே தன் பிடியொடு தங்கிக் கிடககும கறகள பொருநதிய நெறிகளையுடைய காட்டினைக கடநது, உப்புப் பொறையினை ஈாததுு வருந்திய எருதுகள் இளைப்பாறத தங்கி, வன்னிலத்தை இடித்து விரிநத இடததிலே தோணடின அகன்ற வாயினையுடைய கிணறு அநத வழியே செல்லும புதியர்கள் தளர்ச்சி நீங்க ஊறும இடமாகிய புல்லி என்பானது வேஙகட மலையைச் சாாநத செலலறகரியக காடடினைக கடந்து, வலிய விலலில தொடுததல அமைநத அமபுகளின் செறிவினை யுடைய வடுகர் களனினையுண்ட மகிழ்ச்சியினையுடைய ராயச செருககு மிக்கு ஆரவாரிக்கும் வேற்று மொழி வழங்கும தேயததைதக கடநது சென்றனராயினும் நினது அழகு நிலைபெற்ற பெரிய மெல்லிய தோளின் குற்றமற்ற சிறநத நலததினை வந்து தநதருள்வார்.

—மாமூலனூர்

296 - மருதம்

[வாயில வேணடிச் சென்ற தலைமகற்கு
வாயின மறுக்கும் தோழி சொல்லியது.]

தலைவ! மாலை போன்ற கொத்துக்களையுடைய குறிய அடியினையுடைய காஞ்சி மரத்தின் மலர்களை அணிந்த கூந்தலினையும செவ்வரி பரநத மதர்த்த குளிர்ந்த கண்ணினையும் உடைய மாமை நிறம் பொருந்திய பரத்தையுடன், நேற்றும் மணம் கமழும் பொழிலில் துயின்று இன்றும் அவளுடன் வையை நீர்ப் பெருக்கில் விளையாடி ஈரம் புலராத மார்பினையுடையையாய் என்பால் வந்து

நின்று எமக்கு மறைத்தல இயலுமோ? அச்செயல இயலா தனறே, கடல நீரப பரபபில பல மீனகளையும பிடிப்போா அவற்றுடன் சேரக கொணட சிபபிகளை பனனுடையால் அரிககப்பெறும மகிழச்சி தரும் களளின விலையாகச சோக கும கொறறகைத தலைவனுகிய வெறறியைத தரும வேலை யும, பெரிய யானையினையும நெடிய தேரினையும உடைய பாண்டியன் நெடுஞசெழியன மதுரைககண வெற்றிக களிப்பால் ஆடியதனுல எழுநத ஆரவாரம போல பலா வாயாலும் கூறப்பட்டு அலராகின றது.

—மதுரைப பேராலவாயார்

297 - பாலை

[பொருள வயிற பேர்கின்ற தலைமகன
தன் னெஞசிறகுச சொலலியது.]

நெஞசே! பொலிவற்ற தாடியும் வனகணமையு முடைய மறவாகள் அமபு தேயததலால் பகக மெலிநத அச்சம மிகக நடுகலலில பெயரும பெருமையும விரியத் தோனறுமாறு பொறிதத எழுததுககளை ஒருங்கு சோதது நோககுதல் மாட்டாராயத தளாசசியுடன் வழிச செலலும் புதியா அதனை விடுதது நீஙகும தெய்வம குடியிருககப் பெற்ற ஓமை மரஙகளையுடைய காலுள்ள முளவேலி யினையுடைய புலால் நாறும முற்றததே ஓவியதது எழுதினுற போன்ற மெலிநது நீண்ட பூனையின பூளைப் பூவினைப் போன்ற மயிரினையுடைய குட்டிகள் திஙகளைச் சூழ்நதுள்ள விண்மீன் போலத் தம தாயின் பின சூழ்ந் திருக்கும சீறூரிலுளள மறவர்களது ஏறு கோட்பறை யொலிக்கு ஆண பருநது தனது சிறகினை எழுபபிப் பறந் தேகும் அச்சம வரும் காட்டிற்கு நமமுடன வருவேன் என்று கூறிய நம் தலைவியின் மகிழ்ச்சியைத தரும் மடப்பம் வாய்ந்த நோக்கம், இரவிலும் மாலைககாலததும் அமையாத வருத்தத்துடன் மிக்க துயரத்தாற கலங்க

நம்மை நினைதலாலாகும் துன்பம் அளவு கடந்தவின் நம்பால் என்ன தீங்கு நிகழுமோ?

—மதுரை மருதனிள நாகனார்

298 - குறிஞ்சி

[இரவுக் குறிக்கண் தலைமகற்குத் தலை மகள் சொல்லியது]

உலகிற்குப் பயன் மிக்க செல்வத்தினைத் தரும் பல கதிர்களையுடைய ஞாயிறு விளங்கும் தொழில்களை அவ் வுலகிற்குத் தருமாறு வலமாக எழுந்து விளக்குமுற்றுப் பெரிய கடலில் தோன்றினாற் போல நீலமணியினைப் போன்ற மாலைக் காலத்தே மலர்ந்துள்ள வேங்கை மரத் தின் ஒளிபொருந்திய தளிர்கள் விளங்கும் தழைத்தல் பொருந்திய பெரிய கிளையிலுள்ள தண்ணிய துளிகளை அசைந்துவரும் காற்று மெல்லெனத் தடவி உதிர்க்கும் நாடனே!

தன் பகையினைக் கொன்று தன் கோபத்தினைப் போக் கிக் கொள்ளாமலும், அன்றி அதனை வென்றோட்டி மாறு பாட்டினை மெலிவிக்காமலும் பெரிய பெண் யானையின் கூட்டமாகிய இனத்துடன் கலவாமலும் மதத்தால் செருக்குற்று வளமிக்க மலையிடத்ததாய பெரிய களிறு இயங்கும் பெரிய காட்டு நெறியில் அரிய இருள் நீங்க வெள்ளிய வேலைக் கையிற் கொண்டு தாழ்ந்த பூமாலைக் கண் ஊதும் வண்டினை ஓட்டி நடு நாளாகிய இரவில் இங்கு நீ வந்த வருகையினும், மழை போன்ற கள்ளையும் விரையும் தேரினையும் உடைய எம் தந்தையின் காவலை யுடைய பெரிய மனையின்கண் எம்மைப் பாதுகாத்து அகலாது இருக்கும் எம்தாய் அறிந்திடலை அஞ்சி நடு இரவில் மறைத்தல் பொருந்திய மனத்தினொடு எனது காமத்தினைச் சொல்லாது, யான் நீ வந்திலை என்னும் கொடுமையினை மெல்லெனக் கூற அங்கு என் கருத்தினை உணர்ந்து தோழி! வருந்தாதே நம்மைத் துறந்த நம்

தலைவர் காலம் கடத்தாமல் விரைந்து வருவர் எனக் கூறி இரவில உசாத் துணையாதற்குத் துயிலாது என்னுடன் கூடியிருந்த என தோழியாய இவள் மகிழ்நததது எனககு இனியதாக வுள்ளது.

—மதுரைப் பணட வாணிகன் இளந்தேவனா

299 - பாலை

[இடைச்சுரத்துப்போகாநின்ற தலைமகன
தன் நெஞ்சிற்குச சொல்லியது.]

பொருளீட்டும் பொருட்டுப் பிரிந்து வந்த உள்ளமே! பண்டுதொட்டுப் பகலும் இரவும நினைக்கப்பட்ட நம பதியை மறந்து தங்குதலை மாட்டுவேமாயினும, காமபு ஒழிநத தேக்கின் இலைகள நீண்ட கூப்பிட்டினைச் செயயும் பருந்தின் வட்டம எழுந்தது போன்று விசும்பு இடம் மறையப் பரவிப பலவும ஒருஙகே சோநது அகன்ற பாலையிடத்தே செல்லுவோரின் சுவடு அறியாது அறிவு மயங்கும்படி பராநது கவாதத நெறிகளை யெல்லாம மறைதது விடும் அகனற காட்டு நெறியில் பொருளீட்டும வினைக்கண செலலுதலை அவளுககு உரைத்தேனாக, இரவு புலரும காலத்து மதியினைப போலத தனிமையுறும துனபத தோடு புதிய அழகினை மெலல இழநத நலம பொருநதிய அழகிய முகததைக் கவிழததுக கால விரலால் நிலததைக கிளைத்து நீருடன் கூடிய ஈரம் வாய்நத இதழினையுடைய குளிர்ந்தகண் சொரிகின்ற தெளிந்த நீர் மார்பின்கண் துளித்து விழக் கால் ஓரிடத்தில் நிற்றல் ஆற்றாதாக மிகக துன்பத்தால் கலக்க முற்றுக் கருமணலைப் போன்ற விரிநத கூந்தலில் மறைந்து நாவானது நடுக்கமுற்ற திருந்தாத சொற்களால் நுமது போக்கானது கூறுபாடு மாட்சியுற்றுச் செப்பமுறுக என்று கூறி வெவ்விதாக உயிர்த்துக் துன்பத்தைத் தரும் வருத்தத்தால் அழிந்த மிக்க விரைவினையுறுவாளாய தலைவி மயக்குற்ற நிலையாய அதனை மறந்து தங்குதல் அரியதாக வுள்ளது.

—எயினந்தை மகனார் இளங்கீரனார்

300 - நெய்தல்

[பகற்குறி வந்து நீங்கும் தலைமகற்குத் தோழி சொல்லியது]

பெருமானே! காலையில் வலையினால் மீன்களை முகந்து கொண்ட மீன் பிடித்தலில் வல்ல பரதவர்கள், பின் பரியால் கொண்ட மிக்க மீனினையுடையராகி அவற்றை நுண்ணிய மணலிடத்தே புலரும்படி பெயர்வாராய் வருந்து மாறு சொரிந்த மீன்களைத் தின்னும் பறவைகளையுடைய அழகிய பெரிய கடற்றுறையின்கண் குளிர்ந்த சோலையிற் பகற் பொழுது சென்றதாக நின் ஊர்க்குச் செல்லத் தேரைப் பூட்டுமாறு ஏவி, இவளது நெடிய திரண்ட நெருங்கிய வளையினைத் திருத்த அணிவித்துச் சிதறிய கூந்தலைத் தடவி மடந்தையே நின் மனைக்கு நின் தோழியுடன் இப்போது செல்வாயாக என்று சொன்ன அளவிலே இவள் மிகவும் அழுது வருந்துகின்றாளாதலின் அதனை எண்ணுது அயலார் போலப் பிரிந்து செல்லின் விரைந்து இவள் வேறு நீங்கு அடையினும் அடைவாளென அஞ்சுகின்றேன்; அதனால், யான் கூறுவதனை நீ கேட்டருளுதல் செய்யின், நீயும் நின் இளையரும் வெகு தூரத்தினின்றும் வருவார் போலக் கிருதாயாய மிக்க ஆரவாரமுடைய அழகிய எமது சீறூரின்கண் வரின் எங்கள் மனையினர் எதிர் கொண்டழைத்து மெல்லென வினவிப் பொழுது மயங்கிவிட்டது நீர்த்துறையும் அலை பெருகி ஏறலின் சுறுக்களும் பகையாயின; இருண்டுவிட்டது தலைவ செல்லற்க எனக் குறையிரந்துவேண்ட அங்கு இன்பமுறத் தங்குதல் செய்து நின் ஏவலாளரும் குதிரையும் நீயும் இன்பம் எய்த எம் இல்லில் தங்கும் நல்ல விருந்தாக ஏற்றுப் பேணுதலைப் பொருந்துவோம்.

—உலோச்சனார்

முற்றும்.

சண்பகவடிவாம்பிகை அச்சகம்,
23, புளியந்தோப்பு ஐரோட், சென்னை-12.

திருக்குறள் எளியவுரை

ரூ 1-8-0

திருக்குறள் அரும்பதவுரை

ரூ 1-4-0

திருக்குறள் வசனம்

அறத்துப்பால் ரூ 1-4-0

திருக்குறள் நீதிக்கதைகள்

4 பாகம் ரூ 1-14-0